# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 363 கார்த்திகை 8ஆம் நாள் வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## ஓ.பி.எஸ். இ.பி.எஸ். தரப்புக்கு சின்னம்

சென்னை, நவ. 24
அ.தி.மு. கழகத்தின் இரட்டை இலைச் சின்னத்தை தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தரப்புக்கு வழங்கியது இந்தி » 25



## 10 கோடி ரூபா கஞ்சா நேற்று எரித்து அழிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் கைப்பற்றப்பட்ட சுமார் 10 கோடி ரூபா மதிப்புள்ள ஆயிரம் கிலோ கஞ்சா நேற்றுத் தீமூட்டி எரித்து அழிக்கப்பட்டது.
2016ஆம் ஆண்டுக்கு முன்னர் பிடிக்கப்பட்ட 18 வழக்குகளின் சான்றுப்பொருள்களான இந்தக் கஞ்சா நீதிமன்ற உத்தரவில் நீதிமன்றம் முன்பாக உள்ள ஓரிடத்தில் வைத்து எரிக்கப்பட்டது.
யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மேற்பார்வையில் இந்த நடவ » 25

நெருக்கடியான நேரங்களில் தோள்கொடுக்கவும் பின்னிற்காது

# அனைத்து வழிகளிலும் கொழும்புக்கு டில்லி உதவும்

ரணிலுக்கு உத்தரவாதம் வழங்கினார் மோடி

கொழும்பு, நவம்பர் 24
அரசியல், பொருளாதாரம், இராஜதந்திரம், தொழில்நுட்பம் என்று அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு இந்தியா முழு ஒத்துழைப்பை வழங்கும் என்றும், நெருக்கடியான தருணங்களில் » 25



## இன்று கூட்டம்

கொழும்பு, நவ. 24
உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடும் சூழல் எழுந்துள்ளமை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்புக்கு மேன்முறையீட்டு » 25

## புயல் வரும் ஆனா வராது!

யாழ், நவ. 24
தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகி வரும் புயலின் தாக்கத்தை இலங்கையிலும், தமிழ்நாட்டின் தெற்கு கரையோரப் பகுதிகளிலும் அடுத்த வாரம் உணரக்கூடும் என்று அமெரிக்க கால » 25

## அந்தரங்க இடத்தில் ஒளித்து கஞ்சா கடத்திய நபர் கைது

வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, நவ. 24
வவுனியாவில் நேற்று பொலிஸாரால் 4 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. அந்தரங்கப் பகுதியில் கஞ்சாவை மறைத்து வைத்துக் கடத்த முயன்ற ஒருவரையும் தாம் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரி » 25

## அமைச்சர் பைசர் முஸ்தபா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, நவ. 24
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படும் சூழ்நிலை எழுந்துள்ள நிலையில், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுக் கையளிக்கப்பட்டது.
மகிந்த அணியின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இந்தப் பிரேரணையை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஒப்படைத்தனர்.
அதில் கூறப்பட்டுள்ளதாவது:
உள்ளூராட்சி மன்ற விடயங்களுக்குப் » 25

## வெள்ளப் பாதிப்பு தடுப்பு குறித்து நேற்று ஆய்வு

யாழ். மாவட்டச் செயலகத்தில்

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ். குடாநாட்டில் சிறு மழைக்கே வெள்ள ம் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்படுவது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடப்பட்டது. மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் » 25

## வடக்கு மாகாண சபையில் உள்ளோர் மாமன்னர்களா?

மகிந்த அணிக்கு வந்த சந்தேகம்

கொழும்பு, நவ. 24
வடக்கு மாகாண சபை தன்னிச்சையாகச் செயற்படுகின்றது. அந்தச் சபையில் உள்ளவர்கள் மாமன்னர்களா என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ப உதயசாந்த கேள்வி எழுப்பினார். » 25

## ஐ.தே.கவும் தயார்!

கொழும்பு, நவ. 24
சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பைசருக்கு எதிராக ஏற்கனவே நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் தாமதப்படுத்தப்பட்டால் அமைச்சருக்கு எதிராகத் தாமும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவோம் என்று கூட்டு அரசின் பங்காளிக் » 25

## மற்றொரு முக்கிய 'ஆவா' கைது என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ.24
வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய முக்கிய நபர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். ஆவா குழுவைச் சேர்ந்த சின்னா என அழைக்கப்படும், ரவிகிருஷ்ணா (வயது-23) எனும் இளை » 25

## நீதி வேண்டும்!

வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்பு



விரிவு 2 ஆம் பக்கம்

## பாலியல் குற்றத்துக்காக 65 வயது முதியவருக்கு ஓராண்டு கடூழிய சிறை

யாழ்ப்பாணம், நவ. 24
சிறுமியைத் துர்நடத்தைக்கு உட்படுத்திய வயோதிபருக்கு ஓராண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது யாழ்.மேல் நீதிமன்றம்.
2013ஆம் ஆண்டு சிறுமி ஒருவரை துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என 65 வயதுடைய வயோதிபருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
அது தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் வயோதிபரை குற்றவாளியாகக் கண்ட மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் » 25

வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில்

## முஸ்லிம் ஒருவரையும் தேடுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் தேடப்பட்டு வருகிறார் என்கின்றனர் பொலிஸார்.
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆவா » 25

## கிழக்கில் இன்று தொடக்கம் கூட்டமைப்பு தீவிர பரப்புரை

புதிய அரசமைப்புக்கு ஆதரவு திரட்ட

கொழும்பு, நவ. 24
புதிய அரசமைப்புக்கு ஆதரவு திரட்டவும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வியூகங்களை வகுப்பதற்காகவும் கிழக்கு மாகாணத்தில் இன்று முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிர பரப்புரையை ஆரம்பிக்கின்றது.
கொழும்பிலிருந்து நேற்று திரு » 25


எளிமையான லீசிங்
DFCC ஈசி லீசிங்




▪ தனியார் கார், பேருந்து மற்றும் வணிக வாகனங்களுக்கான லீசிங் வசதி ▪ இயந்திரங்களுக்கான லீசிங் வசதி ▪ கவர்ச்சிகரமான வட்டி வீதம் ▪ வேகமான மற்றும் தனிப்பட்ட சேவை ▪ நாடளாவிய ரீதியிலான 139 சேவை மையங்கள்.

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## இது தகுமா?

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் பொலிஸார் தமது ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். வீதிகள் தோறும் பொலிஸார் நிலைநிறுத்தப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன.
எந்தவித வேறுபாடுகளும் இன்றி வீதியில் செல்வோர் மறிக்கப்பட்டு ஆவணங்கள் பரிசோதிக்கப்படுகின்றன.
நேற்று கல்வியங்காடு சந்தைக்கு அண்மையிலும் இவ்வாறான சோதனைகள் நடத்தப்பட்டன என்று தெரிவித்த மக்கள் அதன்போது பொலிஸார் நடந்துகொண்ட விதத்தால் அசௌகரியங்களை எதிர்கொண்டோம் என்றும் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் வந்தவர்களை மறித்து நிறுத்தி வைத்த பொலிஸார் ஐஸ்கிறீம் அருந்திக் கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் ஐஸ்கிறீம் அருந்தி முடிக்கும் வரை தாங்கள் காத்துக் கொண்டிருந்தோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற)



## சீன - இலங்கை ஒளிப்பட கண்காட்சி ஆரம்பம்

கொழும்பு, நவ.24
சீனா- இலங்கை சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சீன - இலங்கை ஒளிப்படக் கலைஞர்களின் ஒளிப்படக் கண்காட்சி கொழும்பு பல்கலைக்கழக அழகியற் பீடத்தில் ஆரம்பமானது
பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கண்காட்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்தார்.
நிகழ்வில் இலங்கைக்கான சீன தூதுவர் சீ லியன்சின் கலந்து கொண்டார். (ற-ரி2)





### வவுனியாச் சிறுமி மீதான கூட்டு வன்புணர்வு

# நீதி கோரி கவனவீர்ப்பு

வவுனியா, நவ.24
வவுனியாவில் கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்க வலியுறுத்தி நேற்று கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.
கணேசபுரம் பிள்ளையாளர் கோயில் முன்பாக ஒன்றிணைந்த மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், பொதுமக்களும் ஊர்வலமாகச் சென்று நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் மனுக் கையளித்தனர்.
பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும், தலைமறைவாகியுள்ள சந்தேகநபரைக் கைது செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.
"இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

**பின்னணி**

முச்சக்கரவண்டியில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 16 வயதுச் சிறுமி ஒருவர் தவறான முடிவெடுத்துத் தற்கொலைக்கு முயன்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கடந்த 15ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
வைத்தியசாலைக்குச்சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி தனது வீட்டுக்கு அருகில் உள்ள முதன்மைச் சாலையில் பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த சமயம் முச்சக்கரவண்டியில் வந்தவர்களால் கடத்தப்பட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. மதிய நேரம் மாணவி தனித்துச் சென்றதைப் பயன்படுத்தி அவரைக் கடத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது.
சம்பவம் தொடர்பில் அறிந்த உறவினர்கள் மறுநாள் வவுனியா பொலிஸில் முறையிட்டனர். அவர்கள் பொலிஸில் முறையிடச் சென்றிருந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயன்றிருக்கிறார். இதை அடுத்து உறவினர்களால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ற)

## மாடியில் இருந்து விழுந்தவர் படுகாயம்

ஹற்றன்,நவ.24
ஹற்றன் நகரப்பகுதியில் கட்டட நிர்மாண பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் தவறி கீழே விழுந்ததில் படுகாயம் அடைந்துள்ளார்.
நாவலப்பிட்டி, கெட்டபுல தோட்டத்தைச் சேர்ந்த 34 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.
மின்சாரம் தாக்கிய நிலையிலேயே 3ஆவது மாடியில் இருந்து அவர் தவறி விழுந்து படுகாயமடைந்தார் என்று ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
படுகாயமடைந்தவர் டிக்கோயா கிழங்கன் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ற-ரி2)

## சடலம் மீட்பு

திருகோணமலை, நவ.24
திருகோணமலை, கிண்ணியா கங்கை பாலத்துக்கு அருகில் வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.



வீடொன்றில் தனிமையில் வசித்த சந்தசிறி (வயது-50) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் குளிர்பான வர்த்தகம் செய்பவர் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் கிண்ணியா பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## தங்கம் கடத்தியவருக்குத் தண்டம்

கொழும்பு,நவ.24
இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தங்க கட்டிகளை கடத்த முற்பட்ட ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்
45 வயதுடைய இந்தியக் குடிமகன் ஒருவரே கட்டுநாயக்க பன்னாட்டுவிமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார் என்று சுங்கப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.
71 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவற்றின் பெறுமதி 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது.
தங்கக் கட்டிகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன என்றும் சந்தேக நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது என்றும் சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது. (ற-ரி2)



## கட்சி மாறிய ரவிகரனுக்கு சபையில் வாழ்த்து

யாழ்ப்பாணம், நவ. 24
ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து வெளியேறி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு, சக மாகாணசபை உறுப்பினர்கள் நேற்றுக் கைலாகு கொடுத்தனர்.
வடமாகாண சபையின் 110ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. காலை சபை அமர்வு ஆரம்பமாக முன்னர் சபையில் இருந்த ரவிகரனுக்கு சக ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். (5,37)

## தளபதிகள் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு,நவ.24
புதிய கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க மற்றும் வானூர்திப் படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.
வானூர்திப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கடற்படை தளபதி வானூர்திப்படையினரால் சிறப்பு மரியாதை அளித்து வரவேற்கப்பட்டார்.
புதிய கடற்படைத் தளபதிக்கு வானூர்திப்படைத் தளபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் எதிர்கால கடற்படை நடவடிக்கைகளுக்கு விமானப்படையின் ஒத்துழைப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (ற-ரி4)

## முகமூடி மர்ம நபர்களால் காலியில் நேற்றுப் பதற்றம்

முகமூடி அணிந்த மர்ம நபர்கள் இருவர் காலி, மிலிந்துவ பகுதியில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வீட்டினுள் நுழைந்து அச்சுறுத்திய சம்பவத்தால் அந்தப் பகுதியில் நேற்று இரவு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
காலி கிந்தோட்டையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் ஏற்பட்ட பதற்றம் தணிவதற்குள் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
வீட்டுக்குள் நுழைந்து வீட்டைத் தீயிட்டு கொளுத்தப்போவதாக முகமூடி அணிந்த நபர்கள் கூறினார் எனவும் அதனால் வீட்டார் கூச்சலிடவே அயலவர்களும் ஒன்றுகூட, அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர் எனவும் கூறப்படுகின்றது.
மர்ம நபர்கள் உண்மையாகவே வீட்டுக்குள் வந்த நோக்கம் தீயிட்டுக் கொளுத்தவா, அல்லது நிலவும் அச்ச சூழலை பயன்படுத்தி கொள்ளையடிக்கவா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5)

# தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்துவது அவசியம்

கொழும்பு.நவ.24
கொழும்பு மற்றும் நாட்டின் சில பகுதிகளிலும் மழையுடனான காலநிலை நிலவிவந்தாலும், நாட்டின் பல பிரதேசங்களில் வறட்சி நிலவுகின்றது. மக்கள் குடிதண்ணீரை சிக்கனமாகப்



பயன்படுத்துவது அவசியம்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
மழையுடன் கூடிய காலநிலை நிலவினாலும் நாட்டில் பல பகுதிகளில் வரட்சியான காலநிலை காணப்படுகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் குடிதண்ணீர் பிரச்சினைக்கு அனைவரும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.
மூன்று வருடத்துக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும் நீர்கட்டணத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய காலம் வந்துள்ளபோதும், மக்களின் நிலையை உணர்ந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. நீர் சுத்திகரிப்பு, வழங்கல் என்பவற்றுக்காக அதிக நிதியை அரசு செலவிடுகின்றது. செலவிடப்படும் நிதியில் நான்கில் ஒரு பங்கைக் கூட பொதுமக்களிடமிருந்து அறவிடவில்லை - என்றார். (ற-ரி4)



# ஆசிரிய மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.24
ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டனர்.
கோப்பாய், அட்டாளைச்சேனை, கொட்டகல ஆகிய இடங்களில் உள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் இந்தக் கவனவீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**கோப்பாய்**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்களால் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்துக்கு முன்பாகப் போராட்டம் இடம்பெற்றது.
அடிப்படைச் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தல், ஆசிரிய உதவியாளர்களை தரம் 3 II க்குள் உள்ளீர்த்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தை நடத்தினர்.
"உழைப்பை சுரண்டாதே, மன உளைச்சலுக்கு ஆளாக்காதே, எங்களது சேவைக்கு மதிப்பளி" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

**அட்டாளைச்சேனை**
அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஆசிரிய உதவியாளர்கள், கவனவீர்ப்புப் பேரணியொன்றை நேற்று நடத்தினர்.
ஆசிரிய உதவியாளர்களை, ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க வேண்டும் என்றும் தமக்கு வழங்கப்பட்டு வரும் சிறிய கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திப் பேரணி நடத்தப்பட்டது.
கலாசாலையில் பயின்று வரும் சுமார் 500க்கும் அதிகமான உதவி ஆசிரியர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு, கலாசாலை வளாகத்திலிருந்து அக்கரைப்பற்றுகல்முனை பிரதான வீதிவரை கவனவீர்ப்புப் பேரணியாகச் சென்றனர்.
"எங்களைப் போன்று, இவ்வாறான நியமனங்களை பெற்றுள்ள பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஆசிரிய உதவியாளர்களை, 3 II ஆசிரிய சேவைக்குள் அரசு ஈர்ப்பு செய்துள்ளபோதும் எங்களுக்கு மட்டும் சிறுதொகை கொடுப்பனவு வழங்கி, சேவையில் வைத்திருப்பதை நியாயப்படுத்த முடியாது" என பேரணியில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.
தமக்கு வழங்கப்பட்டு வரும் 10 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவைக் கொண்டு இன்றைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாதுள்ளது. மிகுந்த மன உளைச்சலுக்கும், குடும்ப சுமைக்கும் உள்ளாகியுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**கொட்டகல**
ஆசிரியர் உதவியாளர்களை நிரந்தரமாக்கக் கோரி நேற்றுக் காலை கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றிறை முன்னெடுத்தனர்.
ஆசிரிய கலாசாலை முன்னுள்ள ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
"உதவி ஆசிரியர்கள் தரம் உயர வேண்டும், பயிலுநர் ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்காதே, அமைச்சர்கள் நாட்டில் ஆசிரியர்கள் ரோட்டில், அரச ஊழியர் என்று சொல்கின்கிறீர் கூலியை ஏன் தர மறுக்கிறீர்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய வண்ணம், கறுப்பு பட்டி அணிந்து, கோசங்களை எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆசிரியர் நியமனங்களுடன் வழங்கப்பட்ட ஒரு சில ஆசிரிய உதவியாளர்கள் வர்த்தமானி அறிவித்தல் மாற்றப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் என்றும் தமக்கு மட்டும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த அவர்கள் இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
பல தடவைகள் அரசியல்வாதிகளால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும், இதுவரை அது நடைபெறாமை காரணமாகவே போராட்டத்தை தாம் முன்னெடுத்ததாகவும் தெரிவித்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் கலந்து கொண்டிருந்தார்.
(ற-ரி2)

## மட்டு. மாவட்டச் செயலராக உதயகுமார் பதவியேற்றார்

மட்டக்களப்பு, நவ.24
மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்ட எம். உதயகுமார் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு தாண்டவன்வெளி புனித காணிக்கை மாதா ஆலயத்துக்குச் சென்று மாவட்டச் செயலர் வழிபாடுகளை மேற்கொண்டதுடன் ஆசிகளையும் பெற்றார். மாவட்ட செயலகத்துக்கு சென்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவட்டச் செயலராகத் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.
நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய மேலதிக மாவட்டச் செயலர் சுதர்சினி சிறிகாந்த் மற்றும் உதவி மாவட்டச் செயலர் ஏ.நவேஸ்வரன், முதன்மைக் கணக்காளர் எஸ்.நேசராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், பிரதேச செயலர்கள், திணைக் களத்தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட பலரும் கலர் ந்து கொண்டனர்.
(ற-ரி5.46)



## வெள்ள இடருக்குள்ளான உறுப்பினருக்கு உதவிகள்



சாவகச்சேரி, நவ.24
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கு சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.
சங்கத்தில் பணியாற்றும் 211 அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் வ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தி.பிரதீபன் மற்றும் சங்கப் பொது முகாமையாளர் க.நாகசுபாசன் ஆகியோர் கலந்துகொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.
(ற-ரி5.9)

உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்

உதயன் DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

கொலைக் குற்றத்திற்காக

# புலிகள் தண்டனை வழங்கியோருக்கு மேல் நீதிமன்றம் மீண்டும் தண்டனை

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழீழ நீதிமன்றால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவருக்கு ஏழாண்டு கடூழிய சிறைத்தண்டனையும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவருக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு சிறைத்தண்டனையும் வழங்கி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித் துள்ளார்.

உடுப்பிட்டி பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 ஆம் திகதி துரைராஜாசிங்கம் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். படுகொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் இனம் கண்டு கைது செய்வதற்கு முன்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்கள் இருவரையும் கைது செய்து வன்னியில் தமிழீழ நீதிமன் றில் முற்படுத்தினார்கள்.

தமிழீழ நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, இருவரையும் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் ஒருவருக்கு சாவுத் தண்டனையும் மற்றவருக்கு ஆயுள் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்து இருந்தது.

போர் முடிவடைந்த பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்றினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் மீண்டும் ஊருக்குத் திரும்பிய நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மற்றைய நபர் தொடர்பில் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அவருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டதா இல்லையா என்பது தொடர்பில் பொலிஸாரால் கண்டறிய முடியவில்லை. பொலிஸார் தாம் கைது செய்த நபரை நீதிமன்றில் முற்படுத்தினர். மற்றைய நபர் இல்லாமலே வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து மன்றில் முன்னிலையான நபரை முதலாம் எதிரியாகவும் மற்றைய நபரை இரண்டாம் எதிரியாகவும் பெயர் குறிப்பிட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றபகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. 'வழக்கை அரச சட்டவாதி நாகரத்தினம் நிசாந்த் நெறிப்படுத்தினார்.

'இந்த வழக்கில் இரண்டாம் எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டு உள்ளவருக்கு விடுதலைப் புலிகளின் நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து இருந்தது. அவருக்கான சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டு உள்ளது என்பதை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் எண்பிக்கப்படவில்லை. குறித்த நபர் உயிருடன் இருந்தால் அவரை உடனடியாகக் கைது செய்யுமாறு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப் படுகின்றது.

இந்தக் கொலையானது திடிரென ஏற்பட்ட சண்டையில் ஏற்பட்டது என்பதை வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்கள் ஊடாக நிரூபிக்கப்பட்டு உள்ளமையினால், இதனை கைமோச கொலையாக மன்று காண்கிறது.

அதன் அடிப்படையில் இரண்டாம் எதிரிக்கு (தமிழீழ நீதி மன்றினால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர்) ஏழாண்டு கடூழிய சிறைத்தண்டனையும், 5ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப் படுகின்றது. அதனைக் கட்டத் தவறின், ஒரு மாத கால கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

முதலாம் எதிரிக்கு இரண்டாண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. அதனை ஐந்தாண்டுகளுக்கு ஒத்திவைக் கப்படுகின்றது' என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

(5,37)

# மகிந்த ஆட்சியில் இணைய சுதந்திரம் மீதான கட்டுப்பாடுகளை தகர்த்தெறிந்தது கூட்டு அரசு

*ஜி.சி.சி.எஸ். உச்சி மாநாட்டில் ரணில் பெருமிதம்*

இலங்கையில் கடந்த அரசின் (மகிந்த ஆட்சி) காலத்தில் இருந்த இணைய சுதந்திரத்துக்கு இருந்த கட்டுப்பாடுகளை நல்லாட்சி அரசு தகர்த்தெறிந்துள்ளது. இலங்கையில் இணையத்தளத்தைப் பயன்படுத்துவதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. நிலைபேண்தகு அபிவிருத்தியை அடைவதற்காக பன்னாடுகளுடன் கைகோர்த்து இணையதளப் பாதுகாப்பை அனைத்து நாடுகளும் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகிய ஜி.சி.சி.எஸ். உச்சி மாநாட்டில் தலைமை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் முன்னாள் அரசின் காலத்தில் இணைய சுதந்திரம் கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே காணப்பட்டது. ஆனால், 2015ஆம் ஆண்டு எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் இணையத் தளப் பாவனைக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்துவிட்டோம். உலகில், செய்திகளையும், தகவல்களையும் பரிமாற்றிக்கொள்ள தனிநபர் இணைய சுதந்திரம் கட்டாயம் காணப்பட வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம் முன்னேற்றகரமான ஏற்பாடுகளை செய்துள்ளார். பன்னாட்டுத் தலைவர்கள் தகவல் பரிமாற்றத்துக்கு அதியுச்ச பாதுகாப்புடன் கூடிய இணைய சுதந்திரம் காணப்படவேண்டும்.

தொழில்நுட்ப விருத்தியின் காரணமாக 2011ஆம் ஆண்டு அல்குவைதா இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பின்லேடன் இருக்கும் இடத்தை அமெரிக்காவால் கண்டுபிடிக்க முடிந்திருந்தது. நிலைபேண்தகு அபிவிருத்திக்கு இணைய உலகம் விரிவடைய வேண்டும். எனினும், இணையதள உலகம் தீவிரவாதம் மற்றும் சைபர் தாக்குதல்களால் கடும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகுகின்றது.

ஐ.நாவில் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள உலகில் அனைத்து நாடுகளும் கைகோர்த்து இணையப் பாதுகாப்புகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (5)

# பெண் சட்டத்தரணி மீது காவலர்கள் முறையீடு

*கடும் வார்த்தைகளால் நீதிமன்ற வளாகத்தில் வைத்துத் திட்டினார் என்கிறார்கள்*

யாழ்ப்பாணம் நவ 24

சட்டத்தரணி சர்மினி மீது சிறைச்சாலை அதிகாரிகள் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். ஆவா குழுவின் தலைவர்களில் ஒருவரான நிஷா விக்டரைத் தாம் வேண்டுமென்றே தப்பிக்க விட்டனர் எனத் தெரிவித்துத் தம்மைக் கடுமையான வார்த்தைகளால் அவர் திட்டினார் என்று அந்த முறைப்பாட்டில் சிறைக் காவலர்கள் தெரிவித்தனர்.

வாள்வெட்டுக் குழுக்களில் ஒன்றான ஆவா குழுவின் தலைவர்களில் ஒருவர் நிஷா விக்டர் எனப்படும் சக்திவேல்நாதன் நிசாந்தன் (வயது -22). கொக்குவிலில் பொலிஸார் இருவரை வெட்டிய வழக்கில் முக்கிய சந்தேகநபர். சில தினங்களுக்கு முன்னர் வழக்கு விசாரணைக்காக மல்லாகம் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டபோது அங்கிருந்து தப்பிச் சென்றார். தீவிர தேடுதலின் பின்னர் அன்றே அவர் மல்லாகத்தில் மறைவிடத்திலிருந்து கைது செய்யப்பட்டார்.

தப்பிச் சென்ற குற்றத்துக்காக அவருக்கு மல்லாகம் நீதிமன்று ஒன்றரை வருடம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது. சந்தேகநபர் சார்பில் பெண் சட்டத்தரணி சர்மினியே நீதிமன்றில் முற்பட்டு வந்தார். தனது கட்சிக்காரரைச் சிறைச்சாலைக் காவலர்கள் வேண்டுமென்றே தப்பிக்க விட்டார்கள் என்று நீதிமன்ற வளாகத்தில் வைத்து கடும் வார்த்தைகால் திட்டினார் எனத் தெரிவித்தே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

நீதிமன்றப் பதிவாளரை மிரட்டினார் என்ற வழக்கு ஒன்றும் இவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. (உ-8)





முகநூலில் தரவேற்றப்பட்ட இந்தப் படங்களுக்கு எதிராகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# முகநூல் செயற்பாட்டாளர் மீது பிரதேச செயலர் முறைப்பாடு

*சமூக ஆர்வலர்கள் கண்டனம்*

யாழ்ப்பாணம், நவ. 24

முகநூல் செயற்பாட்டாளர் தரவேற்றிய இரண்டு படங்களுக்கு எதிராக வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பரந்தாமன் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் முகநூலில் தரவேற்றியவரையும், அதனைப் பகிர்ந்த ஒருவரையும் பொலிஸார் நேற்று விசாரித்துள்ளதுடன், இன்றைய தினமும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

தனிமனித கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான இந்த நடவடிக்கை தொடர்பில் சமூக ஆர்வலர்கள் பலரும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

முகநூல் செயற்பாட்டாளர் ஒருவர் இரண்டு படங்களை கடந்த சில தினங்களுக்கு முன்னர் முகநூலில் தரவேற்றியிருந்தார். அது சமூகவலைத் தளங்களில் வேகமாகப் பகிரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தப் படங்கள் ஊடாக தமக்கு மரியாத்தைக் குறைவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், சமூகத்தில் தமது பிரதேச செயலகம் தொடர்பில் தவறான அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, பிரதேச செயலர் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பொலிஸார், இந்த வழக்கு கனதியற்றது என்றும் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதேச செயலரின் கருத்தை அறிந்து கொள்வதற்காக அவரது அலைபேசிக்கு நேற்றிரவு அழைப்பை ஏற்படுத்தியபோதும் பதலளிக்கவில்லை. (5)

# கல்வி அமைச்சரே இப்படியென்றால் மாணவர்கள் நிலை என்னவாகும்?

*கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் ஹரிசன்*

வடக்கு மாகாண கல்வி அமைச்சரே தேசியக் கொடியை அவமதித்தால் மாணவர்களின் நிலமை என்னவாகும். மாங்குளத்தில் விகாரைகள் அமைப்பதால் நல்லிணக்கத்துக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்று கருத வேண்டாம். வெள்ளவத்தையிலும் இந்து கோயில்கள் நிர்மாணிக்க முடியாது. எவரும் இனவாதத்துடன் செயற்படுவதற்கு இடமளிக்க மாட்டோம் என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கடுமையான வார்த்தைகளை சபையில் பிரயோகித்தார். வடக்கில் பௌத்த விகர்ரைகள் அமைக்கப்படுவதாகக் கூறியிருந்தார். இதன் காரணமாகவே தேசியக்கொடியை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ஏற்றவில்லை என்று கூறியிருந் தார்.

பௌத்த விகாரைகள் நிர்மாணித்தமைக்கும் தேசியக் கொடிக்கும் என்ன தொடர்பு உள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சரே தேசியக் கொடியை அவமதித்தால் மாணவர்களின் நிலமை என்னவாகும். பௌத்த விகாரை அமைப்பதுதான் பிரச்சினை என்றால் வெள்ளவத்தையில் இந்து கோயில்கள் நிர்மாணித்தமைக்கு சிங்களவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும்.

மாங்குளத்தில் விகாரை அமைப்பதை நல்லிணக்கத்துக்குப் பாதிப்பாகும் என்று கருத வேண்டாம். அப்படி என்றால் வெள்ளவத்தையிலும் இந்து கோவில் நிர்மாணிக்க முடியாது. எனவே நாட்டில் இனவாதத்தைத் தூண்டுவதற்கு, இடமளிக்க மாட்டோம்.

இந்த அரசே மாகாணங்களுக்கு சம அதிகாரங்களை வழங்கியுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவொரு அநீதியும் ஏற்படாத வகையில் செயற்பட்டு வருகின்றோம். இதனைத் தமிழ் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய கல்வி முறைமையை மாற்றி அமைக்க வேண்டும். தற்போது மாணவர்களை விடவும் பெற்றோர்களே வகுப்புக்குச் செல்கின்றனர். மாணவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் நன்கு புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். மாணவர்களுக்கு வகுப்பு நடத்துவதைப் போன்று மாணவர்களுக்கும் வகுப்புகளை நடத்த வேண்டும் - என்றார்.

(5,31)

# மலக்கழிவு சுத்திகரிப்பு பணிகள் சீரின்மையால் சிரமத்தை எதிர்கொள்ளும் தென்மராட்சி மக்கள்

## சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

சாவகச்சேரி நவம் 24
தென்மராட்சிப் பிரதேசத்துக்கென சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்ட மலக்கழிவு சுத்திகரிப்புக் கட்டடப் பணிகள் முழுமை செய்யப்படாத நிலையில் இயந்திரம் இன்னமும் தொழிற்படாததால் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சேவையைப் பூர்த்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இது தொடர்பில் தெரியவருவதாவது:
சுத்திகரிப்புக் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெறுவதால் சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்பட்டு வந்த மலக்கழிவு அகற்றும் வாகன சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பிரதேச மக்கள் பெருந்தொகைப்பணம் கொடுத்து தமது காணிகளுக்குள் மலக்கழிவுகளைப் புதைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதெனவும் நகரப் பகுதியில் வாழும் மக்கள் மலக்கழிவை வெளியேற்ற முடியாததால் உறவினர் நண்பர்கள் வீடுகளை நோக்கிச் செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி நகரசபையினருக்கு வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட மலக்கழிவு இயந்திரம் மூலம் பிரதேசத்தில் குறைந்த கட்டணத்தில் மலக்கழிவு அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததெனவும் கடந்த இரண்டு வருடங்களாக அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டதால் தற்போது பெய்து வரும் பெருமழையினால் தமது மலகூடங்களைப் பயன்படுத்த முடியவில்லையெனவும் அத்தியாவசிய நிலை கருதி தனியார் மூலம் மலக்கழிவை அப்புறப்படுத்த நகரசபையினால் அறவிடப்பட்ட தொகையை விட மூன்று மடங்கு பணம் வழங்க வேண்டியுள்ளதெனவும் பொதுமக்கள் தெரிவித்து சாவகச்சேரி நகரசபையினரால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகன சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.
விடயம் தொடர்பாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது. நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களின் சேவைக்காக மலக்கழிவு அகற்றும் பணிகள் இடம்பெற்று வந்தன எனவும் கடந்த 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு முன்பாக உள்ள அரச காணியில் 40 மில்லியன் ரூபா செலவில் மலக்கழிவு சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த 2016 நவம்பர் மாதம் கட்டடம் கையளிக்கப்படவேண்டிய நிலையில் இன்னமும் வேலைகள் முழுமை செய்யப்படாத நிலையில் உள்ளன.
கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சபையின் வாகனம் மூலம் மலக்கழிவுகள் ஏற்றும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இரண்டு வருட காலமாகியும் கட்டடவேலைகள் முழுமை செய்யப்படாததால் பணிகளைத் தொடரமுடியவில்லை. மழை பெய்த பின்னர் வரியிறுப்பாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ள போதிலும் எடுக்கப்படும் கழிவுகள் கொட்டுவதற்கான இடவசதியின்மையால் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை. இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிவித்துள்ளோம் எனவும் தெரிவித்தார். (எ. 9)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினரால் தென்மராட்சி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வடமராட்சி. நவ. 24
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினர் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் வரணிப் பகுதியில் உள்ள இரு பாடசாலைகளில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
வரணி வடக்கு அ.த.க.பாடசாலை மற்றும் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கே உதவிகள் வழங்கப்படவுள்ளன.
சபையினரால் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாசாலைகளில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வருடாந்தம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றதெனவும் இந்த வருடம் தொடக்கம் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## பொலித்தீன் பாவனைக்கு எதிராக யாழில் வேள்ட் விசன் செயற்படுகிறது

யாழ்ப்பாணம். நவ. 24
'பொலித்தீன் பாவனையில் இருந்து முற்றாக விடுபடுவோம்' எனும் தொனிப் பொருளில் வேள்ட் விசன் தன்னார்வத் தொண்டு நிறுவனம் முழுமையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படுகின்றது. வேள்ட் விசன் ரிவோஸ் செயற்றிட்ட முகாமையாளர் ஈ.ர். ஜெயலாட் அன்ரனி, வேள்ட்விசன் ஏ.டி.பி. முகாமையாளர் ஜி.ஜே. அனுராஜ் ஆகியோரின் முகாமைத்துவம் ஊடாக விழிப்புணர்வு ஊட்டப்பட்டு வருகின்றது. அத்துடன் வீடு வீடாகச் சென்று பொலித்தீன் பை பாவனைக்குப் பதிலாக துணியிலான பெரிய சாக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (எ.50)

## தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

சாவகச்சேரி. நவ. 24
சாவகச்சேரி தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கட்சி உறுப்பினர் அல்லாதவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதால் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் நுணாவில் மத்தி வேலாயுதம் சாலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி வ்ழங்குமாறு கட்சியின் சாவகச்சேரித் தொகுதித் தலைவர் க.அருந்தவ பாலன் அறிவித்துள்ளார். (எ. 9)

## போலி நகைகளை அடகு வைத்து கைதான பெண்ணுக்குப் பிணை

யாழ்ப்பாணம். நவ.24
யாழ்ப்பாண நகரில் இயங்கும் நிதி நிறுவனத்தில் போலி நகைகளை அடகு வைத்து பணத்தைப் பெற்று மோசடிசெய்தார் எனும் குற்றசாட்டில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இளம் பெண்ணை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
குறித்த நிதி நிறுவனத்தில் போலி நகைகளை அடகு வைத்து 3 இலட்சத்து 85ஆயிரம் ரூபா பணத்தை பெற்று மோசடி செய்தார் என யாழ்ப்பாணப் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது. சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி. தனது கட்சிக்காரர் நிதி நிறுவனத்தில் அடகு வைத்த நகைகள் தங்க நகைகள் தான். தங்க நகைகளை அடகு வைத்தே பணத்தைப் பெற்றுக்கொண்டார். குறித்த நிதி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியரே தங்க நகைகளுக்குப் பதிலாகப் போலி நகைகளை வைத்தார். தனது கட்சிக்காரரின் கையொப்பத்தையும் போலியாக வைத்துள்ளார். இவை தொடர்பில் நிதி நிறுவன முகாமையாளருக்கு தெரிவித்த போதிலும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என மன்றில் தெரிவித்தார்.
அதனைத் தொடர்ந்து நீதிவான் சந்தேகநபரான இளம் பெண்ணுக்குப் பிணை வழங்கியதுடன் வழக்கை ஒத்திவைத்தார். (37)



யாழ்.கச்சாய் அ. த. க.பாடசாலையில் மாணவர் நாடாளுமன்ற அமர்வு அண்மையில் இடம்பெற்றது. (எ)

## முன்பள்ளியின் 43ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம். நவ.24
ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 43ஆவது ஆண்டு நிறைவு விழாவும். மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் இடம்பெறவுள்ளது.
ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் மத்திய முன்பள்ளி தலைவர் கா.சிவசோதி தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக சித்திரமும் வடிவமைப்பும் அலகு. இசைத்துறை இணைப்பாளர். முதுநிலை விரிவுரையாளர் சின்னையா சூரியகுமார் கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பெண்களுக்கான இலவச கற்கைநெறி

### கணினி வரைகலை வடிவமைப்பு

யாழ்ப்பாணம். நவ.24
பெண்களுக்கான கணினி வரைகலை வடிவமைப்பு இலவசக் கற்கைநெறி இடம்பெறவுள்ளது.
இதற்கான நேர்முகத் தேர்வு நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸில் (200. சிவன் பண்ணை வீதி. யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது.
தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 100 வீதம் தொழில் வாய்ப்பு உறுதி செய்யப்பட்டு 6 மாத கற்கையின் பின் தொழிற்றுறைக்கு உள்வாங்கப்படுவர்.
ஆர்வமுள்ள பெண்களை உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.
மேலதிக விவரங்களுக்கு 021 222 8060, 071 777 5666 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சண்டிலிப்பாயில் இயங்கிய சுகாதாரமற்ற கோழிப் பண்ணை மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்.நவ.24
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் கோழிப்பண்ணை இயங்கி வந்தது எனத் தெரிவித்து பொது மக்கள் சார்பில் மல்லாகம் நீதிமன்றில் வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என மக்கள் தெரிவித்தனர்.
இது பற்றி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:
சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கோழிப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சுகாதாரம் அற்ற முறையிலும். அனுமதிப்பத்திரம் பெறாமலும் கோழிப்பண்ணை இயங்கி வந்தமையால் நாம் பல இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளோம். துர்நாற்றம் மற்றும் இலையான் தொல்லையால் குழந்தைகளின் பாதுகாப்பு கஷ்டமாகியது. அத்துடன் உணவுப் பாதுகாப்பும் பாதிக்கப்பட்டது.
இது தொடர்பாக நாம் உரிய தரப்பினருக்கு தெரிவித்தபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே பொது மக்கள் சார்பில் மல்லாகம் நீதிமன்றில் வழங்குத் தொடுக்கப்பட்டது.
குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் எதிர்வரும் 4ஆம் திகதி பண்ணை உரிமையாளர் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று நீதிவான் பணித்துள்ளார் என்று தெரிவித்தனர். (எ.ரி)

## மாவட்டப் போக்குவரத்துக் கிளையில் வாகன இலக்கத்தகடுகளைப் பெறுக

யாழ்ப்பாண மாவட்ட வாகனப் போக்குவரத்துக் கிளையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகன இலக்கத் தகடுகள் இன்று வரை உரிமையாளர்களால் பெற்றுக் கொள்ளப்படவில்லை. இதுவரை பெற்றுக் கொள்ளாத வாகன உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் இந்த வருட நவம்பர் 9ஆம் திகதி வரை வாகனத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இது தொடர்பான விவரங்களைப் பிரதேச செயலகங்களிலும். மாவட்டச் செயலக மோட்டார் வாகனப் போக்குவர்த்து அலுவலகத்திலும் பார்வையிட முடியும்.
இதுவரை குறித்த வாகன இலக்கத்தகட்டைப் பெற்றுக் கொள்ளாத வாகன உரிமையாளர்கள் விண்ணப்பித்து டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்து துறைப் பிரதி ஆணையாளர் வை.பரம்தாமன் தெரிவித்துள்ளார். (எ)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 70 | 80 | 100 |
| கத்தரி | 160 | 200 | 180 | 160 | 180 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50 |
| பயிற்றை | 220 | 240 | 300 | 200 | 180 |
| பாகல் | 320 | 400 | 400 | 300 | 320 |
| க.கிழங்கு | 70 | 80 | 70 | 100 | 100 |
| பெ.வெங்காயம் | 130 | 180 | 120 | 160 | 180 |
| சி.வெங்காயம் | 300 | 300 | 350 | 400 | 400 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 | 70 |
| தக்காளி | 220 | 120 | 220 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 70 | 60 |
| கீரை | 40 | 50 | 60 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 30 | 40 |
| ப.மிளகாய் | 800 | 700 | 700 | 800 | 700 |
| புடோல் | 80 | 160 | 120 | 140 | 120 |
| கோவா | 200 | 160 | 140 | 200 | 160 |
| வெண்டி | 100 | 120 | 160 | 140 | 120 |
| போஞ்சி | 130 | 160 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 220 | 240 | 200 | 220 | 240 |
| தேங்காய் | 80 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 20 |
| கறிமிளகாய் | 350 | 320 | 250 | 300 | 300 |
| கரட் | 240 | 240 | 120 | 160 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 240 | 200 | 120 | 220 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 400 |
| கணவாய் | 700 | 500 | 900 | 700 |
| பாரை | 500 | 500 | 700 | 600 |
| சுறா | 600 | 700 | 1000 | — |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 500 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 300 |
| கிளாக்கன் | 800 | — | 600 | — |
| ஓரா | 300 | 300 | 500 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | 250 |
| சூடை | 100 | 120 | 200 | 160 |
| ஒட்டி | 100 | 200 | 300 | 250 |
| திருக்கை | 250 | 200 | 500 | — |
| மதனம் | 150 | 150 | 300 | 300 |
| கொய் | 100 | 100 | 50 | 50 |
| பாலை | 150 | 200 | 500 | 200 |
| வாளை | 100 | 150 | 400 | 250 |

## இளைஞரை வழிமறித்துத் தாக்கி பத்தாயிரம் ரூபா கொள்ளை

தென்மராட்சி நவ 22
மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் சைக்கிளில் வீட்டுக்கு வந்த இளைஞரை வழிமறித்துத் தாக்கி அவரிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பணம், அலைபேசி என்றவற்றை அபகரித்துச் சென்றனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கச்சாய் அம்மன் கோவிலடியில் இடம்பெற்றது.
கச்சாய் வடக்கு வாகையடியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் தனது சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சைக்கிளில் வந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் வழிமறித்துத் தாக்கி பர்ஸில் வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பணம், அலைபேசி மற்றும் பாடல் கேட்கும் கருவி ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
தாக்குதலில் பாதிக்கப்பட்ட இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் சிற்றுண்டி நிலைய திறப்பு விழா



தென்மராட்சி, நவ. 24
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளையினரின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டி நிலையம் கடந்த 15ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.
கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரான்ஸ் கிளையின் காப்பாளர் த.பரமானந்தம், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தனர்.
நிலையத் திறப்பு விழா தினத்தன்று பழைய மாணவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் சிற்றுண்டி நிலையத்துக்குத் தளபாடங்கள் வழங்கி வைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ,9)

## பாடசாலை மாணவர்களுக்கு இராணுவம் இலவச உதவி

சாவகச்சேரி, நவ .24
யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகவும் குறைந்த வருமானம் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.
52ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வன்னியாராச்சி விடுத்த வேண்டுதலுக்கு இணங்க நேற்று சாவகச்சேரி 523ஆவது படைப்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 52பேருக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.
உபகரணங்கள் அனைத்தும் ஜூனியர் வெம்பர் இன்டர்னெஷனல் நிறுவனத்தின் உப்புல் குழத்துங்கவின் சொந்தச்செலவில் வழங்கப்பட்டன. நிகழ்வில் 523ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் திசாநாயக்க, 12ஆவது



கெமுனுஹேவா படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, 4ஆவது விஜயபாகு படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (எ,21)

## புதிய உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 23
சிந்தனைக் கூடம், யாழ்ப்பாணம் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரை 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு இடம்பெறும்.
'புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள், வேட்பாளருக்கான விதிமுறைகள், வாக்காளருக்கான வழிகாட்டல்கள்' எனும் தலைப்பில், யாழப்பாண மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன் கருத்துரை வழங்குவார். கருத்துரையின் பின்னர் கலந்துரையாடல் இடம்பெறும்.
மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட எண்ணியுள்ளோருக்கு மிக்க பயன்மிக்கதாக அமையும். கட்சி பேதமின்றி அறிவைப் பகிர்வதையே நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சிந்தனைக்கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் வேண்டுகின்றார். (எ)

## விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் நவ 24
யாழ்ப்பாணம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு விக்ரோறியா கல்லூரியில் சிவபாத சுந்தரம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. மேலதிக தகவல்களைப் பெற 0775134348 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (எ)

## வீடு திரும்பிய இருவரை வழிமறித்துத் தாக்கிய நால்வருக்குப் பிணை

சாவகச்சேரி, நவம் 24
வேலைக்குச் சென்று வீடு திரும்பிய இருவரை வழிமறித்துத் தாக்கிய நால்வரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.
மட்டுவிலைச் சேர்ந்த இருவர் கடந்த 17ஆம் திகதி இரவு 8 மணியளவில் வேலைக்குச் சென்று வீடு திரும்பிய வேளையில் அவர்களை கனகன்புளியடிச் சந்தியில் வழிமறித்த நால்வர் தலைக்கவசங்களாலும் கைகளாலும் தாக்கியதில் ஒருவருக்கு பல் உடைந்தது. தாக்குதலுக்கு இலக்கான இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக நால்வரையும் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நேற்று பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் முன்னிலையில் முற்படுத்தினர். இரு பகுதியினரும் இணங்கிச் செல்வதாகக் கூறியதையடுத்து நால்வரையும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் பிணையில் செல்ல அனுமதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ,9)

## விவசாய டிப்ளோமா பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.24
இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய டிப்ளோமா கல்வி பயின்று சித்தியடைந்தவர்களுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.
கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரி வளாக மண்டபத்தில் இன்று மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் 2014 தொடக்கம் 2016 வரையான ஆண்டுகளில் டிப்ளோமா கல்வி கற்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பட்டமளித்து மதிப்பளிக்கப்படவுள்ளனர். பட்டமளிப்பு இரு அமர்வுகளாக இடம்பெறும். (எ,131)



## இது புதுசு

பெண்களுக்கான நவீன சட்டை வகைகள் சில சந்தையில் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## பரிசில்நாள் விழாவும் ஒளி விழாவும்

சாவகச்சேரி நவ 24
கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை பரிசில்நாள் விழாவும் ஒளி விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை ஆலய முன்றிலில் இடம் பெறும்.
அதிபர் கு.அசோக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா கலந்து கொள்வார் எனத்தெரிவிக்கப்பட்டது. (எ,9)

வடக்கு மாகாண நிலையிலான உலக அஞ்சல் தின நிகழ்வில்

# சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் முதலிடம்

## சிறந்த சேவைகளை வழங்கியமைக்காக




சாவகச்சேரி. நவ. 24

வடக்கு மாகாணத்தில் சிறந்த அஞ்சல் சேவைகளை வழங்கிய சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் முதலிடத்தையும் சிறந்த சேமிப்பாளர்களை ஊக்குவித்துச் சேமிப்புத் திட்டத்தில் மக்களை இணைத்த சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தின் பணியாளர் செ. செந்தூரன் வடமாகாணத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றமைக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 143ஆவது உலக அஞ்சல் தின நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

வடக்குப் பிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபர் கா.கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாகாணத்தில் உள்ள 41முதலாம் தர அஞ்சல் அலுவலகங்களில் சிறந்த சேவைகளை மக்களுக்கு வழங்கியமைக்காக சிறந்த அஞ்சல்அலுவலகத்துக்கான முதலாம் இட விருதினை சாவகச்சேரி அஞ்சல் அதிபர் இன்பராஜ் லம்பேட்டும் அஞ்சல் அலுவலகத்தில் அதிகளவு அஞ்சல் சேமிப்பாளர்கள் மூலம் அதிக நிதி சேகரித்தமைக்கான விருதினை அஞ்சல் பணியாளர் செ.செந்தூரனும் அஞ்சல் மா அதிபர் டி.எல்.பீ.ஆர். அபயரத்னவிடமிருந்து பெற்றனர்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் மதிப்புறு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கடந்த மாதம் பொலனறுவையில் நடைபெற்ற தேசிய நிலையிலான உலக அஞ்சல் தின நிகழ்வில் நாட்டில் உள்ள 460 முதலாம் தர அஞ்சல் அலுவலகங்களில் சிறந்த சேவையினை வழங்கியமைக்கானமுதலிடத்துக்கான விருதை சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் பெற்றமை குறிப்பி டத்தக்கது.

(எ.9)

இந்தியாவில் அகதிகளாக வாழும் உறவுகள்

# தாயகம் திரும்ப வழி ஏற்படுத்தி தாருங்கள்

## மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவு மக்கள் கோரிக்கை

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆத்தி மோட்டை, கூராய், சீதுவிநாயகபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து இந்தியா சென்று அங்கு அகதிகள் போன்று வாழ்வு வாழும் எமது உறவுகள் தாயகம் திரும்ப வழி ஏற்படுத்த வேண்டும் என அந்தக் கிராமங்களில் எஞ்சியுள்ள மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிராமங்கள் அபிவிருத்தி அடையாததே அவர்கள் நாடு திரும்பாதத்துக்குக் காரணம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில்மேலும்தெரிவித்ததாவது:

ஏ32 சாலையில் மன்னார் வீதிக்கு அண்மையில் அதிக விவசாயக் கிராமங்களும் பெரும் எண்ணிக்கையான கால்நடை வளர்ப்பாளர்களும் இருந்த இந்தப் பகுதிகளில் ஆலயங்களும் இரு பாடசாலைகளின் கட்டடங்களும் உள்ளன. ஆத்திமோட்டையில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற பாடசாலையில் இன்று வெறும் 13 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். அதனால் குறித்த பாடசாலை கள்ளியடியில் உள்ள பாடசாலையுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கூராயில் இயங்கிய பாடசாலை தற்போதும் இயங்கும் நிலையில் அங்கும் போதிய மாணவர்கள் கிடையாது. 80 குடும்பங்கள் வாழ்ந்த ஆத்திமோட்டையில் இன்று 10 குடும்பங்களும், 120 குடும்பங்கள் வாழ்ந்த சீதுவிநாயகர்புரத்தில் 30 குடும்பங்களுமே வாழ்கின்றன. அதேபோன்று கூராயில் 200 குடும்பங்கள் வாழ்ந்த நிலையில் தற்போது 100 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றன. இந்தக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த அதிக மக்கள் இந்தியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் வாழ்கின்றனர்.

மக்களுடைய எண்ணிக்கை குறைந்து காணப்படும் அந்தக் கிராமத்துக்குச் செல்லும் 13 கிலோ மீற்றர் வீதி மணல் வீதியாக, குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது. மாலை 6 மணிக்குப் பின்பு வீதிகளில் யானைகள் நிற்கும் அவலத்தால் 5மணியுடன்கிராமங்கள் அடங்கி விடும். இந்த நிலையில் அங்கு எஞ்சியவர்கள் உயிர்வாழவும் வெளியேறியவர்கள் மீண்டும் சொந்த இடம் திரும்பவும் வீதி சீரமைக்கப்பட வேண்டும். சீரமைத்தாலே இந்தப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பணிபுரிய ஆசிரியர்கள் முன்வரவும். மக்களும் சொந்த இடம்திரும்பவும் வாய்ப்பேற்படும்.

போர்க் காலத்தில் அச்சம் காரணமாக இங்கிருந்து வெளியேறியவர்களே அங்கு அகதிகளாக உள்ளனர். இங்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் எமது கிராமத்தினதும் மாவட்டத்தினதும் இருப்பை உறுதி செய்ய முடியும்.

இந்திய முகாம்களில் வாடும் உறவுகள் எம்முடன் உரையாடும்போது 'சொந்த ஊருக்குத் திரும்பி வாருங்கள்' என நாம் அழைக்கும் போது அவர்கள், 'தற்போது நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் இல்லையா? தாயகத்தில் வாழும் உங்களுக்குப் பாதுகாப்பு, வீட்டுவசதி, சீரான போக்குவரத்து, பிள்ளைக ளுக்கான கல்விவாய்ப்பு, தொழில்துறை எவ்வாறு உள்ளது. தாயகத்தில் உள்ளவர்களே சிரமத்தை எதிர்நோக்கும்போது எதனை நம்பி நாம் அங்கு திரும்புவது' எனக் கேட்கின்றார்கள் என்றனர்.

(எ.101)

# நன்னீர் மீன்பிடி அமைச்சுக்கென தனியான அலகு ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 24

வடக்கு மாகாண நன்னீர் மீன்பிடி அமைச்சுக்குத் தனியான அலகு ஆரம்பிக்கப்படவுள்ளது என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடி அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. எனினும் அமைச்சின் கீழ் உள்ள விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றுடன் சேர்ந்தே மீன்பிடி அமைச்சும் உள்ளது.

ஆகவே திட்டங்களை முன்னெடுப் பதற்கு அதற்குரிய பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் இல்லை. தேவையின் நிமித்தம் ஏனைய அமைச்சின் உத்தியோகத்தர்களை உள்வாங்கி வேலைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

ஆகவே அமைச்சுக்குத் தனியான ஓர் அலகு அவசியமாகும். இதன் மூலம் செயற்றிட்டங்கள் விரைவுபடுத்தப்படும். பணிப்பாளர் மற்றும் பத்து உத்தியோகத்தர்களுடன் கூடிய தனியான அலகு விரைவில் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ.ரி)

# மாவீரர் நாளைக் குழப்புவதற்காகவே வன்முறைக் குழுக்களை ஏவி நாடகம்

## விந்தன் கனகரட்ணம் சாடல்

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழ் மக்கள் மாவீரர்களுக்காக அஞ்சலிக்கும் வேளையில் திடீர் என வன்முறைக்குழுக்களின் அட்டகாசம் யாழில் தலைதூக்கியுள் ளது. மாவீரர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சகலதையும் அர்ப்பணித்தவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பு ஒவ்வொரு தமிழ் மகனிடத்திலும் உணர்வு பூர்வமான உறுதியை ஏற்படுத்துகின்றது. இதை ஏற்றுக்கொள்ள முடியாமல்; ஏமாறக்கூடிய எமது இளைஞர்களைப் பயன்படுத்தி வன்முறையினைக் கட்டவிழ்த்து விட்டு அடக்குமுறையாளர்கள் குளிர்காய்கின்ற னர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவுற்று விட்டது என அரசு அறிவித்து எட்டு ஆண்டுகள் கடக்கின்றன. ஆனாலும் இயல்பு வாழ்க்கைக்குச் செல்ல பலதரப்பட்ட தடைகள் எம்முன் நிலவுகின்றன. எங்களுடைய அர சியல் அபிலாசைக்கான அடிப்படை கள் நிவர்த்திக்கப்பட வில்லை. இதற்கு மேலாக நாம் ஒரு அச்சகரமான சூழலில் தான் நடத்தப்படுகின்றோம்.

எமது சமூகத்தில் இளைஞர்களிடையே வன்முறைக்குழுக்கள் இயங்குகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைக்காகப் போராடும் இனத்தில் இவ்வாறு தெருச்சண்டைகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் வன்முறைக் குழுக்கள் உருவாவது என்பதும் வேதனைக்குரியது.

அவ்வாறு வன்முறையை குறித்த குழுக்கள் கற்றுக் கொண்டமைக்கு மக்களை அச்சத்துக்குள் வைத்திருக்கவேண்டும் என்ற இராணுவப் புலனாய்வு அமைப்புக்களின் உத்திகளே காரணம். மக்களை அச்சத்துக்குள் வைத்திருப்பதன் வாயிலாகக் கடந்த அரசு மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக அவர்கள் போராடக் கூடாது என செயற்பட்டது. ஆனால் தற்போதைய நிலையில் இதனைச் சற்று மென்போக்கான உத்திகளுடன் இராணுவப் புலனாய்வு அமைப்புக்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் படுகின்றனவா என இப்போது கருதத்தோன்றுகின்றது.

தற்போது கூட வாள் வெட்டு, கத்திக்குத்து என எமது காலாசாரத்துக்குப் பொருந்தாத குற்றங்கள் நடைபெறுகின்றன. இவை தூண்டி விடப்பட்ட மைக்கு பின்னணிகள் இருப்பதை ஊகிக்க முடிகின்றன.

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ளது. என்னதான் அச்சம் தோற்றுவிக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் தமது கடமைகளைச் சரியாக செய்வதற்குத் தயாராகவே இருக்கின்றனர். என்றார்.

(எ.21)

தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையின்மை

# இரண்டு சமூகங்களுக்கும் ஆபத்தானது

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின்

வவுனியா.நவ.24

வவுனியா பிரதேசத்தின் தமிழ் முஸ்லிம் உறவை மேம்படுத்தாமல் இருப்பது இரண்டு சமூகங்களுக்கும் ஆபத்தானது என்று தெரிவித்தார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வவுனியா பிரதேச முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 19ஆம் திகதி வவுனியா பட்டானிச்சூரில் இடம்பெற்றிருந்தது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வவுனியா பிரதேச முஸ்லிம் மக்களைச் சந்திக்கின்ற சந்தர்ப்பங்களிலே வர்த்தக ரீதியாக வவுனியா முஸ்லிம் வர்த்தகர்களுக்கு இருக்கும் சவால்கள், மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவார்கள்.

அதேபோன்று வவுனியாவை அண்டிய பிரதேசங்களில் வசிக்கின்ற முஸ்லிம் மக்கள், குழந்தைகளின் கல்வி, காணி, வீடமைப்பு அனுமதிகள் தொடர்பில் அதிகாரிகளுடைய அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்து முறையிடுவார்கள்.

இதேநேரம் வவுனியா நகருக்கு வெளியில் இருக்கின்ற கிராமப்புற முஸ்லிம்களைச் சந்தித்தால் அவர்கள் தம்முடைய மீள்குடியமர்வு, காணி, விவசாயம், வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைப்பார்கள்.

பிரச்சினைகளை முன்வைக்கின்றபோது, 'இவற்றை முறைப்படி அதிகாரிகளிடம் தெரிவித்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள நீங்கள் முயற்சிப்பதில்லையா' என்று நான் கேட்டால் அதற்கு, 'தமிழ் மக்கள் எம்மீது துவேஷத்தை வெளிப்படுத்துகின்றார்கள்' என்று பதிலளிப்பார்கள்.

மறுபக்கத்திலே தமிழ் மக்களைச் சந்தித்தால், வன்னியில் முஸ்லிம்களே அமைச்சர்களாக அல்லது செல்வாக்கு மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இவர்களால் நாம் அச்சுறுத்தப்படுகின்றோம். சிங்கள அரசோடு இணைந்து தமிழ் மக்களின் பூர்வீகத்தை இவர்கள் அழிக்கின்றார்கள் என்றெல்லாம் குற்றச்சுமத்து கிறார்கள்.

இதன்போது 'நீங்கள் இந்த விடயங்களை முஸ்லிம் சமூகத்தலைவர்களோடு கலந்துரையாடுவதில்லையா' என்று கேட்டால், அதற்கு 'நாம் முஸ்லிம்களோடு இதுவிடயங்களைப் பேசுவதில்லை' என்று குறிப்பிடுவார்கள்.

மறுபக்கத்தில் சமூக ரீதியில் பகையான சமூகங்களாகக் குறித்த சமூகங்களை அடையாளம் செய்ய முடியாத அளவுக்கு அவர்களிடத்திலே அன்னியோன்யமான சூழ்நிலைகள் இருக்கின்றன.

ஆனால், அரசியல் விவகாரங்களிலே இரண்டு சமூகங்களும் துருவப்பட்டிருக்கின்றார்கள். இது இரு இனங்களுக்கும் பாதுகாப்பானதல்ல. அரசியல் விவாகரங்களிலே இரண்டு சமூகங்களும் ஐக்கியப்படாமல், உடன்படாமல் இருந்தால் அது இரண்டு சமூகங்களையும் தொடர்ந்தும் துருவ நிலையிலேயே வைத்திருக்கும்-என்றார்.

(எ.21)

காலி கிந்தோட்டை வன்முறை தொடர்பான

# கண்டனப் பிரேரணையை ஒத்திவைத்தது மாகாணசபை

யாழ்ப்பாணம், நவ. 24

காலி கிந்தோட்டை வன்முறையில் பாதிக்கபட்டவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும், வன்முறையாளர்களுக்குக் கண்டனம் தெரிவித்தும் வடக்கு மாகாண சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை நீண்ட இழுபறிக்கு பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 110ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. அதன் போது அவைத்தலைவர் கிந்தோட்டை வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும் வன்முறையாளர்களுக்குக் கண்டனம் தெரிவித்தும் அவசர பிரேரணை ஒன்றை முன் வைத்தார்.

மேலும், இவ்வாறு சிறுபான்மை இனத்துக்கு எதிராகத் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படும் திட்டமிட்ட வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் இனியும் சிறுபான்மையினரை இலக்கு வைத்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

அதற்கு எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறித்த வன்முறை சம்பவம் திட்டமிட்டு நடத்தப்பட்டதா அல்லது அதற்கான காரணம் என்ன என்பதனை அறியாது நாம் பிரேரணையை கொண்டு வர முடியாது என கருத்துக்களைத்தெரிவித்தனர். இருந்த போதிலும் அவைத்தலைவர் தனது பிரேரணையை சபையில் நிறைவேற்றுவதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார்.

சுமார் 30 நிமிடங்கள் நீண்ட விவாதத்தின் இறுதியில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தப்பிரேரணையை அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்வோம் எனக் கேட்டுக் கொண்டதை அடுத்து அதற்கு அவைத்தலைவர் சம்மதித்து, பிரேரணையை ஒத்தி வைத்தார். (எ.8.37)

# திட்டமிட்ட செயலா அல்லது விபத்தா?

## வவுனியா முஸ்லிம் கடைகள் எரிந்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

வவுனியாவில் முஸ்லிம்களின் கடைகள் எரிந்தமை, திட்டமிட்டு எரிக்கப்பட்டதா அல்லது விபத்தில் எரிந்ததா என்ற ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வவுனியா மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 110ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் முஸ்லிம் கடைகள் எரிந்தமை முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைஎனத்தீர்மானிக்க முடியாது. வவுனியா நகருக்கு அண்மையில் பள்ளி வாசலுக்கு அருகில் உள்ள 14 கடைகள் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமானது. அவை அனைத்தும் வீதிகளை ஆக்கிரமித்து, சட்ட விரோதமாக அமைக்கபட்டு உள்ளன. குறித்த கடைத் தொகுதிகளை அகற்றுமாறு கோரி இளைஞர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர்.

அது நடைபெற்ற சில நாள்களில் கடை எரிந்தமையால் அவை குறித்த இளைஞர் குழுவால் எரிக்கபட்டு இருக்கலாம் எனும் சந்தேகம் எழுந்தது. அதேவேளை கடை எரிந்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார் மின் ஒழுக்கு காரணமாகவும் கடை எரிந்து இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்தனர்.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் எரிந்த கடையில் இருந்து சில சான்றுகளைப் பெற்றுக் கொழும்புக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

அது குறித்து மேலதிக அறிக்கை வந்த பின்னரே கடை எரிந்தமைக்கு காரணம் மின் ஒழுக்கா அல்லது திட்டமிட்ட செயலா எனும் முடிவுக்கு வர முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே குறித்த அறிக்கை வரும் வரையில் அது திட்டமிட்டு எரிக்கப்பட்டது எனும் முடிவுக்கு வர முடியாது. அறிக்கை வந்த பின்னர் திட்டமிட்டு எரிக்கப்பட்டது என்றால் கண்டனத்தை பதிவு செய்வோம் என மேலும் தெரிவித்தார். (எ,8)

# மாவீரர் நாளன்று நினைவு கூரலாம் மாகாண சபையில் தேவையில்லை

## அவைத்தலைவர் சி.வி.கே

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் நாள் அன்று எல்லோரும் தனித்தனியாகவும் கட்சி சார்பாகவும் அஞ்சலி செலுத்துவோம் எனவே இன்றைக்கு அது தேவையில்லை என்று கூறி மாவீரர்களை நினைவு கூருவதற்கு மறுப்பு தெரிவித்து சபையை ஒத்திவைத்தார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர்.

வடக்கு மாகாண சபையின் 110ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. காலை 9.40 மணிக்கு ஆரம்பமான சபை அமர்வுகள் 11.30 மணியளவில் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

மாகாண சபையை ஒத்தி வைப்பதாக அவைத்தலைவர் அறிவித்தார். அதன்பின் ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆர்னோல்ட் மாவீர்களுக்கு சபையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கேட்டார்.

அதற்கு மறுப்பு தெரிவித்த அவைத்தலைவர் மாவீரர் நாள் அன்று எல்லோரும் தனித்தனியாகவும் கட்சி சார்பாகவும் அஞ்சலி செலுத்தத் தானே போகின்றோம்.

எனவே இன்றைக்கு அது தேவையில்லை என தெரிவித்து சபையை ஒத்திவைத்தார் வடக்கு கிழக்கில் மாவீரர் வாரம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது எதிர்வரும் 27ஆம் திகதி அந்த நாள் எழுச்சியாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது . (எ,8)

கிந்தோட்டை வன்முறை;

# அடித்தால் எரிப்பார்களா? அடித்தது சரியா?

## அவைத்தலைவரும், எதிர்க்கட்சித்தலைவரும் மோதிக் கொண்டனர்

யாழ்ப்பாணம், நவ. 24

காலி கிந்தோட்டைப் பகுதி வன்முறைச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண சபையில் விவாதமாக மாற்றம் கண்டது.

"அடித்தால் எரிப்பார்களா?", "அதற்கு அடித்தது சரியா?" என்ற வினாக்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபை அவைத்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவும் வார்த்தைகளால் மோதிக் கொண்டனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கிந்தோட்டை வன்முறைச் சம்பவம் தொடர்பாக அவைத்தலைவரால் கொண்டு வரப்பட்ட பிரேரணையின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதன் போது "குறித்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் எமக்கு முழுமையாகத் தெரியாமல் நாம் அவசரப்பட்டு இந்தப் பிரேரணையைக் கொண்டு வரத் தேவையில்லை" என எதிர்கட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

"எது அவசரப்பட்டுக் கொண்டு வரப்பட்டது ? சம்பவம் நடந்து இன்று எத்தனை நாள்" என அவைத்தலைவர் கேள்வியெழுப்பினார். "இந்தப் பிரேரணை மூலம் அவசரப்பட்டுக் கண்டனம் தெரிவிக்கத் தேவையில்லை" என்றார் எதிர்க்கட்சி தலைவர். "அவசர பிரேரணை என்றால் அவசரப்பட்டுத் தான் கொண்டு வர வேண்டும் என அவைத்தலைவர் கூறினார்.

"வன்முறைக்குக் காரணம் ஒரு விபத்துச் சம்பவம் எனவும், விபத்துக்கு உள்ளான ஒருவரைத் தாக்கியதைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறை எனவும் கூறப்படு கின்றது" என்றார் எதிர்க்கட்சித் தலைவர். இது திட்டமிட்டு நடந்தது எனத் தெரியவில்லை சம்பவம் தொடர்பில் முழுமையாகத் தெரியாமல் ஒரு பக்கச் சார்பாகக் கண்டிக்க முடியாது. அதற்கு நான் உடன்பட மாட்டேன்" என தனது எதிர்ப்பைப் பதிவு செய்தார் தவராசா. "உங்கள் எதிர்ப்புப் பதிவு செய்யப்படும்." என்றார் சிவஞானம் இவ்வாறு அவர்கள் மோதிக்கொண்டனர். (21-8)

யாழ் மாவட்டத்தில்

# 35 வருடங்களுக்குப் பின்னர் பனைப் பரம்பல் கணக்கெடுப்பு

## யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் 35 வருடங்களுக்குப்பின்னர் பனைகளின் பரம்பல் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பனை மரங்களின் பரம்பல் பற்றிய கணக்கெடுப்பு 1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது 11 மில்லியன் பனைகள் காணப்பட்டன. இதுவரை அழிவடைந்த பனை மரங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டால் அதற்களவான விதைகள் நடுவதன் மூலம் பனை மரங்களின் பரம்பலை எமது மாவட்டத்தில் தக்கவைத்துக்கொள்ளலாம். நடப்பாண்டில் இருந்து இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை எம்முடன் இணைந்துள்ளது என்று தெரிவிக்கப்படவுள்ளது. (எ.ரி)

# தமிழர்களின் இனவிருத்தி குறைவடைய இடமாற்றக் கொள்கையே காரணம்

## வட. மாகாண சபை உறுப்பினர் சுகிர்தனின் புதிய கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம் நவ 24

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு நேர்த்தியான இடமாற்றக் கொள்கை இல்லாததன் காரணமாக அவர்கள் குழந்தை பெறுவதில் பின்னடைவு ஏற்படுகின்றது. இதனால் எமது தமிழ் இனவிருத்தி குறைவடைகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் சுட்டிக் காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 110ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்றையதினம் இடம் பெற்றது.

அமர்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கொள்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். இந்த இடமாற்றக் கொள்கை தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்கும் போதே சுகிர்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் வளர்ச்சி வீதம் வெகுவாகக் குறைந்து வருகின்றது என பலரும் மேடைகளில் பேசி வருகின்றனர். அவ்வாறான கருத்து ஏற்புடையதுதான். எமது இனம் அழிவடைந்து செல்லப் பல காரணிகள் இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரச உத்தியோகத்தர்கள் விடயம் தொடர்பில் பேசப்படுவதால் சில விடயங்களைக் கூற வேண்டியுள்ளது.

எமது அரச உத்தியோகத்தர்கள் பலர் நேர்த்தியான இடமாற்றக் கொள்கை இல்லாமையினால் குடும்பங்களைப் பிரிந்து இருக்கின்றனர். ஆசிரிய இடமாற்றங்களின் போது கணவன், மனைவி பிரிந்து இருக்க கூடிய நிலைகள் ஏற்படுகின்றன. அதனால் குடும்பங்கள் சீர்குலைந்து போவதுடன் குடும்பங்கள் பிரிந்து செல்லும் நிலைக்கும் தள்ளப்பட்டு உள்ளன அது மட்டுமின்றி குழ்ந்தைப்பேறுகளிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாகப் பெண்கள் பிரசவமாக இருக்கும் போது அவர்களின் மாவட்டத்தில் இடமாற்றம் கேட்கும் போது மறுக்கப்படுகின்றன.. மறுக்கப்பட்டும் உள்ளன. இதனால் அவர்கள் பலத்த மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

அண்மையில் வவுனியாவில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் தான் கர்ப்பிணியாக இருப்பதால் இரண்டு வருட காலப்பகுதிக்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் விதமாக மாற்றம் செய்யக்கோரி இருந்தார்.

அவரது கோரிக்கையை கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோர் ஏற்றுக் கொண்டு இடமாற்றம் வழங்கச் சம்மதித்தனர். ஆனால் அதற்கு வவுனியா வலயப் பணிப்பாளர் சம்மதிக்கவில்லை. அதனால் அந்த ஆசிரியைக்கு மாற்றம் கிடைக்கவில்லை.

எனவே இவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். அதன் போது கருத்து தெரிவித்த அவைத்தலைவர் கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோர் சம்மதம் தெரிவித்தும் ஒரு வலயப் பணிப்பாளர் மறுத்து இருக்கின்றார் என்றால் எங்கள் நிலை என்ன? என கேட்டார். அதன் போது கருத்துத் தெரிவித்த மற்றுமொரு ஆளும் கட்சி உறுப்பினர் பசுபதிபிள்ளை சட்டங்கள் மண்ணில் உள்ளது யார் அதனை கடைப்பிடிக்கின்றார்கள். எத்தனை பேர் சட்டத்தை மதிக்கின்றார்கள் என்று தெரிவித்தார். (எ.8.37)

# மகிந்தவுக்கு நடந்ததே முகாபேக்கு நடக்கின்றது

## செயற்பாட்டாளர் சமீர பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24

மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் சிம்பாப்வேயில் தொடர் சர்வாதிகார ஆட்சி புரிந்த றொபேர்ட் முகாபேயின் மற்றுமொரு வடிவமாகவே எமது நாட்டில் முன்னாள் அரச தலைவர் மகிந்த திகழ்ந்தார். முகாபே தனக்குப்பின் தனது மனைவியை அரச தலைவராக்க முனைந்தது போலவே மகிந்தவும் தனது புதல்வன் நாமலை எதிர்கால அரச தலைவராக்கக் கனவு கண்டார். நாட்டு மக்கள் அவர்களை வீட்டுக்கு அனுப்பி நல்லதொரு மாற்றத்தினை 2015இல் உருவாக்கினார்கள்.

இவ்வாறு நீதியை நிலை நாட்டுவோம் இடதுசாரி இயக்கத்தின் தேசிய ஒருங்கமைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நாட்டின் சகல இடங்களிலும் சுவர்களில் பயமற்ற பிரதமர் என்ற சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததை அனைவரும் அவதானித்திருப்பீர்கள்.

அன்று மகிந்த தரப்பு இழைத்த மோசடி நடவடிக்கைகளுக்கு எதிராக எவரும் குரல் எழுப்ப முன்வரவில்லை. அதற்குரிய தைரியமும் எதிர்த் தரப்பினருக்கு இருக்கவில்லை. இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கினால் அவர்களது கதி என்னவாகும் என்பது பற்றியும் சகலரும் அன்று தெரிந்து வைத்திருந்தனர்.

இந்த அரசில் அங்கம் வகிக்கும் பிரதான தேசியக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களால் இழைக்கப்பட்டுள்ள மத்திய வங்கிப் பிணைமுறை மோசடி விவகாரம் தொடர்பில் விசாரணைக்குட்படுத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பாராபட்சம் காட்டாது ஆணைக்குழுவை நியமித்திருந்தார். அவரையும் அவரது முடிவையும் நான் பாராட்டுகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க வேறு வழியற்ற நிலையிலும் தான் தப்பித்துக்கொள்ளும் முகமாகவுமே ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்திருந்தார். அதேநேரம் மத்



திய வங்கி நிதி மோசடியில் ஈடுபட்ட தனது கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான பிரதான சூத்திரதாரியைக் காப்பாற்றும் தந்திரோபாய எண்ணமும் அவருக்கிருப்பது தெட்டத் தெளிவான விடயமாகும்.

ஆணைக்குழுவை நிறுவ மைத்திரிபால சிறிசேன அடித்தளமாகச் செயற்பட்டார். அரசியல் திருடர்களைச் சட்டத்தின் முன்பாகக் கொண்டுவருவதில் அவருக்குப் பொறுப்பும், பங்களிப்பும் உள்ளன. அவர் இது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருவது எமக்குப் புரிகிறது. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியிலேயே திருடர்கள் அதிகரித்துக் காணப்படுகின்றனர். அங்குள்ள சகலரும் திருடர்கள் அல்லர் நேர்மையான அரசியல்வாதிகளும் அக்கட்சியில் உள்ளனர்.

மகிந்தவின் காலத்தில் இடம்பெற்ற லஞ்ச ஊழல் துஷ்பிரயோகக் குற்றங்கள் குறித்தும் விசாரணைக் குட்படுத்த ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையில் தேர்தல்கள் உரியமுறையிலும் நீதியான முறையிலும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் நீதியான முறையில் வாக்களிக்க இடம்கொடுக்கப்படல்வேண்டும் - என்றார். (5.31)

## தேங்காய் இறக்குமதி தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, நவ. 24

கைத்தொழிலுக்காகத் தேங்காயை இறக்குமதி செய்வது தொடர்பில் வாழ்க்கைச் செலவுக் குழுக் கூட்டத்தின்போது கவனம் செலுத்தப்பட்டது.

சந்தையில் காணப்படும் தேங்காய்களை அதிக பணம் செலுத்திக் கொள்வனவு செய்வதனூடாகக் கைத்தொழிலில் இழப்பு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. தேங்காய் விலை அதிகரிப்பதனால் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியங்கள் நிலவுகின்றதா என்பது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை தேங்காய்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு வாழ்க்கைச் செலவுக் குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலர் கூறியுள்ளார். (5)

# குடிதண்ணீருக்காக நாட்டில் இனி போர் வெடிக்கக்கூடும்

## அச்சம் வெளியிடுகிறார் மகிந்தவின் மூத்த சகோதரர்

கொழும்பு, நவ. 24

குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காக எமது நாட்டிலும் போர் வெடிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நீர்ப்பாசன, கமத்தொழில், மகாவலி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடிதண்ணீர்ப் பிரச்சினையால் உலகில் பல போர்கள் நடந்துள்ளன. ஜோர்தான் கங்கை தொடர்பில் இஸ்ரேலுக்கும் சிரியாவுக்குமிடையில் போர் ஏற்பட்டது. நைல் நதி தொடர்பில் எகிப்தில் பிரச்சினை ஏற்பட்டது. சீனாவில் மஞ்சள் ஆறு



தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டது.

மொனராகலையில் உள்ள ஆறுகளினூடாகதான் அம்பாந்தோட்டைக்கு நீர் கிடைக்கிறது.

சில இடங்களில் பலாத்காரமாக அணைகள் கட்டப்பட்டு நீரைத் தடுப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆட்சியில் நாம் நாட்டிய அடிக்கல்கள் அகற்றப்படுகின்றன.

இது தவறாகும். தற்போதைய அரச தலைவரும் விவசாய அமைச்சராக இருந்தார்.

விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் -என்றார். (5)

# டி.வி. உபுலின் வழக்கு ஏப். 5 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 24

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் (எப்.சி.ஐ.டி) அதிகாரிகளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மிரட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென் மாகாண சபை உறுப்பினர் டி.வி. உபுலுக்கு எதிரான வழக்கை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

2015ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதியன்று அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டமொன்றில் வைத்து, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டால், எப்.சி.ஐ.டியின் அதிகாரிகளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார் என்றே குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளதாகவும், அது இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றையதினம் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் கலந்துகொண்டிருந்தார் என்றும், நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அலுவலர்கள் முதல் பொலிஸ்மா அதிபர் வரையானோரின் பெயர்ப் பட்டியலைச் சேகரித்துக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்றும், அந்த நாளுக்காகக் காத்திருப்பதாகவும் உபுல் குறிப்பிட்டிருந்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டது. (5)

## உடைகிறது விமலின் கட்சி

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணிக்குள் உட்கட்சிப்பூசல் வலுத்துள்ளது. கட்சி இரண்டாக உடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் செயலர் பதவியிலிருந்து பிரியங்சித் விதாரண விலகியுள்ள நிலையில், அந்தக் கட்சியின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீரகுமார திசாநாயக்கவும் விரைவில் வெளியேறுவார் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

கட்சிக்குள் தனிநபர் ஆதிக்கம், பசில் எதிர்ப்புக் கொள்கை உட்பட மேலும் சில காரணங்களாலேயே நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமாரதிசாநாயக்க கடும் அதிருப்தியில் இருக்கிறார் என்றும், அவருடன் இணைந்து மேலும் சில உறுப்பினர்கள் வெளியேறுவதற்குத் தயாராகவே இருக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது.

வீரகுமார திஸாநாயக்க வைத் திருப்திப்படுத்தி, கட்சி இரண்டாக உடையாமல் தடுப்பதற்குரிய முயற்சியில்குழுவொன்று இறங்கியுள்ளது. இதன்படி சமரச முயற்சிகள் தற்போது தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து பியசிறி விஜேநாயக்க அண்மையில் நீக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னரே உட்கட்சி மோதல்பூதாகரமாகியது குறிப்பிடத்தக்கது. (5)

# மன்னாரில் காற்றாலை மின்திட்டம் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது

கொழும்பு, நவ. 24

மன்னாரில் காற்றாலை மின்திட்டத்தை அமைக்கவும், 3 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யவும், ஆசிய அபிவிருத்தி வங்கி350மில்லியன்டொலர் கடனுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும், நிதிய மைச்சுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரண்டு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டன.

340 கிலோ மீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலையை உள்ளடக்கியதாக, 3 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளைத் தரமுயர்த்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 150 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்கவுள்ளது.

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் இந்த வீதி அபிவிருத்தித் திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் மன்னாரில், காற்றாலை மின்திட் டத்தை அமைக்க, 200 மில்லியன் டொலர் கடனுதவியையும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மன்னார் தீவில் 100 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலைப் பண்ணை அமைக்கப்படவுள்ளது.

256.7மில்லியன் டொலர் செலவிலான இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்திவங்கி, 200 மில்லியன் டொலரைக் கடனாக வழங்கவுள்ளது. எஞ்சிய56.7மில்லியன்டொலரை இலங்கைமின்சாரசபை முதலீடுசெய்யும். (5)

> “ 340 கிலோ மீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலையை உள்ளடக்கியதாக, 3 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை தரமுயர்த்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 150 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்கவுள்ளது.

## பயிரை மேய்ந்த வேலி

### வன்கொடுமைக் குற்றச்சாட்டில் எஸ்.ஐ. கைது

சிறுமியைப்பாலியல்வன்கொடுமைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாகத் தங்காலைப் பொலிஸ்த் தலைமையகத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தனர்.

சிறுமியின் தாயாருடன் உப பொலிஸ் பரிசோதகர் தவறான தொடர்பை வைத்திருந்ததாகவும் தாயைச் சந்திக்க வீட்டுக்குச் சென்று வரும் சந்தர்ப்பத்தில் சிறுமியைச்சந்தேகநபர்பாலியல்வன்கொடுமைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (5)

# துணை வாக்காளர் பட்டியல்; அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 24
18 வயது நிறைவடைந்த இளையோர் தாமதமின்றி வாக்களிக்கும் உரிமையை வழங்க ஏதுவாக, துணை வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வகையில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

1980ஆம் ஆண்டு 44ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் ஜீன் மாதம் முதலாம் திகதி 18 வயது நிறைவடைந்த அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு வருடமும் இந்தப் பணியை மேற்கொள்வதற்கு எடுக்கும் கால எல்லைக்குள் ஏதேனுமொரு தேர்தல் வரும் சந்தர்ப்பத்தில், முன்னைய வருடத்தின் வாக்காளர் பட்டியலே பயன்படுத்தப்பட்டு வருவது வழமையாகும்.

அந்த வருடத்தில் 18 வயதை அடைகின்ற இளையோருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வருடமும் துணை வாக்காளர் பட்டியலொன்றைத் தயாரிப்பதன் அவசியம் குறித்துத் தேர்தல் ஆணைக்குழு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. அதற்கு அவசியமான அம்சங்களை உள்ளடக்கி 1980ஆம் ஆண்டு 44ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்யும் சட்டத்தைத் திருத்தம் செய்வது குறித்துச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில், அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டது. (5)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**இரத்தினசபாபதி இராஜபாலன்**
(வெள்ளை)



தோற்றம்
15.10.1971

மறைவு
11.10.2017

கடந்த 11.10.2017 அன்று காலமான எங்கள் அன்பு மகன் இரத்தினசபாபதி இராஜபாலன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று 24.11.2017 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோர் மற்றும் அவரது இறுதிக்கிரியைகளின்போது சரீர உதவி புரிந்த அவரது நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனனி இல்லம்,
இல.45/10, அம்மன் வீதி,
கந்தர்மடம்.

பெற்றோர், சகோதர,
சகோதரிகள்.
021 221 7850

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
22 . 03 . 1972

மறைவு
25 . 10 . 2017

அமரர்
**பாலசுப்பிரமணியம் கிருஸ்ணா (அப்பன்)**

திதி : 24.11.2017

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வல்லிபுரம் சிவானந்தன்**
(பிள்ளையார் மில், சிவா மில் உரிமையாளர்)

அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமையுடன் பக்திவழி நடந்தீர்கள்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்கள்.
துன்புற்றோர் துயர்துடைக்க துணைக்கரம் நீட்டினீர்கள்.
பண்புள்ளோரை பலகாலம்
வாழ விடமாட்டானோ இறைவன்
இடைநடுவில் பிரித்துவிட்டான் உங்களை
கோபுரத்தில் உள்ளீர்கள் அப்பா கோபுரங்கள் என்றும்
சாய்ந்ததில்லை. ஓராண்டு சென்றாலும்
ஒருநொடியும் மறந்ததில்லை
நூறாண்டு சென்றாலும் அழியாத பந்தமல்லவா - அப்பா



குடும்பத்தினர்.
46/1, பிறவுண் வீதி,
4ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பிறப்பு
05.03.1948

இறப்பு
05.12.2016

# தேர்தலை நாம் ஏன் தாமதப்படுத்தவேண்டும்?

## சபையில் சு.க. அமைச்சர் கேள்வி



கொழும்பு, நவ. 24
தேர்தலைத் தாமதப்படுத்தும் நோக்கம் எமக்கு இல்லை. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமைக்கும் சுதந்திரக் கட்சிக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. உரிய நேரத்தில் நாம் தேர்தலை நடத்துவோம். இவ்வாறு அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் மகிந்த அமரவீர நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தாமதப்படுத்தும் நோக்கம் சுதந்திரக் கட்சிக்கோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கோ கிடையாது. தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும் சுதந்திரக் கட்சிக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. தேர்தல் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் அரசியல் கட்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களே வழக்குத் தாக்கல் செய்வர். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நோக்கத்திலும் முயற்சியிலுமே நாம் உள்ளோம். அந்த நிலைப்பாட்டிலேயே மைத்திரிபால சிறிசேனவும் உள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எல்லை நிர்ணய வர்த்தமானிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வலுவிழக்கச் செய்யுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எனது கையொப்பத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. பொதுச்செயலர் என்ற வகையில் துமிந்த திசாநாயக்கவின் கையொப்பத்துடன் சுதந்திரக்கட்சியும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. தேர்தலை உடன்நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம் - என்றார். (5.31)

---

## நீங்கா நினைவுகளுடன் 4 ஆம் ஆண்டில்....



### பத்திநாதன் புஸ்பவதி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு அம்மாவின் நித்திய இளைப்பாற்றுக்காக இந்நாளில் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**கணவர், பிள்ளைகள்**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### மார்க்கண்டு ஈஸ்வரன்

தோற்றம் 22.04.1950 — மறைவு 05.12.2016

திதி :- 24.11.2017

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை
எம் இதயங்களின் வேதனை அன்போடும்
பண்போடும் எங்களுடன் வாழ்ந்தீர்கள்
என்றும் உங்கள் நினைவுடனே
வாழ்கின்றோம். சாவு வந்து சடுதியிலே
உனை அழைத்த மாயமென்ன சோகமே உருவான உம் மனைவியும் உம்
சோபையே இழந்திட்ட உம் பிள்ளைகளும் உம்மையே சுற்றி வரும்
பேரப்பிள்ளைகளின் அலறல்களும் உந்தன் கண்களுக்கு தெரியவில்லையா

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**காஞ்சிபுரம் மாதகல்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 05 . 1947



உதிர்வு 05 . 12 . 2016

### அமரர் சின்னையா சண்முகநாதன்

திதி: சஷ்டி (24.11.2017)

ஆண்டொன்று போனாலும் ஆறவில்லை எங்கள் கவலை
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த வாழ்க்கை கூறிய அறிவுரைகள்
செய்த தியாகங்கள் பட்ட கஸ்டங்கள் சொல்லில் அடங்காது
உங்கள் உருவம் தினமும் எம் கண்முன் தோன்றி மறைகிறது
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

**கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.**

---

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் லோகேந்திரராஜா

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உதவி பரிசோதகர்)**



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், பொன்னாலை வீதி, கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் லோகேந்திரராஜா நேற்று (23.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரகலாரஞ்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - குலமணி தம்பதிகளின் மருமகனும், அருள்ராஜ் (G.S பெரியவிளான்), விஜயகலா, உதயகலா, அனந்தபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்: அருள்ராஜ் (மகன்)**
(G.S **பெரியவிளான்**)

**077 615 3867**

---

# மரண அறிவித்தல்

## கணபதி சீவரத்தினம்

(முன்னாள் சாரதி வலிகிழக்கு(வடபகுதி), ப.நோ.கூ சங்கம் - அச்சுவேலி)



ஆவரங்கால் மேற்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர்கோயிலடி அச்செழு நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கணபதி சீவரத்தினம் நேற்று (23.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நளினா(சுவிஸ்), மயூரன்(கனடா), நர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சரவணமுத்து, பூமணி, அன்னம்மா(கனடா) காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் செல்வராசா, நல்லம்மா(கனடா), செல்வரத்தினம் ஆகியோரின்.சகோதரரும் பரமேஸ்வரி, நடராசா காலஞ்சென்ற சபாபதி மற்றும் சாந்தரூபி காலஞ்சென்ற இந்திராணி கந்தசாமி(கனடா), சாரதா காலஞ்சென்ற சிவலிங்கம் - யோகம், பூலோகரம்பை - காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவமூர்த்தி - தெய்வநாயகி, புவனேஸ்வரன்(கனடா) - புவனேஸ்வரி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் அனுராஜ்(சுவிஸ்) காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ஜெயராஜா - கங்கேஸ்வரி(சுவிஸ்), நவேந்திரராஜா - ரஜனி(கனடா), ராமச்சந்திரன், புஸ்பராஜா, அனுஷா- சிவகுமார், மதிவதனி -சந்திரராஜா(கனடா), பத்மகாந்தன் - சாந்தகுமாரி(சுவிஸ்), சசிவதனி - கேதீஸ்வரன்(சுவிஸ்), விஸ்ணுகாந்தன் - ப்ரியா(கனடா), கலைமதி - கெங்காநிதி(டென்மார்க்), தனுஷா -தர்மஸ்ரீ(கனடா), காயத்திரி திருத்தணிகன்(கனடா), வேல்ராஜ்(கனடா) ஆகியோரின் மாமனாரும் உமாகௌரி, உஷாகௌரி, உதயகுமார் - சிவதர்ஷினி, நந்தகுமார் - சகுந்தலா, துஷி - சுரேஸ், சர்மினி - தர்மஸ்ரீ(ஜேர்மனி), அகிலேஸ்வரன், றஜீவ், ஸ்ரீ செல்வராஜினி - கஜன், சரணிகா, நிருபா(லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும் சாஜனா(சுவிஸ்) இன் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி, அச்செழு,
நீர்வேலி.**

**தகவல்
குடும்பத்தினர்.**

**077 961 6665**

# தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படாது கல்முனை விவகாரம் கையாளப்படவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 24

தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையிலான உறவில் எந்தவிதமான விரிசலும் ஏற்படாத வகையில் கல்முனை விவகாரத்தினை அரசியல் தலைவர்கள் மட்டத்தில் அவதானத்துடன் நிதானமாகக் கையாள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

கல்முனை மாநாகர சபையை நான்கு சபைகளாகப் பிரிப்பது, அதற்கான எல்லை நிர்ணயங்களை வகுப்பது குறித்த கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களாக எம்.ஏ. சுமந்திரன், கவீந்திரன் கோடீஸ்வரன், துரைரெட்ணசிங்கம் மற்றும் ஹென்றி மகேந்திரன், கலையரசன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பிரதித் தலைவரும் பிரதி அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோரும், தேசியக் காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத்சாலி மற்றும் கல்முனை சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

'கல்முனை மாநகர சபை தொடர்பான விடயத்தினை மிகவும் அவதானத்துடன் நிதானமாகக் கையாளவேண்டும். இரு சமூகங்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் கையாளப்பட வேண்டும். இதில் இரு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தினை அரசியல் தலைவர்கள் மட்டத்தில் கையாளப்பட வேண்டியதோடு மக்கள் மயப்படுத்தப்பட்டு இந்த விடயங்கள் கையாளப்படுமானால் அது பொருத்தமற்றதாக அமையும். பிரச்சினைகளும் பெரிதாகி விடும். தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் ஊடாக இந்த விடயங்களுக்குச் சுமுகமானதொரு தீர்வினை எட்ட வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

'முதலில் சாய்ந்தமருதைத் தனியான பிரதேச சபையாக தரமுயர்த்தும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு நாங்கள் இணக்கம் வெளியிட்டிருந்தோம். அதன் பின்னர் கல்முனையை நான்கு சபைகளாகப் பிரிப்பதென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன் போது நாம் தமிழ் வட்டாரங்களை உள்ளடக்கிய பிரதேச சபையொன்று அமையவேண்டும் என்பதை நிபந்தனையாக வைத்தோம். அது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நான்காகப் பிரிக்கப்படும் போது கல்முனை எவ்வாறான எல்லை நிர்ணயத்தினை கொண்டிருக்க வேண்டும் என்பது குறித்த எமது முன்மொழிவை அவர்களிடத்தில் கையளித்துள்ளதோடு அவர்களின் முன்மொழிவினையும் பெற்றுக்கொண்டுள்ளோம். அந்த முன்மொழிவு வரைவு குறித்து ஆராய்ந்த பின்னர் நாம் டிசெம்பர் 10ஆம் திகதி மீண்டும் சந்தித்து கலந்துரையாடுவதெனத் தீர்மானித்துள்ளோம்' என்று கூட்டமைப்பின் ஊடப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், கல்முனைப் பிரதேச சபையினை நான்காகப் பிரிப்பது குறித்த எல்லை நிர்ணயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துக் கலந்துரையாடினோம். இதில் மூன்று சபைகள் முஸ்லிம் மக்களுக்காகவும் ஒரு சபை தமிழ் மக்களுக்காகவும் அமையவேண்டும் என்பது இணக்கம் காணப்பட்டுள்ளது. அதற்கான முன்மொழிவு வரைவுகளும் பரிமாறப்பட்டுள்ளன.

அதனைப் பரிசீலித்து விட்டு மீண்டும் நாம் கலந்துரையாடவுள்ளோம். கல்முனைப் பட்டிண சபையின் வடக்குப் பகுதியில் காணப்படுகின்ற எல்லை நிர்ணயம் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது. அது தொடர்பில் உரிய தீர்வுகளை எட்டும் வகையில் கல்முனைச் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளையும் அடுத்து வரும் கலந்துரையாடல்களில் இணைத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (5.31)

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் அமைந்துள்ள Hottel ஒன்றிற்கு முகாமையாளர். கணக்காளர். உதவியாளர்கள். தேவை.

T.P No :- 077 760 4667

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**

வெள்ளவத்தை பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (25.26.27) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆம் ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.

ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் இடம்பெறும்.

அடியவர்கள் அனைவரும் வருகைதந்து அருள் ஆசியை பெற்றுக்கொள்ளவும்.

பூசை நேரம்: முற்பகல் : 10.30 - 12.30 மணிவரை
மாலை : 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு: கலாச்சார உடையுடன் வருகை தரவும்

தொடர்பு: 021 221 9127 077 801 2226

## ROAD DEVELOPMENT DEPARTMENT POINT PEDRO

## INVITATION FOR BIDS

1. The Chairman, Divisional Procurement Committee, Now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the **table1**below.

| S. No. | Bid ID | Name of the Work | Estimated Cost (With out Vat) MN | D.S Division | CIDA (ICTAD)Grade Required in Highway | Required Bid Security | | Contract Duration |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount by Bond (Rs) | Validity Period upto | |
| 01 | PP/RDD/EE/MAINT /2017/07 | Repairs to Chavakachcheri Dutch Road (0.000-1.000)Km | 1.74 | Chavaka chcheri | C9or above | 17500/= | 29/01/2018 | 14 days |
| 02 | PP/RDD/EE/MAINT /2017/08 | Repairs to Urelu Neervely Road (1.00-1.21) Km | 1.74 | Kopay | C9 or above | 17500/= | 29/01/2018 | 14 days |

**Table 1**

2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. To be eligible for contract award,the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of highways for the grade mentioned in the table 1 above with Construction Industry Development Authority (Former CIDA).
4. Interested Bidders may obtain further information from following office and may inspect the bidding documents, during office hours.

   **Executive Engineer's Office,**
   **Road Development Department,**
   **APC Lane, Puloly,**
   **Point Pedro**
   **Telephone/Fax : 021 2263533**

5. A complete set of bidding documents in English language shall be purchased by interested bidders on submission of a written applica tion to the Executive Engineer,Executive Engineer's Office, Road Development Department, APC Lane, Puloly, Point Pedro from 23.11.2017 until 30.11.2017 from 9.00 hrs to 15.00 hrs payment of a non-refundable fees of Rs.1000, the method of payment by cash.
6. Bids shall be delivered in duplicate to the below.

   **Executive Engineer's Office,**
   **Road Development Department**
   **APC Lane, Puloly, Point Pedro**

   On or before 9.00 am on 04th December 2017. Late bids will be rejected. Bidders must write bid ID on left hand corner of envelop for each. Bids will be opened at above place soon after closing in the presence of bidders or repre sentatives who choose to attend.
7. Bid shall be valid up to 01.01.2018
8. Bid shall be accompanied by a bid security as per table 1.
9. One bidder is entitled to award maximum three works at a time in Road Devel- opment Department Northern Province.

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Executive Engineer's Office**
**Road Development Department, Point Pedro.**

## ROAD DEVELOPMENT DEPARTMENT JAFFNA

## INVITATION FOR BIDS

1. The Chairman, Divisional Procurement Committee(DivPC), on behalf of Executive Engineer, Road Development Department, Jaffnainvites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No. | Bid ID | Name of the Contract | Estimated Cost (without Vat) ( Mn ) | CIDA Grade Required in Highways | Required Bid Security | | Contract Duration |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount by Bond(Rs) | Validity Period up to | |
| 01 | JF/RDD/EE/ Maint/2017/16 | Repairs to Approach Road to Public Building (Jaffna Old DS Office) | 0.83 | C9 or above | 8,300.00 | 29/01/2018 | 14 days |
| 02 | JF/RDD/EE/ Maint/2017/17 | Repairs to Thambady Periyakulam Road (0.00 – 1.00Km) | 1.74 | C9 or above | 17,500.00 | 29/01/2018 | 14 days |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award,the successful bidder shall not have been black listed and as per the Public Finance Circular No: 04/2016 dated 16th March, this IFB is limited for the bidders who have been required valid CIDA registration as men tioned in the tableand process valid business or company registration within Northern Province.
4. Interested Bidders may obtain further information from Executive Engineer' Office, Road Development Department, Jaffna and inspect the bidding documents at the address Executive Engineer's Office, Road Development Department, 657/1, Beach Road, Jaffna from 9.00 hrs to 15.00 hrs.
5. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Executive Engineer, Road Development Department, No. 657/1 Beach Road, Jaffna from 23.11.2017 until 30.11.2017 from 9.00 hrs to 15.00 hrs. Upon payment of a nonrefundable fee of One thousand rupees (Rs.1000.00) for each work.The method of payment will be by cash
6. Bids shall be delivered in duplicate to the address at Chairman,Divisional Procurement Committee, Road Development Department,No.657/1, Beach Road, Jaffna on or before 04thDecember2017 and 9.00 a.m.Late bids will be rejected.Bids will be opened at above place soon after closing in the presence of bidders or representatives who choose to attend.
7. Bid shall be valid up to01/01/2018
8. All bids shall be accompanied by a bid security as in thetable.
9. One bidder is entitled to award maximum three works at a time in Road Development Department,Northern Province.

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Executive Engineer's Office**
**Road Development Department,657/1, Beach Road, Jaffna.**

## தப்பியோடிய இராணுவத்தினரை கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, நவ.24
இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது:
தப்பியோடியவர்கள் சட்டரீதியாகச் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. 11 ஆயிரத்து 232 பேர் சுயவிருப்பின்பேரில் கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி வரை விலகியுள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் 26 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற)



### சவுக்கடி இரட்டைப் படுகொலை:

# சந்தேகநபர் வீட்டின் முன்பாக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,நவ.24
மட்டக்களப்பு சவுக்கடி இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரது வீட்டுக்கு முன்பாக நேற்று பொதுமக்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாக வேண்டாம், கைதுசெய்யப்பட்ட நபர் தனது வீட்டை விற்று வழக்குப் பேசுவதற்குத் திட்டமிட்டுள்ளார். அந்த வீட்டை எவரும் வாங்கக் கூடாது, கொலையாளிக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் முன்வைத்தனர்.

சவுக்கடிப் பிரதேசத்தில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த தாய், மகன் ஆகியோர் கடந்த மாதம் 17ஆம் திகதி இரவு அடித்துக் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சவுக்கடி பிரதேசத்தைச்சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் யாழ்ப்பாணம் கொடிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். வீட்டில் கொள்ளையிட்டு யாழ்ப்பாணத்தில் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (ற-ரி5)

## மதில் வீழ்ந்து சிறுவன் சாவு

திருகோணமலை, நவ.23
திருகோணமலை, பாலையூற்றில் மதில் வீழ்ந்து 9 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாலையூற்று, முருகன் கோயிலுக்கு அண்மையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

புதிதாகக் கட்டப்பட்ட மதிலின் மேல் கொய்யாப் பழம் பறிப்பதற்கு ஏறியபோது மதில் சிறுவன் மீது விழுந்தது என்று கூறப்படுகின்றது.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-45)



## தொண்டமான் பெயருக்காக தொடர்கின்றது போராட்டம்

நுவரெலியா, நவ.24
தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயரில் மீண்டும் தொண்டமானின் பெயரை இணைக்கவேண்டும் என்று வலியுறுத்தி நுவரெலியா அக்கரப்பத்தனை பெரியநாகவத்தைத் தோட்ட தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் கடந்த சில வாரங்களுக்கு முன் பூல்பேங்க் எனப் பெயர் மாற்றப்பட்டது. மீண்டும் தொண்டமானின் பெயரை தொழிற் பயிற்சி நிலையத்துக்குச் சூட்டக் கோரியே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொண்டமானின் படங்களை ஏந்தியவாறு 125க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-ரி5)



நடைபாதை வலையமைப்பின் கீழ் கொழும்பு டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையிலிருந்து ஓல்கொட் மாவத்தை வரையான பாதை சீரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

17 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட இந்தப் பாதையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொது மக்களிடம் நேற்றுக் காலை கையளித்தார்.

கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை பிரதேசங்களில் நிலவிவரும் அதிக வாகன நெரிசலைக் கருத்திற் கொண்டு, பிரதான பாதைகளைத் தவிர்த்து பாதசாரிகள் பாதுகாப்பாகப் பயணிக்கக் கூடிய வகையில் இந்தப் பாதை சீரமைக்கப்பட்டது.

17 மில்லியன் ரூபா செலவில் இலங்கை கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த முதற்கட்ட சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ற)

## பேருந்து மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

கொழும்பு,நவ.24
மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் பேருந்து மீது நேற்று பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொடகாவல பல்லபெத்த பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

சம்பவத்தில் பேருந்தின் சாரதி காயமடைந்து எம்பிலிபிட்டிய மருத்துமனையில் சேர்க்கப்பட்டார்.

தனிப்பட்ட முரண்பாட்டாலேயே இந்த பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ற-ரி5)

### தமிழ்க் கூட்டமைப்பு மு.காங்கிரஸ் பேசிய

# கல்முனை விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்

### உலமாக் கட்சியின் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, நவ.24
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முஸ்லிம் தரப்புக்கும் இடையான கல்முனை சம்பந்தமான பேச்சில் முன்வைத்த விடையங்கள் இன்னமும் வெளியிடாமல் இருப்பது மக்களின் தகவல் அறியும் உரிமைக்கு முரணானதாகும்.

இவ்வாறு உலமாக் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீட் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:
கல்முனையை நான்காகப் பிரிப்பதில் உள்ள எல்லைப் பிரச்சினை பற்றி முஸ்லிம் தரப்பும் தமிழ்க்கூட்டமைப்பும் அரசதலைவரின் ஆலோசனைக்கமைய நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் பேச்சு நடத்தியுள்ளன.

கல்முனை பிரச்சினையில் பிரதேச அரசியல் கட்சிகளின் கருத்தை கேட்டு முடிவெடுக்க வேண்டும் என்று அரசதலைவர் தம்மிடம் தெரிவித்தார் என அமைச்சர் பைசர் முஸ்தபா கூறியிருந்தார். அதற்கு முரணாக முஸ்லிம் தரப்பில் பிரதேச அரசியல் கட்சிகள் என்ற வகையில் முஸ்லிம் காங்கிரஸும் தேசிய காங்கிரஸுமே அதில் கலந்துகொண்டன.

தாம் எதிர் பார்ப்பது என்ன என தமிழ் தரப்பு எழுத்து மூலம் முஸ்லிம் தரப்பிடம் ஒப்படைத்தது எனக் கலந்து கொண்ட தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதி ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கோரிக்கைகள் என்ன என்பது பற்றி இதுவரை முஸ்லிம் தரப்பில் கலந்து கொண்டவர்கள் இன்னமும் பகிரங்கப்படுத்தவில்லை.

இரு தரப்பின் கோரிக்கைகளையும் பகிரங்கமாக ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் முன்வைக்க வேண்டும் என்று உலமாக் கட்சி இரு தரப்பாரையும் கேட்டுக்கொள்கிறது- என்றார். (ற-ரி5)

# அணுவாயுதங்களை ஒருபோதும் கைவிடோம் அமெரிக்காவுக்கு வடகொரியா தக்க பதிலடி

பியாங்யாங், நவ. 24

"அணுவாயுதங்களை ஒருபோதும் கைவிட மாட்டோம்" என்று அமெரிக்காவுக்குப் பதில் வழங்கியது வடகொரியா.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் போது, "அத்துமீறி ஏவுகணைச் சோதனை நடத்திவரும் வடகொரியாவின் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும்" என்று ஜப்பான், சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் நாடுகளை வலியுறுத்தியிருந்தார். அத்துடன் "வடகொரியா தொடர்ந்து அணு சோதனை நடத்தி வருகிறது. அத்துடன் அந்த நாடு தீவிரவாதத்தையும் ஆதரிக்கிறது. தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளான ஈரான், சிரியா, சூடான் ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தத் திட்டம் தீட்டி வருகிறது" என்றும் அண்மையில் தெரிவித்த ட்ரம்ப், தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின்பட்டியலில்வடகொரியாவையும் இணைத்து நடவடிக்கை எடுத்தார். அமெரிக்காவின் இந்த நட வடிக்கையைக் கண்டு கொள்ளாத வடகொரியா, 'அணுவாயுதச் சோதனைகள் தொடரும்' என்று அறிவித்துள்ளது.



'வடகொரியாவின் தலை மீது அமெரிக்க அரசு தீவிரவாதத் தொப்பியைக் கவிழ்ப்பதைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. ஆனால், அமெரிக்காவின் நடவடிக்கையில் இருந்து எங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டுமானால், பொக்கிஷமாக நாங்கள் பாதுகாத்துவரும் அணுஆயுதப் போர்வாளை தொடர்ந்து உறுதியாக பற்றிக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் அமெரிக்காவின் நடவடிக்கை சுட்டிக் காட்டுகிறது" எனத் தெரிவித்துள்ளது. (ம)

# எமர்சன் நாங்
# இன்று பதவி

ஹராரே, நவ. 24

சிம்பாப்வேயின் அதிபராக எமர்சன் இன்று பதவியேற்பார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் முகாபே (வயது-93) 1980ஆம் ஆண்டு முதல் அதிபராக பதவி வகித்து வந்தார். அதிகாரத்தைத் தன்வசப்படுத்த முயற்சிப்பதாக கூறி அந்த நாட்டு துணை அதிபர் எம்மர்சன் நாங்காவாவை முகாபே அண்மையில் பதவி நீக்கம் செய்தார். இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் சிவெங்கா, நீக்கப்பட்ட துணை அதிபர் நாங்காவாவுக்கு ஆதரவாக நின்றார். இதனால், அந்நாட்டு அரசியலில் குழப்பநிலை ஏற்பட்டது. இதனையடுத்து, கடந்த முதலாம் திகதி தலைநகர் ஹராரேவை இராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன. அதிகளவிலான இராணுவச் சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தலைநகரைச் சுற்றிக் குவிக்கப்பட்டனர். ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது.

சிம்பாப்வேயின் ஆளும் கட்சியான ஷானு பி.எப் கட்சியின் பொதுக்கூட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்



"

**நாடாளுமன்றத்திலும் முகாபே மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவர் வீட்டுக்கு அனுப்பப்பட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், முகாபே தானாகவே முன்வந்து பதவியில் இருந்து விலகினார்.**

# தீவிரவாதத்தை ஆதரித்துள்ள நாடுகளின் பட்டியலில் வடகொரியா

வொஷிங்டன், நவ. 24

"வடகொரியா தொடர்ந்து தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்து தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியாவை இணைத்தது அமெரிக்கா.

"வடகொரியா தொடர்ந்து அணுவாயுதச் சோதனை நடத்தி வருகிறது. அத்துடன் அந்த நாடு தீவிரவாதத்தையும் ஆதரிக்கிறது. தீவிர வாதத்தை ஆதரிக்கும் நாடுகளான ஈரான், சிரியா, சூடான் ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து தீவிரவாத தாக்குதல்கள் நடத்த திட்டம் தீட்டி வருகிறது" என ட்ரம்ப் நேற்றுமுன்தினமும் தெரிவித்தார்.

இந்த நிலையில் தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியாவை இணைத்து நடவடிக்கை எடுத்தது அமெரிக்கா. (ம)



# ஏமன் சிறுவர்கள் போராட்டம்

சனா, நவ. 24

ஏமனில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஏமன் சிறுவர்கள் பலர் இணைந்து போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஏமனில் ஹௌதி ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தலைநகர் சனாவைக் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது ஹௌதியின் திட்டம். ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராகப் போரிடும் ஏமன் அரசுக்கு சவூதி தலைமையிலான கூட்டுப்படை உதவி செய்து வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தத் தாக்குதல்களில் இதுவரை சுமார் 12ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். தற்போதும் ஏமனில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. இதையடுத்து போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி ஏமன் சிறுவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

'நாங்கள் மிகவும் பசியுடன் உள்ளோம்', 'சவூதி கூட்டுப்படையிடம் இருந்து ஏமன் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' உள்ளிட்ட வாசகங்க்ள் எழுதியிருந்த பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஏமன் சிறுவர்கள் ஏந்தியிருந்தனர். (ம)






மியன்மார் அரசின் பிடியில் இருந்து பங்களாதேஷுக்குள் தப்பித்து வந்த பைசல்
13 வயதுச் சிறுவன் மியன்மார் இராணுவத்துக்கு எதிராகச் சாட்சியமளித்துள்ள
இதன்படி, மியன்மார் இராணுவத்தின் தாக்குதல் ஒன்றில் தனது கை துண்டாடப்ப
என்று அவன் தெரிவித்துள்ளான்.

# இரட்டைக் கோபுர தாக்குதலில் வானூர்தி நிறுவனங்கள் இழப்பீடு வழங்க உத்தரவு

வொஷிங்டன், நவ. 24

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு நடந்த இரட்டைக் கோபுர தாக்குதல் தொடர்பான வழக்கில் கட்டிட உரிமையாளருக்கு இலங்கை மதிப்பில் சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபா இழப்பீடு வழங்க வானூர்தி நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையம் அமைந்திருந்த இரட்டைக் கோபுர கட்டிடத்தின் மீது, கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அல் குவைதா ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். இதில், 2 ஆயிரத்து 750 பேர் உயிரிழந்தனர். கட்டிடம் தரை மட்டமானது.

தாக்குதலுக்கு உள்ளான இரட்டை கோபுரம், நியூயோர்க் மற்றும் நியூஜெர்ஸி துறைமுக கழகத்துக்கு சொந்தமானது. சம்பவம் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு அந்தக் கட்டிடத்தை சில்லவர்ஸ்டீன் என்பவர் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்திருந்தார். அந்தக் கட்டிடத்துக்கு அவர் காப்புறுதி செய்திருந்தமையால், தாக்குதலுக்கு பின் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து சுமார் 75 ஆயிரம் கோடியை இழப்பீடாக பெற்றார்.

எனினும், தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வானூர்திகளின் உரிமையாளர்களான, அமெரிக்க ஏயார்லைன்ஸ் மற்றும் யுனைற்ரெட் ஏயார்லைன்ஸ் நிறுவனங்கள் மீதும் சில்லவர்ஸ்டீன் வழக்கு தொடர்ந்தார். இந்த நிறுவனங்கள் சுமார் ஆயிரத்து 500 கோடியை இழப்பீடாகச் செலுத்த முன்வந்துள்ளன. (ம)



# ...ங்காவா ...வியேற்பு



முகாபே. முகாபேயால் நீக்கப்பட்ட எமர்சன் புதியதலைவராகநியமிக்கப்பட்டார். நாடாளுமன்றத்திலும் முகாபே மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவர் வீட்டுக்கு அனுப்பப்பட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், முகாபே தானாகவே முன்வந்து பதவியில் இருந்து விலகினார். இந்த நிலையில் புதிய அதிபராக எமர்சன் இன்று பதவியேற்பார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# கொலைகாரக் காளான்கள்

அமெரிக்காவின் கிழக்கு ஓரிகன் மலைப் பகுதிகளில் உலகிலேயே மிகப் பழமையான ஆச்சரியம் அளிக்கக்கூடிய ஓர் உயிரினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதுதான் தேன் காளான்.

2 ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் காளான்கள் பரந்து விரிந்திருக்கின்றன. இவை அனைத்தும் கண்களுக்குத் தெரியாத ஒரேயொரு வித்திலிருந்துதான் உருவாகியிருக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்தக் காளான் கூட்டம் உருவாக குறைந்தது 2 ஆயிரத்து 400 ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 8 ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்கிறார்கள். ஆய்வாளர்கள்.


"தேன் காளான்கள் மெதுவாகப் படர்ந்து, தான் செல்லும் வழியில் உள்ள உயிரினங்களைக் கொன்றுவிடுகின்றன. ஒவ்வோர் இலையுதிர் காலத்தின்போதும் மஞ்சள் வண்ணக் காளான்களாகக் கூட்டம் கூட்டமாகத் தங்கள் இருப்பை வெளிக்காட்டிக் கொள்கின்றன. ஒரு சில வாரங்களில் தங்களுடைய உருவத்தை மாற்றி, வெள்ளை நிறமாக மாறி சுண்ணாம்புபோல் சாதாரணமாகக் காட்சியளிக்கின்றன.

இந்தத் தேன் காளான்கள் மரங்களுக்கு மிகப்பெரிய ஆபத்தை விளைவித்துவிடுகின்றன. மரத்தின் வேர்களில் இருந்து சத்தை மெதுவாக உறிஞ்சித் தங்களை வளர்த்துக் கொள்கின்றன. இதனால் மரங்கள் மெதுவாக சத்துகளை இழக்க ஆரம்பிக்கின்றன.

20, 30 ஆண்டுகளில் தேன் காளான்களை எதிர்த்து நிற்க முடியாமல் இறக்கும் நிலைக்கு சென்றுவிடுகின்றன.

காளான்களால் ஒரு மரத்தைக் கொலை செய்ய இயலும் என்பதை மக்களால் நம்ப முடிவதில்லை. மரத்துக்குத் தேவையான சத்துகளும் தண்ணீரும் தொடர்ச்சியாகக் கிடைக்காவிட்டால் அவை காலப்போக்கில் மடிந்துதான் போகவேண்டும். தேன் காளான்கள் இப்படித்தான் அனைத்தையும் அபகரித்துக்கொண்டு, மரங்களை வீழ்த்தி விடுகின்றன" என்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த வனத்துறையை ஆராய்ச்சியாளர் கிரைக். (ம)






# துருக்கியில் நிலநடுக்கம்

அங்காரா, நவ. 24

துருக்கியின் தென்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 5 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது என்று சொல்லப்படுகிறது.

துருக்கியின் தென்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு உள்ளூர் நேரப்படி 8:22 மணியளவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5 புள்ளிகளாக பதிவானது. முகலா மாகாணத்தில் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஏஜியன் கடலில் இருந்து சுமார் 31 கிலோமீற்றர் தூரத்தில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. கடந்த 2011ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால், 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

...பைசல் என்ற ...ளித்துள்ளான். ...ண்டாடப்பட்டது (ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தாமதிக்கும் உத்தியால் அரசுக்கு சவாலே மிச்சம்

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மீண்டும் ஒரு தடவை ஒத்திப்போகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இழுபறிப்படும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும்படி வழங்கப்பட்ட கடும் அழுத்தங்களைத் தொடர்ந்தே ஒரு வழியாகத் தேர்தலை நடத்த கொழும்பு முன்வந்தது. அதற்கான அறிவித்தலும் விடுக்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைகள் மற்றும் உறுப்பினர்கள் தெரிவு தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து நீதிமன்றம் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு விதித்துள்ள இடைக்காலத் தடையால் முன்னர் திட்டமிடப்பட்டதைப் போன்று ஜனவரி மாதத்தில் தேர்தல் நடப்பது சாத்தியமற்றதாகிவிட்டது.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு இருக்கும் ஆதரவு மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அதனால் ஏற்படக்கூடிய பிளவு என்பவற்றைக் கண்டு அஞ்சும் அந்தக் கட்சியே தேர்தலைப் பின்போடுவதற்கு முடியுமான வழிகளில் எல்லாம் முயற்சிக்கின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அரசதலைவர் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தாம் விட்ட இடத்தை, இந்தத் தேர்தலின் மூலம் அரசுக்கு எதிரான கடும் விமர்சனம் தோன்றியுள்ள இந்த நிலையில், ஈடுகட்டிவிட முடியும் என்று மகிந்த அணி எதிர்பார்க்கின்றது. இந்தத் தேர்தலில் தமது பலத்தைக் கணிசமான அளவு நிரூபித்துவிட்டால், சுதந்திரக் கட்சிக்குள் மைத்திரி அணியின் பக்கம் மதில் மேல் பூனையாகக் குந்திக்கொண்டிருப்பவர்கள் தமது பக்கம் வந்துவிடுவதற்கு வாய்ப்பாகிவிடும் என்று அது கணிக்கிறது. அத்தோடு தமக்கெதிரான அரசின் நடவடிக்கைகளில் அது கடும் அழுத்தத்தைக் கொடுக்கும் என்றும் காத்திருக்கின்றது.

மகிந்தவுக்கு வாய்ப்பாகிவிடக்கூடாது என்பதாலேயே மைத்திரி தரப்பும் இந்தத் தேர்தலை முடிந்த வகையில் எல்லாம் பிற்போட முயற்சிக்கின்றது. பின்னர் அதுவே அந்தத் தரப்புக்கு மோசமான பின்விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. தன்னைக்கண்டு மைத்திரி தரப்பு அஞ்சுகின்றது என்பதை வெளியே காட்டிக் காட்டியே மகிந்த தனது செல்வாக்கை இன்னும் அதிகமாக்கிக் கொள்கிறார்.

மைத்திரி தரப்பு இப்படிப் பதுங்குவதால் கிடைக்கும் வெளியைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் மேலும் இனவாதத்தையும் புதிய அரசமைப்புக்கு எதிரான காழ்ப்புணர்வையும் மக்களிடம் வளர்த்து மகிந்த தரப்பு தனது ஆதரவைப் பெருக்கிக்கொள்கிறது.

அரசு பக்கமோ தன்னை வெற்றிகரமாக நிலைநிறுத்திக் கொள்வதற்கான காத்திரமான விடயங்கள் ஏதும் இல்லாத நிலையே இருக்கின்றது. பதவிக்கு வந்து இத்தனை ஆண்டுகளில் அது சாதித்தது என்று சொல்லிக்கொள்வதற்கோ, அதனைக் காட்டி மக்களைக் கவர்வதற்கோ ஒன்றும் இல்லை என்பதே நிலமை. எல்லாப் பக்கங்களில் இருந்தும் அது கடும் விமர்சனங்களை மட்டுமே எதிர்கொள்கிறது. ஆக, தேர்தல்களை மேலும் மேலும் தாமதப்படுத்துவது அதற்கு இன்னும் இன்னும் பாதகமாகவே முடிகிறது.

இதுவரைகாலமும் தமிழர்களின் பிரச்சினை விடயத்திலேயே கொழும்பு அரசு தாமதித்தலை ஓர் உத்தியாகப் பயன்படுத்தி வந்தது. இப்போது இந்த அரசு எல்லா விடயத்திலும் தாமதித்தலை ஓர் உத்தியாகத் தொடர்ந்து பயன்படுத்துகிறது.

தமிழர்களுக்கு வாக்குறுதி அளித்தபடி அவர்களின் காணிகளை விடுவிப்பதில் தாமதம், காணாமற்போனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தாமதம், போர்க்குற்ற விசாரணைகளை நடத்துவதில் தாமதம், புதிய அரசமைப்பை உருவாக்குதில் தாமதம், பொருளாதார அபிவிருத்தியில் தாமதம் என்று எல்லாவற்றிலும் தாமதங்களையே தனது உத்தியாக்கிக் கொண்டுள்ள இந்த அரசால் வெற்றிகரமாக மக்கள் முன் செல்ல முடியாத நிலையில் அது மீண்டும் மீண்டும் தாமதிப்பதையே தனது உத்தியாகக் கொள்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல் விடயத்திலும் அதுவேதான் நடக்கிறது. ஆனால், வெற்றியைப் பெறுவதற்கான காலச் சூழலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மேலும் மேலும் சிக்கலான சூழலுக்குள்தான் அரசைத் தள்ளி வருகின்றது.

அரசும் அரச தலைவரும் உள்ளூராட்சித் தேர்தலை இவ்வாறு எதிர்கொள்வதைப் பார்க்கும்போது, புதிய அரசமைப்பின் சாத்தியப்பாடுகள் குறித்த அச்சம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. ஒருசிறு தேர்தலையே மகிந்தவை எதிர்த்துக்கொண்டு எதிர்கொள்ள முடியாத அரசு, மிகப் பெரும் அரசமைப்பு விடயத்தில் அதனை எப்படிச் சாதிக்கும்?

# தமிழர்கள் சிந்திக்க வேண்டிய தருணமிது

இந்துமதி

தமிழ் மக்களில் பெரும்பாலோர் எதிர்பார்த்தமை போன்று கூட்டமைப்புக்கு எதிரான கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பிலிருந்து விலகிச்சென்ற சுரேஸ்பிரேமச்சந்திரனும், கஜேந்திரகுமாரும் இணைந்து இந்த முன்னணியை உருவாக்கியுள்ளனர். தமிழ் மக்கள் பேரவையும் இந்த முன்னணிக்கு ஆதரவு தெரிவிக்குமென நம்பப்படுகிறது. தமிழ் மக்கள் பேரவை அமைக்கப்பட்டபோது அது கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பொன்றாகவே கருதப்பட்டது. ஆனால் கூட்டமைப்பைச் சேர்ந்த வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பேரவையுடன் இணைந்து கொண்டார். பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இவரைவிட தமிழரசுக் கட்சி தவ்ந்த கூட்டமைப்பின் ஏனைய பங்காளிகளும் பேரவைக்குள் சங்கமமாகினர். அப்போது கூட்டமைப்பின் தலைமை இதைக் கண்டு கொள்ளவேயில்லை. அரசியலுக்குள் நுழைகின்ற எண்ணம் பேரவைக்கு இல்லையென அதன் முக்கியஸ்தர்கள் அப்போது தெரிவித்தனர். அரசியல்வாதிகளின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை அரசியலில் ஈடுபடாதெனத் தெரிவித்த கருத்தைப் பலர் அப்போது நம்பவில்லை. தற்போது பேரவையின் கபட நோக்கம் அம்பலமாகியுள்ளது.

### பேரவை அரசியல் செயற்பாடுகளில் கலந்து கொள்ளாதென வழங்கப்பட்ட உறுதிமொழி

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே அரசியல் கலக்காத வகையில் பேரவை உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். இன்று அரசியல் கூட்டணிக்கு அந்தப் பேரவை ஆதரவு தெரிவிக்கின்றமை தமிழ் மக்களை ஏமாற்றுகின்றதொரு செயலாகக் கொள்ளத்தக்கதாகும். இத்தகையவர்கள் மக்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்வார்கள் என்பதை எந்த வகையிலும் நம்ப இயலாதுள்ளது.

இதேவேளை தமிழ்மக்கள் பேரவையின் அரசியல் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில் புளொட் அமைப்பு நடந்து கொண்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக பேரவையால் கூட்டப்பட்ட கூட்டத்தில் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளாதது இதை உறுதி செய்துள்ளது. புளொட், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்குமாகாண முதலமைச்சர் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று கூட்டணி அமைத்த சுரேஷ் பிரேமச்சந்திரனை மறைமுகமாகச் சாடியுள்ளார். கட்சியின் நலன் கருதியே சுரேஷ் தனித்துப்போட்டியிடுவதாக அவர் கூறியிருப்பது கவனத்துக்குரியது. இதைவிட புதிய கூட்டணிக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் எந்தத் தொடர்பும் இல்லையெனக் கூறிய அவர், பேரவை கூட்டணியுடன் இணையாது எனவும் கூறியுள்ளார். முதலமைச்சர் தமது கருத்துக்களைச் சொல்லில் மட்டுமல்லாது செயலிலும் மக்களிடம் நிரூபித்துக் காட்டவேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. அவர் தமது விசுவாசத் தன்மையை நிரூபிக்க வேண்டுமானால் உள்ளூராட்சித் தேர்தலின் போது கூட்டமைப்புக்கு ஆதரவான பரப்புரைகளில் ஈடுபட வேண்டும். புதிய கூட்டணிக்கு எதிரான கருத்துகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைப்பதே இவரது பிரதான கடமையாகவும் அமைந்திருத்தல் வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அவர் விட்ட தவறுகளுக்கு இதுவொரு பிராயச்சித்தமாகவும் அமையக் கூடும்.

### பேரவை குறித்த எதிர்பார்ப்பு காலப்போக்கில் பிசுபிசுத்துப் போனது

தமிழ் மக்கள் பேரவை தொடர்பாக ஆரம்பத்தில் பெரியதொரு எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்பட்டது. தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே அதன் முக்கியமான நோக்கமெனவும் கூறப்பட்டது. தீர்வுத்திட்டமொன்றையும் பேரவை தயாரித்திருந்தது. ஆனால் செயல்வடிவைப் பொறுத்தவரையில் எதையுமே அதனால் சாதிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். தற்போது பேரவையிலும் பிளவுகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதேவேளை தமிழ்த்தலைமைகளது மோசமான அரசியல் நிலைப்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே புதிய கூட்டணி உருவாக்கப்பட்டதாக தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார். உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறப்போகும் நிலையில்தான் தமிழ்த் தலைமைகளது அரசியல் நிலைப்பாடு மோசமான ஒன்றாக அவரது கண்களுக்குத் தெரிகின்றதா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மேலும் இந்தக் கூட்டணிக்குக் கிடைக்கப்போகும் ஆதரவைப் பொறுத்தே அதன் மீதான நம்பகத் தன்மையை உறுதிசெய்துகொள்ள முடியும்.

இதே வேளை சரியான தலைமைத்துவத்துடன் ஒரு புதிய கூட்டணி அமைக்கப்பட வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணசபையில் குழப்பங்கள் ஏற்பட்டபோது மாற்றுத் தலைமை தொடர்பான சிந்தனை சிலரிடையே எழுந்தது. ஆனால் தலைமைக்கு எவருமே அடையாளம் காட்டப்படவில்லை.

### தமிழ் அரசுக் கட்சி மீதான அதிருப்தித் தரப்பினர் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க முயற்சி


இந்த நிலையில் தமிழரசுக்கட்சியுடன் முரண்பட்ட சிலர் அதற்கு மாற்றீடாக புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. தமிழர்கள் மேன்மேலும் பிளவுபட்டு நலிவடையப் போவதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்கள் ஒருபோதும் ஒற்றுமையாக இருந்ததில்லை. இதன் காரணமாகத் தோல்விகளை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது.

தோல்விகளிலிருந்து பாடம் படிக்கும்போதுதான் வெற்றிப் படிகளை நெருங்கமுடியும். தற்போதைய நிலவரத்தைப் பார்க்கும் போது தமிழர்கள் வெற்றிப் படிகளை நெருங்க எந்தவிதத்திலும் சந்தர்ப்பம் வாய்க்கப் போவதில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

கூட்டமைப்புக்கு மாற்றீடாக வேறொரு அணி உருவாகும் வரைத் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீதே நம்பிக்கை வைத்துச் செயற்பட்டாக வேண்டும். கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதால் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடுமென எவருமே நினைத்துவிடக்கூடாது. மாறாக புதிய பிரச்சினைகள் தோன்றிவிடும்.

தமிழர்கள் வெறும் உணர்ச்சி வேகத்துக்கு இரையாகாமல் அறிவு பூர்வமாகச் சிந்திக்க வேண்டிய தருணத்தில் உள்ளனர். இதில் தவறிவிடுவார்களாயின் அவர்களது எதிர்காலமே பாழகிப்போய் விடும் அபாயமுண்டு.






சேரலாதன்

# நிதியமைச்சரின் அறிவிப்புக்கள் வடக்கின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும்

நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கானவரவு செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்குரிய சில அறிவிப்புக்களும் காணப்படுகின்றன.

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்களுக்கு 2.6 பில்லியன் ரூபா ஒதுக்கீடு, யாழ்ப்பாணத்தில் நவீன பொருளாதார மையம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, சிறிய தொழிற்துறைகளுக்கு 100கோடிரூபாஒதுக்கீடு, கடன்சுமையில் சிக்கியவர்களுக்கு குறைந்த வட்டியில்கடன்திட்டம், வடக்கில்50,000 கல்வீடுகள், முன்னாள்போராளிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு சலுகைகள், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை மேம்படுத்தல் ஆகியவையே அந்த அறிவிப்புக்களாகும்.

**வடபகுதியின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது**

போரினால்மிக மோசமாகப்பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்கள் இன்னமும் போரின் தாக்கத்திலிருந்து விடுபடமுடியாதுநிலையிலேயேவாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குக்கைகொடுத்து உதவ வேண்டியது அரசின் பிரதான கடமையாகும். குறிப்பாக, பொருளாதார ரீதியில் நலிவுற்றிருக்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதன் மூலமாக அவர்களின் நிலையை மேம்படுத்த முடியும்.

ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமானால் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் வடக்கில் இன்று பலர் வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இதனால் வருமானத்தை ஈட்ட முடியாத நிலையிலும் இவர்கள் காணப்படுகின்றனர்.

வடக்கில் பொருளாதார மையமொன்று அமைக்கப்படுமென நிதியமைச்சர் தமது வரவு செலவுத்திட்ட உரையின்போது குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த மையம் தொடர்பான மேலதிகதகவல்கள்கிடைக்கவில்லை. ஆனாலும் வடக்கிலுள்ள மக்களுக்குப்பயன்படும்வகையில்இது அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக வேலையற்றிருக்கும் வடபகுதி இளைஞர்களைக் கை தூக்கி விடும் வகையில், முன்னுரிமை அடிப்படையில் ஆண்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலமாக வடக்கிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை விருத்திசெய்ய முடியும்.

**2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் வடபகுதிக்கும் கணிசமான நிதி**

வடக்கில் சிறிய தொழில்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்கென 100 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. போருக்கு முந்திய காலப்பகுதி நினைவுக்கு வருகின்றது. கண்ணாடிப் பொருள்களை உற்பத்தி செய்த நிறுவனம் ஒன்றுயாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள நீர்வேலியில் வெற்றிகரமாக இயங்கி வந்தது. இதில் பல இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புக்கிட்டியது. உற்பத்தி செய்யப்பட்ட கண்ணாடிப் பொருள்களைவிற்பனைசெய்ததன்மூலமாக வடக்கின்பொருளாதாரமுன்னேற்றத்துக்குக்கணிசமான அளவுபங்களிப்பு வழங்கப்பட்டது. வீடுகள் தோறும் கைத்தொழில் ரீதியில் துணியிலான பாவனைப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இதனால் பெண்களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைத்ததுடன் அவர்களின் குடும்ப வருமானமும் உயர்வடைந்தது.

வல்லையில் அமைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் இயங்கிய தறிகளின் மூலமாக ஏராளமான தரமான துணியிலானபொருட்கள்உற்பத்திசெய்யப்பட்டன. மக்கள் இவற்றை அதிக ஆர்வத்துடன் வாங்கிச்சென்றதைக் காண முடிந்தது. அதேபோன்று புத்தூரில் அமைந்திருந்த மின்தறியிலும் தரமான துணிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு கொழும்பிலுள்ள சந்தைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவற்றுக்கு நாடுதழுவிய ரீதியில் அதிக வரவேற்புக் காணப்பட்டது. இதைவிட பண்டத்தரிப்பில் இயங்கிய மின்தறிகளைக் கொண்ட தொழிற்சாலை மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. இதன் உற்பத்திகளுக்கு நாடு தழுவிய ரீதியில் மதிப்புக் காணப்பட்டது. இவற்றைவிடயாழ்நகர் உட்படவடக்கின்வேறு பகுதிகளிலும் தறிகள் மூலம் துணிவகைகளையும், துணியினாலான பொருள்களையும் உற்பத்தி செய்யப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. போர்காரணமாக இவற்றின் செயற்பாடுகள் நின்றுவிட்டன. அதுமட்டுமல்லாது குறித்த தறிகள் இயங்கி வந்த கட்டடங்களும், அழிவடைந்து விட்டன.

அழிவடைந்த நிலையில் காணப்படும். இந்தத் தொழிற்றுறைக்குப் புத்துயிர் ஊட்டுவதன் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கமுடியும் என்பதுடன், வடக்கின் பொருளாதாரத்தையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும்.

**போர் காரணமாக செயற்பாடு தடைப்பட்ட வடபகுதி மக்களுக்கு உதவ வேண்டியது அரசின் கடமை**

இவ்வாறு போருக்கு முன்னர் இலாபகரமாக இயங்கி வந்த வடபகுதியின் பல கைத்தொழில்நிறுவனங்கள்போருக்குப் பின்னரான காலகட்டத்தில் இயங்காத நிலையில் காணப்படுகின்றன. போதிய நிதியுதவி, கடனுதவி என்பவற்றை வழங்குவதன் மூலமாக இவற்றையும் மீள இயங்கவைக்க முடியும்.

போர் காரணமாக வடக்கில் ஏராளமானவீடுகள்அழிவடைந்துவிட்டன. இதனால்புதிதாகவீடுகளைஅமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்கள் மக்களுக்குப் பூரண திருப்தியை வழங்கவில்லை என்றுதான் கூற வேண்டும். ஆகவே வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 50 ஆயிரம் கல்வீடுகளையும் மக்களுக்குச்சுமையேற்றாத வகையில்அமைக்கவேண்டும். முன்னாள் போராளிகளுக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதான அரசின் அறிவிப்பும் மகிழ்ச்சிக்குரியது . அதேவேளை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தியும் பாராட்டுதற்குரியது.

இதுவரை வேறெந்த அரசும் வடக்கு மீது காட்டாத கரிசனையைத் தற்போதைய அரசு காட்டியுள்ளது. அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம், அரசு அறிவித்த விடயங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் வடபகுதி சிறப்பான அபிவிருத்தியைக்காண முடியும்என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

## சமூக நலன் கருதி பொறுப்புடன் செயற்படுவார்களா?

யாழ்.மாவட்ட விவசாயிகள் விவசாய முயற்சிகளில் ஆர்வம் காட்டாது அவற்றைக் கைவிடும் போக்கு அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்படு கிறது. யாழ்ப்பாணத்தின் ஒட்டு மொத்த சனத்தொகையில் காற்பங்குக்கு அதிகமானோர் விவசாயம் சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களாக இருந்து வந்துள்ளனர். ஆயினும் இந்த நிலை தற்போது மாறி வருவதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றில் உரையாற்றும் போது சுட்டிக்காட்டி யுள்ளார். போருக்குப் பிந்திய நிலையிலும் இராணுவத்தினரது பிடியில் மக்களது விவசாய நிலங்கள் அகப்பட்டிருப்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அத்தோடு காலநிலை ஏமாற்றத்தினாலும், அரசின் திட்டமிட்ட புறக்கணிப்புக்களா லும் விரக்தியுற்ற விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளைக் கைவிட்டு வேறு வருமான மார்க்கங்களில் ஈடுபட அக்கறைகாட்டிவருவதாகவும்சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ் மாவட்ட விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையில் மட்டுமென்றல்லாது, வேறு விவசாய உற்பத்தி முயற்சிகளிலும் திறமை காட்டி செயற்பட்டு தமது கடும் உழைப்பின் மூலம் பெரும் பணியீட்டுவதில் பேர் பெற்றவர்கள் .அத்தகைய விடாமுயற்சியும் ஊக்கமும் மிக்க விவசாயிகள் கால நிலை மாற்றங்களால் இழப்புக்களையும் நட்டத்தையும் சந்திக்கும் போது, கொழும்பின் பேரினவாத அரசுகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ் விவசாயப் பெரு மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கு வதில் பின்னடிப்பதும் விவசாய முயற்சியாளர்கள் தமது விவசாய முயற்சிகளில் ஊக்கம் காட்டிச் செயற்படாமைக்கான முக்கிய காரணமாகிறது.

இந்தநிலையில்தமது கண்களை தமது கைகளால் குத்திக்காயப்படுத்துவது போன்று, எம்மவர்களில் ஒரு சாரார் நெற் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் விதத்தில் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக அலைய விடுவது குறித்து பல பகுதிகளிலிருந்தும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தரப்பினர்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், அவற்றுக்கு கடுமையான , துரிதமான நடவடிக்கை மேற்கொள்வதில் அக்கறையீனப் போக்கு நிலவுவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

உதாரணத்துக்கு 2900 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள வாய்ப்பிருந்தும் கட்டாக்காலி கால்நடைகளது தொல்லை ,தண்ணீர்த் தட்டுப்பாடு என்பவை காரணமாக தீவகத்தின் வேலணைப்பிர தேசத்தில் இம்முறை 400 ஏக்கர் நிலத்திலையே நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதான செய்தி கவலை தருமொன்று . தமது கால்நடைகளைக் கட்டி வளர்த்து நெற்செய்கைக்கு கட்டாக்காலி மாடுகளால் அழிவு ஏற்படாது தடுக்க தீவகப் பகுதி கால் நடை வளர்ப்பாகளர்கள் முன் வராத வரை ,விவசாயிகளது நெற்பயிர்செய்கை பாதிப்படையும் நிலையைத் தவிர்க்க இயலாது போய் விடும் . எனவே தீவகப்பகுதி கால் நடைவளர்ப்பாளர்கள், இது விடயத்தில் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு ,குறைந்த அளவில் செய்கை பண்ணப்படும் நெற் செய்கையின் விளைச்சல் தமது கால்நடைகளால் சேதப்படுத்தப்படாது காப்பாற்றப்பட சமூக நலனோக்குச் சிந்தனையுடன் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

ப.சின்னராசா, வேலணை

# ‘அத்தி’

## போசணைப் பே(கூ)றுகளை உடைய இயற்கையின் சக்தி

அ.விஜிதா குலாஸ்

'பிகஸ் க்ளோமெராடா' (FICUS GLOMERATA) என்ற தாவரவியற் பெயரையுடைய அத்திமரம் 'மொறேசியா' (MORACEAE) குடும்பத்தைச் சாரந்தது. இதில் சீமை அத்தி, வெள்ளை அத்தி, ஆப்கான் அத்தி, நாட்டு அத்தி எனப் பலவகைகள் உண்டு. இவை கொண்டுள்ள இலை, பிஞ்சு, காய், பழம், பால், பட்டை என அத்தனை அவயவங்களும் உத்தம மான பயன்தருவிகள்.

**தோற்றம்**

அத்தி மரம் தென்கிழக்காசியாவை தாயகமாகக் கொண்டது. தற்போது உலகில் இலங்கை, இந்தியா, கிரீஸ், அல்ஜீரியா, சிரியா, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

**இனப்பெருக்கம்**

அத்தி மரம் வெட்டுத்துண்டங்கள், காற்றுப் பதி, ஒட்டுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது.


**நடுகை முறை**

அத்தியானது அனைத்து வகையான நிலங்களிலும் வளரக்கூடியது. ஆனாலும் உவர் நிலப் பிரதேசங்கள் இந்தச் செய்கைக்கு ஏற்றதல்ல. களி நிலம் மற்றும் ஆற்றுப்படுக்கைகளில் சிறப்பாக வளரும் தன்மை கொண்டது. இது வறட்சியான காலநிலையைத் தாங்கி வளரக்கூடியது.

> “எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நிலைநாட்டுபவர் ஆவார்.”

**பயன் தரும் காலம்**

25 வருட ஆயட்காலத்தைக் கொண்டது. நாட்டு அத்தி நடுகை செய்து மூன்றாவது ஆண்டிலிருந்து பலனைத் தரக்கூடியது. ஓராண்டில் 3 ஆயிரம் பழங்களை ஒரு மரத்திலிருந்து அறுவடையாகப் பெற்றுக்கொள்ளலாம்.




**போசணைப் பெறுமானம்**

100 கிராம் அத்திப்பழத்தில் அடங்கியுள்ள போசணைக் கூறுகளையும் அதன் பெறுமானங்களையும் நோக்கின், அவற்றுள் நீர் 12.6 வீதம், காபோவைதரேற் 49 வீதம், புரதம் 7.4 வீதம், கொழுப்பு 5.6 வீதம், கனிப் பொருள் 7.5 வீதம், நார்ப்பொருள் 17.9 வீதம் என்ற வகையில் காணப்படுகின்றன.

**பயன்பாடு**

கண்களின் பார்வையைக் கூட்டும் விற்றமின் 'ஏ', நிக்கோடினிக் அமிலம், அஸ்கோபிக் அமிலம் போன்றவை அத்திப் பழத்தில் அதிகளவில் அடங்கியிருக்கின்றன.

ஏனைய பழங்ளைக் காட்டிலும் அத்திப் பழத்தில் 2 முதல் 4 மடங்கு அதிகமாக தாது உப்புகளும், சத்துப் பொருள்களும் அடங்கியிருக்கின்றன. இரும்புச் சத்து அத்திப் பழத்தில் அதிகமாக இருப்பதால், இதைத் தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு குருதிச் சோகை நோய் ஏற்படாது. குருதி உற்பத்தி அதிகரித்து நோய் எதிர்ப்பாற்றல் உடலில் அதிகரிக்கும்.



இலைகளை உலரவைத்து அவற்றைத் தூளாக்கி தேனில் கலந்து சாப்பிட்டால் பித்தம், பித்தத்தால் வரும் நோய்கள் குணமடையும்.

மரத்தின் பட்டையை இரவில் உலர வைத்து, காலையில் குடிநீராகக் குடித்தால் வாத நோய், மூட்டு வலிகள் குணமாகும். புண்களைக் கழுவிச் சுத்தம் செய்யும் வெளி மருந்தாகவும் இதனைப் பயன்படுத்தலாம்.

அத்திப்பழம், அத்திப்பிஞ்சு, அத்திக்காய் மூன்றையும் சமைத்துச் சாப்பிடுவதன் மூலம் சிறுநீரக நோய்களைக் குணப்படுத்த முடியும்.

தினசரி 2 பழங்களைச் சாப்பிட்டால் உடலில் குருதி உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்.

கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப் பழங்களை வினாகிரியில் ஒருவாரம் வரை ஊற வைத்து அதனைத் தினமும் இரண்டு பழங்கள் வீதம் ஒரு வேளை சாப்பிடலாம்.

ஆஸ்துமா, வலிப்பு நோய், உடல் உளைச்சல், சோர்வு, அசதி, இளைப்பு போன்றவற்றை நீக்கி மிகச் சிறந்த பலனைத் தருகிறது.

# ஒக்ரோபர் மாதத்துக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீதான பணவீக்கம் நடப்பாண்டின் ஒக்ரோபர் மாத காலப் பகுதியில் சிறிய அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதெனத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 8.6 வீதமாக இருந்த பணவீக்கம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் சிறிய அதிகரிப்பினை வெளிக்காட்டி 8.8 வீதமாகப் பதிவாகியுள்ளது.

மேலும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பற்றிய அறிக்கையில் பின்வரும் விட யங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.


நடப்பு வருடத்தின் ஒக்ரோபர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப்பிரிவுகளிலிருந்து பணவீக்கப் பங்களிப்புகள் முறையே 6.4 வீதம், 2.4 வீதமாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் உணவுப் பொருள்களில் நிலவிய ஆகக் குறைந்த விலை மட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் பணவீக்கத்துக்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 2.3 வீதம், 2.8 வீதமாகக் காணப்படுகிறது.

செப்ரெம்பர் மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 122.3 ஆக காணப்படுகிறது. இருப்பினும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது கடந்த ஒக்ரோபர் மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் செப்ரெம்பர் மாதத்தில் பதிவாகிய சுட்டெண் பெறுமதி 122.3 இருந்து அதிகரித்து 124.8 ஆகப் பதிவாகியுள்ளது.

இதனை செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது ஒக்ரோபர் மாதத்தில் 1.5 சுட்டெண் புள்ளி அல்லது 1.2 சதவீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது. உணவுப் பொருள்களின் செலவுப் பெறுமதி 1.12 வீதமாகவும், உணவல்லாப் பொருள்களின் செலவுப் பெறுமதி 0.08 வீதமாகவும் அதிகரித்தமையே இந்த மாதம் மீதான மாற்றங்களுக்கான காரணமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், கடந்த ஒக்ரோபர் மாதத்தில் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணமாக 'உணவகமும் ஹொட்டல்களும்', 'வீடமைப்பு', 'நீர்', 'மின்வலு', 'எரிவாயு', 'அற்ககோல் பானங்கள்', 'புகையிலை மற்றும் தியக்க மருந்துகள்', 'நானாவிதப் பொருள்களும் சேவைகளும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்புகள் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

அதேபோன்று தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதிகள் புதிய மீன், முட்டை, உருளைக்கிழங்கு, மாம்பழம், கருவாடு மற்றும் கோழி இறைச்சி என்பன குறித்துப் பதிவாகியுள்ளன. (ஒ)




# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றமில்லை

## சமனிலையை பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்

சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக்கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்தக்கூடிய கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை தீர்மானித்துள்ளது.

நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித்தன்மை காணப்படுவதான தகவல்களும் தீர்மானமாக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7.25 மற்றும் 8.75 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

யாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.5 சதவிகிதமாக பேணப்படும் எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் பணக்கொள்கை தொடர்பான அடுத்த விவர அறிக்கை வருகின்ற டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்படும். (ஒ)

# ‘கங்கை’

## கைலயம் பெருமான் சடாமுடியிருந்து பாவ விமோசனம் தரும் நங்கை

இரா.நிஷாந்தன்



இந்து சமய நூல்கள் ஏழு புனித நதிகள் இருப்பதாக குறிப்பிடுகின்றன. கங்கை,காவேரி, யமுனை, சிந்து, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி என அவை சிறப்புறுகின்றன. அவற்றுள் மகத்துவமும், தனிச் சிறப்பும் வாய்ந்ததாக கங்கை நதி திகழ்கிறது. சிவபெருமானின் சடாமுடியில் இருப்பதாலும், பாவங்களைப் போக்குவதாலும் இத்தகு தன்மையை அது பெற்று விளங்குகிறது. தேவலோகத்தில் செழித்துப் பிரவாகித்திருக்கும் கங்கையைப் பூமிக்கு பகீரதன் என்பவன் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு கொண்டு வந்தான் என்பது வரலாறு. அது பற்றி இங்கு நோக்குவோம்.

### சகரன் மேற்கொண்ட அஸ்வமேத யாகம்

இராமபிரானின் முன்னோர்களில் ஒருவரான சகரன் எனும் பெயருடைய மன்னன் தன் ஆளுகைக்குட்பட்ட நாட்டினைச் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். தன் நல்லாட்சி கொண்டு பல யாகங்களை முடித்து, நூறாவது அஸ்வமேத யாகத்தைச் செய்திட முடிவெடுத்தான். நூறு அஸ்வ மேத யாகங்களை ஒருவன் செய்து முடித்தால் அவனுக்கு இந்திர பதவி கிடைக்கப் பெறும் என்பது நம்பிக்கையாகவும் இருந்தது. இதனால் இந்திரன் எவரையும் நூறு அஸ்வ மேத யாகங்களை செய்வதற்கு அனுமதிப்பதில்லை.

எப்படியேனும் ஓர் தடையை ஏற்படுத்தி விடுவான். இந்த நிலையில், இந்திரன் அந்த யாகத்தின் குதிரையை கவர்ந்து சென்று பாதாள உலகத்தில் விட்டுச் சென்றான். அங்கு கபிலர் எனும் முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் அருகாகச் சென்று அந்தக் குதிரை நின்றிருந்தது. யாகத்தின் குதிரையைக் காணாது கலக்கமுற்ற சகரன் தன் அறுபதினாயிரம் புதல்வர்களை அழைத்தான். யாகத்தின் குதிரையை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து வரும்படி அவர்களைப் பணித்து,வழியனுப்பி வைத்தான்.

### சகர புத்திரர்கள் கபிலரின் சாபத்தால் சாம்பலாதல்

சகர புத்திரர்களும் பூமி முழுமையுமாக தேடி அலைந்தனர். இறுதியில் பாதாள லோகத்துக்குச் சென்றனர். கபில முனிவர் ஆச்சிரமத்தை அடைந்தனர். அங்கு அவர் அருகாகவே யாகத்தின் குதிரை நின்றிருப்பதைக் கண்டுகொண்டனர். கபில முனிவரே யாகத்தின் குதிரையை திருடி வந்ததாக தவறான எண்ண மேலீடு கொண்டு, அவரை தாக்குவதற்கு சகர புத்திரர்கள் முற்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்திலே கபில முனிவர் தன் விழிகளைத் திறந்தார். அக்கணமே அறுபதினாயிரம் சகர புதல்வர்களும் சாம்பலாகிப் போயினர்.

> “ சிறப்புப் பெறும், கங்காதேவி நதியாக இருந்தாலும் அவளும் தெய்வீகத் தன்மை உடையவளாகவே கருதப்படுகிறாள். அதன்படி நான்கு கரங்கள் கொண்டவராக, வெள்ளைச் சேலை உடுத்தி, முதலை வாகனத்தில் காட்சியளிக்கிறாள். மகாபாரத்தில் பிதாமகர் பீஸ்மரின் தாயாக குறிப்பிடப்படுகின்றாள். மேலும், திருமால் வாமன அவதாரத்தில் நெடுமாலாக வளர்ந்து மூவுலகங்களையும் தன் பாதங்களால் அளக்கும் போது, அவரது திருவடி சத்தியலோகம் வரை சென்றது.

### அன்சுமான் சகர புத்திரர்களை தேடிச் செல்லல்

குதிரையைத் தேடிச் சென்ற தன் புதல்வர்களைக் காணாத சகரன், அவர்கள் நிலை குறித்து அறிந்து வருவதற்கு, தன் பேரனாகிய அன்சுமான் என்பவனை அனுப்பி வைத்தான். அவன் பாதாள லோகம் சென்று கபில முனிவர் ஆச்சிரமத்தை அடைந்து, அங்கு நடந்தவற்றை அறிந்து கொண்டான். கபில முனிவரைத் தலைவணங்கி பணிந்து கொண்டான். “தங்கள் மூலம் எரிந்து சாம்பலான, என் உறவினர்கள் மோட்சம் பெறுவதற்கு வழியினைக் கூற வேண்டும்.” எனப் பணிவுடன் வேண்டி நின்றான்.

அதற்கு கபில முனிவர் பதிலுரை வழங்கினார். “சகர புத்திரர்கள் நற்கதி அடைய வேண்டுமெனில் கங்கை நீரில் அவர்களின் சாம்பலைக் கரைத்துவிட வேண்டும். அப்படிக் கரைத்தால் மட்டுமே அவர்கள் மோட்சம் அடைவதென்பது சாத்தியமாகும்.” எனக் கூறினான்.

### சகரன் கங்கையை வேண்டி தவமியற்றல்

அஞ்சுமானும் முனிவரின் வார்த்தைகளை ஏற்றுப் பணிந்து குதிரையை அழைத்துக்கொண்டு பூலோகத்தினை அடைந்தான். சகரனிடத்தில் சென்று நடந்தவை பற்றி எடுத்துரைத்தான். அதன்படியே சகரன் கங்கையை பூமிக்கு அழைத்து வரும் வகையில் தவம் செய்தான். ஆயினும் அவன் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. முயற்சியைத் தளரவிடாது திலீபன் என்பவனும் கங்கையை கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டான். அவனுடைய முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

### பகீரதனின் தவமியற்றலும் கங்கா தேவியின் அருளும்

இந்தநிலையிலே அவனது புதல்வனான பகீரதன் கங்கையை பூமிக்கு கொண்டு வந்து தன் முன்னோர்களுக்கு நற்கதி அளிக்க வேண்டும் எனும் முயற்சியில் இடையறாது ஈடுபட்டான். கங்கா தேவியை வேண்டிப் பல காலமாக கடும் தவம் புரிந்தான். அவனது தவ வலிமை கண்டு கங்கா தேவி மகிழ்வடைந்தாள். அவன் முன்பாகத் தோன்றி அவன் விருப்பம் யாதென வினவினாள். அதற்கு பகீரதன், “தாயே…! கபில முனிவரால் எரிக்கப்பட்டு சாம்பலாகிய என் முன்னோர்களை நற்கதி பெறச் செய்யும் பொருட்டு, தாம் பூமிக்கு வந்து அருள் புரிய வேண்டும் என வேண்டினான்.” பகீரதனின் வேண்டுதலை கங்கா தேவி ஏற்றுக் கொண்டாள். பகீரதனை விழித்து, “நான் உன் விருப்பத்தை நிறைவேற்றுகின்றேன். ஆனால், அதன் போது இரு விடயங்களை நீ கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று, நான் ஆகாயத்திலிருந்து நேரடியாக அதி வேகத்துடன் பூமியை நோக்கி வர வேண்டி இருக்கும். இதனால் பூமியானது என் வேகத்தைத் தாங்கிக் கொள்ளாது. எனவே என்னை இடையில் தாங்கி அதன் பின் பூமியில் விட வேண்டும்.




என்னைத் தாங்கும் சக்தி படைத்தவர் சிவப் பரம்பொருள் ஒருவரேயாவார். எனவே அவரிடம் இதற்கான சம்மதத்தை பெறவேண்டும். இரண்டாவது, நான் பூமயில் ஓடும் போது மக்கள் என்னில் நீராடி தங்கள் பாவங்களை போக்கிக் கொள்வர். ஆனால் அப்பாவங்கள் என்னில் நிறைந்து கொள்ளும். அதனை நான் எவ்வாறு நீக்கிக் கொள்வது…?” என கங்காதேவி வேண்டி நின்றாள்.

காங்கா தேவி கூறிய அத்தனை விடயங்களையும் கேண்மையுற்ற பகீரதனும் பதிலுரை மொழிந்தான், “தாயே….! பகவானது தீரா அடியவர்களான எண்ணற்ற முனிவர்கள், யோகிகள் என்போர் பக்தியோடு தங்களிடம் நீராடுவார்கள். அவர்கள் மூலம் உங்கள் தோசமானது நீங்கிவிடும். அத்துடன் நான் எம்பெருமானை நினைந்து இக்கணமே தவம் இருந்து அவருடைய அனுக்கிரகத்தைப் பெறுகின்றேன்.” எனக் கூறினான்.

### பகீரதன் சிவபெருமானை வேண்டி தவமியற்றல்

அதன்படி பகீரதன் எம்பெருமான் சிவப் பரம்பொருளை நினைந்து தவம் புரிந்தான். ஈசனும் அவனது தவத்தைக் கண்டு மகிழ்ந்தான். அவன் முன்பாகத் தோன்றி அவனது விருப்பத்துக்கு அமைவாகவே கங்கையை தன் சடாமுடியில் தாங்குவதாக வரம் தந்தார். பகீரதன் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் கங்கா தேவியின் வருகைக்காக காத்திருந்தான். கங்காதேவியும் தேவலோகத்தில் இருந்து, பூமியை நோக்கி இறங்கி வந்தாள்.

சிவபெருமானும் பகீரதனின் தவ வலிமைக்கு தான் வழங்கிய வரத்தின் படியே, கங்கா தேவியை தன் சடாமுடியில் தாங்கிக் கொண்டார். பின்பு அதன் ஒரு பகுதியை மட்டுமே மெதுவாக பூமியிலே செழிப்பின் பெருக்காக பிரவாகிக்கச் செய்தார். பகீரதனும் கங்காதேவியை பணிந்தான். பலவாறாகப் புகழ்ந்துபாடி தன் பின்னால் தொடர்ந்து வரவேண்டும் என வேண்டினான். கங்கையும் அதன்படியே பகீரதனைப் பின் தொடர்ந்து பாதாளலோகத்தை சென்றடைந்தது. அங்கு கபில முனிவரின் ஆச்சிரமத்தில் சாம்பல் குவியாலாக இருந்த சகர புத்தி ரர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டது. கங்கை நீரானது பட்டதும் அக்கணமே சகர புத்திரர்களும் விமோசனம் பெற்று நற்கதி அடைந்தனர். இவ்வாறு தன் விடா முயற்சியினால் கங்கையை பூமிக்கு கொண்டு வந்த தன்மையையே “பகீரதப் பிரயத்னம்” என அழைக்கின்றனர். இன்றும் கங்கை நதியானது இடைவிடாது ஓடிக் கொண்டிருக்கிறது.

### கங்கா தேவி கொண்ட தெய்வீகம்

இவ்வாறு சிறப்புப் பெறும், கங்காதேவி நதியாக இருந்தாலும் அவளும் தெய்வீகத் தன்மை உடையவளாகவே கருதப்படுகிறாள். அதன்படி நான்கு கரங்கள் கொண்டவராக, வெள்ளைச் சேலை உடுத்தி, முதலை வாகனத்தில் காட்சியளிக்கிறாள். மகாபாரத்தில் பிதாமகர் பீஸ்மரின் தாயாக குறிப்பிடப்படுகின்றாள். மேலும், திருமால் வாமன அவதாரத்தில் நெடுமாலாக வளர்ந்து மூவுலகங்களையும் தன் பாதங்களால் அளக்கும் போது, அவரது திருவடி சத்தியலோகம் வரை சென்றது.

அப்போது அங்கு வாசம் செய்யும் பிரம்மதேவர் கங்கை நதியால் திருமாலின் பாதங்களை அபிசேகம் செய்தார் எனவும், சிவபெருமானது நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட தீப் பொறிகளை கங்காதேவியே சுமந்து சென்று சரவணப் பொய்கையில் விட்டாள் எனவும் புராணங்கள் கருத்துரைக்கின்றன.

### இறையுணர்வோடு பக்தி செய்வோம்

இத்தகைய தன்மைகள் பொருந்திய கங்கை நதி இன்றும் பூமியில் நிலைபெற்று, இடைவிடாது ஓடிக் கொண்டிருக்கிறது. அக் கங்கையில் நீராடும் மானிடர்களின் பாவங்களைப் போக்கும் தெய்வீகத் தன்மை கொண்டவளாகவும் விளங்குகிறாள். மேலும், பகீரதி, தெய்வநதி, வரநதி, பாலகங்கை எனும் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறாள். சிவபெருமானின் சடாமுடியில் இருப்பதனால் சிவபெருமானின் விருப்பத்துக்கு உரியவளாகவும் திகழ்கிறாள். ஆக, கங்கை நதியின் சிறப்பினை நாம் இத்தகைய தன்மைகளின் ஊடே கண்டு வழிபாடு இயற்றுவோம். இறையுணர்வோடு பக்தி செய்வோம்.

## செய்யாததைச் சொல்லாதே

**இஸ்லாமிய வெள்ளி**

எமது எண்ணங்கள், சொல், செயல் இவை அனைத்தும் இறைவழியில் அமைத்துக்கொள்வதே நேர்வழி பெறுவதற்கான அடையாளமாகும்.

'அறியாமை' என்ற இருள் இந்த அகிலத்தை சூழ்ந்திருந்த காலகட்டத்தில், 'மக்களிடமிருந்து அறியாமையை நீக்குங்கள் நபியே' என்று முகம்மது நபிக்கு (ஸல்) இறைவன் கட்டளையிட்டான். இந்த கட்டளையில் மிகமுக்கியமான கருத்து பொதிந்துள்ளது. அதாவது, 'தனி ஒருவன் மட்டும் நன்மைகளைச் செய்து, நல்லவனாய் வாழ்வது மட்டும் குறிக்கோள் அல்ல. தன்னைச் சார்ந்தவர்களையும், அந்த சமூகத்தையும் நன்மையின் பாதையில் அழைத்து வர வேண்டும்'. 'இறைவன் வகுத்த இந்த வழியில் செயலாற்றுபவர்கள் ஒருபோதும் நஷ்ட மடைய மாட்டார்கள்' என்பது இறைவனின் சொல்லாகும். இதையே திருக்குர்ஆன் 'மனிதன் உண்மையில் நஷ்டத்தில் இருக்கிறான். ஆனால், எவர்கள் இறை நம்பிக்கை கொண்டும்; நற்செயல்கள் புரிந்துகொண்டும்; மேலும், ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தும்; பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுரை கூறிக் கொண்டும் இருந்தார்களோ அவர்களைத் தவிர' என்று குறிப்படுகிறது. இறைவனின் இந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்ட நபிகளார், அதன்படி தான் மட்டும் வாழாமல், பிறருக்கும் அதனை எடுத்தறிவித்தார்கள். அதனால்தான் சீர்கெட்ட ஒரு சமுதாயம் சீர்மிகு சமுதாயமாக பரிமளித்தது என்பது வரலாற்று உண்மை.

ஒருமுறை பாவங்கள் மிகுந்த ஒரு கூட்டத்தினரை அழித்து விடுமாறு இறைவனின் கோபம் இறங்கியது. அப்போது, 'அந்த ஊரில் நல்ல மனிதர் ஒருவர் உள்ளார். அவரையும் சேர்த்தா அழிக்க வேண்டும்' என்று இறைவனிடம் கேட்கப்பட்டது.

அப்போது, 'தான் பெற்ற ஞானத்தை பிறருக்குச் சொல்லாமல் இருந்ததால் தான் அந்த சமூகம் இத்தனை பாவத்தில் ஆழ்ந்தது. தெரிந்தவர் சொல்லவில்லை என்றால், தெரியாதவர்கள் எப்படிச் சத்தியத்தை அறிந்து கொள்வார்கள்' என்றான்.

ஆனால் இன்றைய காலச்சூழ்நிலையில் எமது வாழ்க்கை எப்படி உள்ளது?. தனிநபர்கள், குடும்பத்தில் உள்ளவர்கள், ஊரில் உள்ளவர்கள், நாட்டில் உள்ளவர்கள், எம்மை வழிநடத்துபவர்கள் எப்படி இருக்கிறார்கள். சத்தியத்தை எடுத்துச் சொல்லி எம்மை நேர்வழியில் நடத்து கிறார்களா? என்றால், 'இல்லை' என்று தான் பதில் கிடைக்கும். ஏனென்றால் எம்மில் பலர் நேர்வழியில் இல்லை. ஆனால் அசத்தியத்தை, பொய்களை, புரட்டுகளை, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை தைரியமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். செய்யாததை சொல்வதும், சொல்லாததைச் செய்வதும் மிகப் பெரிய பாவம் என்று திருக்குர்ஆன் தெளிவுபடச் சொல்லுகிறது.

ஒருமுறை நபித்தோழர் ஒருவர் தான் மகனை அழைத்து, ஒரு செயலை செய்யச் சொல்லி ஏவிய போது, 'இதனைச் செய்தால், இதனைத் தருவேன்' என்று சொன்னார். அருகில் இருந்து இதனை கவனித்து கொண்டிருந்த நபிகள் நாயகம் (ஸல்), அவரை அழைத்து 'நண்பரே நீங்கள் சொல்வது நிஜம் தானே, நிச்சயமாக நிறைவேற்றுவீர்கள் தானே. ஏனென்றால் சிறிய செயலுக்காகக் கூட பொய்யான வாக்குறு தியை சிறுவர்கள் நெஞ்சில் விதைக்காதீர்கள். இதனால் அவன் வாழ்வு முறையே மாறிவிடும்' என்று கடிந்து கொண்டார்கள். தான் செய்யாததை பிறருக்கு செய்தியாக சொல்வது பெரும் பாவம் என்பதை எம்மில் பலர் அறிந்திருப்பதில்லை. அதனால் அதனை வெகு இலகுவாக எண்ணிக்கொண்டு, பாவம் என்றே அறியாமல் அந்தச் செயலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதையே திருக்குர்ஆன், 'நம்பிக்கையாளர்களே! நீங்கள் செய்யாத காரியங்களைச் செய்வேன் என்று அல்லது செய்ததாக ஏன் கூறுகின்றீர்கள்? இது அல்லாஹ்விடத்தில் பெரும் பாவமாக இருக்கின்றது' என்று குறிப்பிடுகிறது.

மொகமட் அமிர்

## தினமும் சொல்ல வேண்டிய ஸ்ரீ ஐயப்பன் நமஸ்காரம்

ஐயப்பனுக்கு உகந்த இந்த நமஸ்காரத்தை தினமும் இருவேளையும் சபரிமலை செல்லும் பக்தர்கள் பாடி வழிபாடு செய்து வர வேண்டும்.

1. அருணோதய ஸங்காசம் நீல குண்டலதாரிணம்
நீலாம் பரதரம் தேவம் வந்தேகம் பிரம்ம நந்தனம்


2. சாப பாணம் வாம ஹஸ்தே ரௌப்பிய வேத ரஞ்ச தக்ஷிணே
விலசத் குண்டல தரம் வந்தேகம் விஷ்ணு நந்தனம்

3. வியாக் ராரூடம் ரக்த நேத்ரம் ஸவர்ண மால விபூஷ்ணம்
வீர பட்டதரம் கோரம் வந்தேகம் பாண்டிய நந்தனம்

4. கிங்கிண் யொட்டியாண பூஷேஷம் பூர்ண சந்திர நிபானணம்
கிராத ரூபா சாஸ்தாரம் வந்தேகம் பாண்டிய நந்தனம்

5. பூத வேதாள ஸம்ஸேயம் காஞ்சனாத்ரி நிவாஸினம்
மணிகண்ட மிதிக் யாதம் வந்தேகம் சக்தி நந்தனம்





## வரலாற்றில் இன்றைய தினம் 24.11.2017

2012 - பங்களாதேஷின் ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 112 பேர் உயிரிழந்தனர்.

1965 - கொங்கோ அரச தலைவரானார் ஜோசப் முபுடு.
1966 - பல்கேரிய வானூர்தி ரப்சு101 செக்கோஸ்லோவாக்கியாவில் விபத்துக்கு உள்ளாகியதில் 82 பேர் உயிரிழந்தனர்.
1976 - துருக்கியின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர்.
1996 - 175 பயணிகளுடன் கடத்தப்பட்ட வானூர்தி இந்துமா கடலில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 57 பேர் உயிரிழந்தனர்.
1999 - மடுத் தாக்குதல் குறித்து மன்னிப்புச் சபை கவலை.
2006 - தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஊடகங்கள் மீது நடவடிக்கை தேவை. வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித கேரத் தெரிவிப்பு.
2006 - வடக்கு - கிழக்கு இணைப்பு பிரேரணையை அரசு கொண்டு வரவேண்டுமென்கிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன். தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற இது உதவும் எனவும் அவர் தெரிவிப்பு.
2016 - தப்பித்த ஈ.பி.டி.பியினர் லண்டனில் உள்ளனர். கூட்டமைப்பு மீதான தாக்குதல் வழங்கில் சாட்சியம்.
2016 - ஒதுக்கிய நிதியில் மூன்றில் ஒரு பகுதியே வடக்குக்கு வந்தது. இதை அரச தலைவரிடம் தெரிவித்தேன் என்கிறார் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

## கார்த்திகை மாத ராசிபலன்

**நவம்பர் 17 முதல் டிசெம்பர் 15 வரை**



### துலாம்:

துலாம் ராசி அன்பர்களே!

இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் மட்டுமே அனுகூலமான பலன்களைத் தருவார். மற்ற கிரகங்களின் சஞ்சாரம் சரியில்லை என்பதால், அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. கூடுமானவரை மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சனிப்பெயர்சிக்குப் பிறகு துலாம் ராசி அன்பர்களுக்கு நல்லநேரம்தான். பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் ஒரு முறைக்குப் பலமுறை முயற்சி செய்துதான் முடிக்கவேண்டி இருக்கும். ஆனால், சுக்கிரன் சாதகமாக இருப்பதால், புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டாகும். கணவன் மனைவி இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். அரச விவகாரங்கள் சாதகமாக முடியும். குருபகவானின் பார்வைகள் சாதகமாக இருப்பதால், திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகள் நல்லபடி நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆனால், ஜன்ம குரு என்பதால், உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம்.

**உத்தியோகத்தர்களுக்கு:** அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எந்த ஒரு வேலையையும் சற்று கஷ்டப்பட்டுத்தான் முடிக்கவேண்டி இருக்கும். தீவிர முயற்சியின் பேரிலேயே உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்களால் ஓரளவு உதவி உண்டு.

தொழில், வியாபாரத்தில் கூடுதலாக உழைக்க வேண்டும். ஆனால், அதற்கேற்ற ஆதாயம் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. பங்குதாரர்களால் வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் அரச வகையில் எதிர்பார்க்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

**கலைத்துறையினருக்கு:** பெரிய நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புகழும் மதிப்பும் அதிகரிக்கும். ரசிகர்களிடம் உங்கள் செல்வாக்கு கூடும். சிலருக்கு விருதுகளும் பட்டங்களும் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் இருந்த தேக்க நிலை மாறும். பாடங்களை ஆர்வத்துடன் கவனிப்பீர்கள். ஆசிரியர்களின் கேள்விகளுக்கு உரிய பதில்களைக் கூறி, பாராட்டு பெறுவீர்கள். ஆனாலும், நண்பர்களிடம் பழ கும் போது கவனம் தேவை.

## நாளை

**25.11.2017**
சனிக்கிழமை

**கார்த்திகை 09**

திதி: ஸப்தமி பி.இ. 05.47 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப. 10.09 வரை
சுபநேரம்: 03.12–04.42 வரை
ராகுகாலம்: 09.12–10.42 வரை

# ஹரிஸ் - ரைசா இணையும் படத்தின் பெயர் வெளியீடு



'பிக்பாஸ்' புகழ் ஹரிஷ் கல்யாண் மற்றும் ரைசா இணையும் புதிய படத்தின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் பலரினும் அபிமானத்தை ஹரிஷ் கல்யாண் மற்றும் ரைசா ஆகியோர் வென்றிருந்தனர். இவர்களை வைத்து புதிய திரைப்படம் ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. இந்தப் படத்தின் பெயர் வெளியிடப்படாமல் இருந்த நிலையில் 'பியார் பிரேமா காதல்' என தலைப்பிடப்பட்டுள்ளது. சுவாரஷ்யமான காதல் கதையைக் கொண்டமைந்ததாக படம் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சினிமா

## மனதைக் கவர்ந்த வாசகங்கள்

- பேசி தீருங்கள். பேசியே வளர்க்காதீர்கள்.
- உரியவர்களிடம் சொல்லுங்கள். ஊரெல்லாம் சொல்லாதீர்கள்.
- நடப்பதைப் பாருங்கள். நடந்ததைக் கிளறாதீர்கள்.
- உறுதி காட்டுங்கள். பிடிவாதம் காட்டாதீர்கள்.
- விவரங்கள் சொல்லுங்கள். வீண்வார்த்தை சொல்லாதீர்கள்.
- தீர்வை விரும்புங்கள். தர்க்கம் விரும்பாதீர்கள்.
- விவாதம் செய்யுங்கள். விதண்டாவாதம் செய்யாதீர்கள்.
- விளக்கம் பெறுங்கள். விரோதம் பெறாதீர்கள்
- சங்கடமாய் இருந்தாலும் சத்தியமே பேசுங்கள்.
- செல்வாக்கு இருந்தாலும் சரியானதைச் செய்யுங்கள்.
- எதிர் தரப்பும் பேசட்டும். என்னவென்று கேளுங்கள்.
- நேரம் வீணாகாமல் விரைவாக முடியுங்கள்.
- வாழ்க்கை குறுகியது. ஆனால் அழகானது...



நம்மட்ட யாராவது இங்கிலிஷ்ல பேசும்போது நமக்கு இங்கிலிஷ் வரலைனா கூடப் பரவாயில்லை...



சிரிப்பு வந்து தொலையுது...

ஆகச்சிறந்த ரவுத்தனம் என்னன்னா....



சண்டையைக் கண்டுக்காம போறதுதான்....

You Retweeted
சிதுறல்கள் @mujib989898 · 18h

கல்யாணம் என்றாலும் ஆட்டம்தான்
கருமாதி என்றாலும் ஆட்டம்தான்
ஜெயித்தாலும் ஆட்டம்
தோற்றாலும் ஆட்டம்
யாரோ ஒருவரின் வெற்றியிலும் தோல்வியிலும் இன்னொருவருக்கு சந்தோசம் இருக்கத்தான் செய்கிறது

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நேர்மை, நியாயத்தை பின்பற்றுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற கடினமாக உழைப்பீர்கள். குடும்பத்தினரின் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**இடபம்:** பணியில் அதிக கவனம் தேவை. எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதமாகலாம். தொழில், வியாபார ரகசியங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம்.

**மிதுனம்:** பிறரது செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபார பிரச்சினை குறுக்கிட்டாலும், பணவரவு சீராகக் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** வெகுநாள் திட்டம் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** பணியில் ஆர்வம் அதிகரிக்கும். வியத்தகு அளவில் வாழ்வில் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். சொத்து வாங்க அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** பொது விஷயம் குறித்து விவாதம் வேண்டாம். உடல்நலனில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உடலுக்கு சீரான ஓய்வு தேவை.

**துலாம்:** பகைவரிடம் விலகி இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்கும் நிலை உருவாகலாம்.

**விருச்சிகம்:** தாயின் அன்பு, ஆசியும் கிடைக்கப் பெறுவீர்கள். தாமதமான செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும்.

**தனுசு:** நினைத்த செயல் தாமதமாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மகரம்:** நண்பருடன் முக்கியமான ஆலோசனை செய்வீர்கள். தாமதித்த பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** சமூக மதிப்பை காப்பதில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில் தவிர்க்க இயலாத செலவு ஏற்படலாம்.

**மீனம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

கப்பல் மாதிரி வீடு அவ்வளவு பெரிசா?



இல்ல மழை பெய்தால், சுத்தி தண்ணி நிற்கும்...

## சுடோக்கு

எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | | | | | | |
| | | | | | 5 | | | |
| | | 5 | | 4 | | [illegible] | 9 | |
| | | 3 | 5 | | 8 | [illegible] | | 6 |
| | | | | | | | | |
| 8 | | 1 | 3 | | 2 | 7 | | |
| | 7 | 6 | | 2 | | 8 | | |
| | | | 4 | | | | | |
| | | | | | | 9 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 4 | 7 | 3 | 6 | 2 | 9 |
| 7 | 4 | 2 | 1 | 6 | 9 | 3 | 8 | 5 |
| 6 | 3 | 9 | 8 | 2 | 5 | 7 | 4 | 1 |
| 4 | 9 | 1 | 7 | 5 | 2 | 8 | 3 | 6 |
| 3 | 5 | 7 | 6 | 1 | 8 | 4 | 9 | 2 |
| 8 | 2 | 6 | 3 | 9 | 4 | 1 | 5 | 7 |
| 9 | 1 | 4 | 5 | 3 | 7 | 2 | 6 | 8 |
| 2 | 6 | 8 | 9 | 4 | 1 | 5 | 7 | 3 |
| 5 | 7 | 3 | 2 | 8 | 6 | 9 | 1 | 4 |

## உடல் உறுப்புக்களின் பெயர்களை எழுதுவோம்

தலை, கண், மூக்கு, காது, வாய், கழுத்து, மார்பு, வயிறு, கை, விரல், கால், பாதம்




### இரு படங்களுக்கும் இடையேயும் 8 வேறுபாடுகள் உள்ளன; கண்டு பிடியுங்கள்



# பாதையை மாற்றிய பாசம்

சுப்பிரமணியம் ஒரு பொலிஸ் அதிகாரி. இவருக்கு சிவா என்ற மகனும், சுகி என்ற மகளும் இருந்தனர். சிவா மூத்தவன். உயர்தரம் வகுப்புப் படிக்கிறான். சுகி இளையவள் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறாள். சிவாவுக்கு சிறு வயதிலிருந்தே திருடும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. தகப்பனின் சேட், காற்சட்டை மற்றும் ஜீன்ஸ் பைகளில் தான் அவன் தனது விளையாட்டைக் காட்டி வந்தான். பணத்தை எடுத்து மனம் போன போக்கில் செலவழிப்பான். சிறு வயதில் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று எடுப்பதில் தொடங்கிய அவனது இந்தத் திருட்டுப் பழக்கம் பெரியவனானதும் இருபது, ஐம்பது ரூபா என்று போய்க்கொண்டிருந்தது. தகப்பதும் தனது சட்டைப் பையிலிருந்து காணாமல் போகும் ஒரு ரூபாய், இரண்டு ரூபா திருட்டுக்களை எல்லாம் கண்டு கொள்ளவில்லை. இருபது, ஐம்பது என்று காணாமற் போக ஆரம்பித்த போதுதான் விழித்துக் கொண்டார். ஆனால் தனது சட்டைப் பையில் இருந்து பணத்தை திருடுவது தன் மகன் தான் என்பதை அவர் உணரவேயில்லை.

ஆனால் தந்தையின் சட்டைப் பையில் சிவா திருடுவது தங்கை சுகிக்குத் தெரியும். ஆனாலும் அவள் அதனைத் தந்தையிடம் சொல்லாமல் மறைத்து வந்தாள். காரணம் அண்ணன் மேல் அவளுக்குக்கும் பாசம் மேலும் மூர்க்கக் குணம் கொண்ட தனது தந்தை இடுப்புப் பட்டியை உருவி சிவாவின் முதுகுத் தோலை உரித்து விடுவாரோ என்கிற பயம். அதே நேரம் சிவாவின் சிந்தனை வேறு விதமாக இருந்தது. "சிறு வயதிலிருந்தே திருடுகிறேன். இதுவரை பிடிபடவில்லை. ஆனால் எப்போதோ ஓர் நாள் பிடிபடத் தான் போகிறேன். அப்போது நான் சிறு வயது முதல் திருடும் விடயமெல்லாம் தெரிய வரத்தான் போகிறது. அதற்குள் நான் முந்திக் கொண்டு ஒரு முடிவு எடுக்க வேண்டும்" என நினைத்துக் கொண்டான். ஒருநாள் சிவா தந்தையின் சட்டைப் பையில் இருந்து 50 ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்து தங்கை சுகியின் பாடப் புத்தகம் ஒன்றினுள் மறைத்து வைத்து விட்டான். பின்னர் ஒன்றும் அறியாதவன் போல் தனது பாடங்களைப் படிக்கத் தொடங்கினான்.

அப்போது தந்தை தனது சீருடையை மாட்டிக்கொண்டு அலுவலகம் புறப்பட்டவர் 50 ரூபாயைக் காணாது திகைத்தார். அவருக்கு கடும் கோபம் வந்தது. சிவா... சிவா... எனக் கத்தினார். சிவா தந்தையிடம் ஓடிவந்தான். தந்தை ஐம்பது ரூபாய் பணத்தைக் காணவில்லை, நீ பார்த்தாயா? என்றார். கண்கள் சிவக்க "இல்லை அப்பா நான் பார்க்கவில்லை.. ஆனால்..." என்று இழுத்தான். "ஆனால் என்ன?" "சுகி உங்கள் சட்கைடைப் பையில் விட்டதை நான் பார்த்தேன்" என்றான். இதைவீட்டில் எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவனோ தங்கையின் புத்தக அலுமாரி,



படிக்கும் மேசை போன்றவற்றில் பணத்தைத் தேடுவது போல பாவனை செய்தான். சிறிது நேரத்தின் பின்னர் தங்கையின் புத்தகம் ஒன்றில் பணம் இருப்பதாக கூறிக் கொண்டுதந்தையிடம் அந்தப் புத்தகத்தைக் கையளித்தான். பணத்தை அவள் புத்தகத்தில் பார்த்த தந்தை "சுகி... சுகி" என கத்தினார். தோட்டத்தில் பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றுவதை விட்டு விட்டு பதறி அடித்து ஓடி வந்து தந்தை முன் நின்றாள் சுகி.

"எத்தனை நாளாய் உனக்கு இந்த திருட்டுப் பழக்கம்" என்று கத்தியபடி புத்தகத்தையும் பணத்தையும் அவரிடம் காண்பித்தார் தந்தை ஒரு நொடியில் இது தனது அண்ணனின் வேலைதான் என்பதை உணர்ந்தான். ஆனாலும் மௌனமாக நின்றாள். அவள் தாயோ பயந்தபடி அவளருகில் நெருங்கி ஏதோ சொல்லவர" அவனது தந்தையோ தன் இடுப்புப் பட்டியைக் கழற்றி சொரீர் சொரீர் என நான்கு ஐந்து முறை தமது மகளை அடித்தார். தாய் தடுத்தும் அது நடந்தே விட்டது."பெட்டைப் பிள்ளைக்கு இத்தனை திருட்டுப் புத்தி, சே எவ்வளவு கேவலமான விடயம். இனி இப்படி நடந்தால் தோலை உரித்து விடுவேன்" என்று கத்தியபடி தந்தை வெளியேறினார்.


தான் செய்த குற்றத்தைக் காட்டிக்கொடுக்காமல் தங்கை அடி வாங்கியதைக் கண்டு சிவா குற்ற உணர்ச்சியால் குறுகிப் போனான். உடனடியாக தங்கையிடம் சென்று எதற்காக அவள் மறுப்புத் தெரிவிக்கவில்லை எனக் கேட்டான். "நீ எனக்கு அண்ணன். நீ அடி வாங்குவதைப் பார்க்க என்னால் முடியாது. அதலால் தான் பழியையும் அடிகளையும் நான் வாங்கிக் கொண்டேன்" என்றாள் சுகி. அவளது வார்த்தைகளைக் கேட்ட சிவாவின் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொல என வழிந்தது. "என்னை மன்னித்து விடு சுகி. இனி என் வாழ்நாளில் சத்தியமாகத் திருட மாட்டேன்" என்றான் அவன். இருவரையும் தாய் பரிவுடன் கட்டியணைத்துக் கொண்டாள்.



# பக்ரீரியாக்களும் பென்சிலினும்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதன் நோய்களுக்கு ஆழாகக் காரணமாக இருப்பவை பக்ரீரியாக்கள், வைரஸ்கள், காளான்கள் போன்ற நுண்ணுயிர்கள். பக்ரீரியாக்கள் என்பவை ஒரே செல்லையுடைய கண்ணுக்குப் புலனாகாத ஒருவகை உயிரினங்களாகும். இவை மிகவும் நுண்ணியவையாகும். ஆனால் இவற்றின் செயல்களோ எதிர்மாறானவை. இவற்றில் சில நோய்களையும் சில நேரங்களில் உயிரிழப்பையும் விளைவிக்கும் அளவுக்கு பயங்கரமானவை. மனிதனுக்கு நன்மை செய்யும் பக்ரீரியாக்களும் உள்ளன. நாம் பருகும் நீர், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு போன்ற பல வகைப் பொருள்களிலும் இவை உள்ளன. இவற்றைச் சாறுண்ணிகள், ஒட்டுண்ணிகள் என இரு வகையாகப் பிரிப்பர். வாயு மண்டல நைதரசனை நிலைப்படுத்தி தாவரங்களுக்கு உரமாகப் பயன்படச் செய்தல், பாலைப் புளிக்கச் செய்தல், தோலைப் பதனிடுதல், புகையிலையைப் பதப்படுத்துதல், மதுபானங்களைப் புளிக்கச் செய்தல் முதலியவை சாறுண்ணிகளின் வேலையாகும்.

டைஃபாய்டு, எலும்புருக்கி நோய், கொலரா, தொழுநோய் போன்ற கொடிய நோய்கள் ஒட்டுண்ணி பக்ரீரியாக்களின் வேலையாகும். உடலில் புகுந்த பக்ரீரியா வெகு எளிதாக இனப் பெருக்கம் செய்கிறது. இவற்றின் உடலில் வளர்ச்சி மாற்றத்தின் விளைவாக ஏற்படும் நஞ்சுப் பொருள்களால் மனிதன் நோயுறத் தொடங்குகிறான். கிருமிகள் மேலும் மேலும் பெருகி அதிகப்படியான நஞ்சுப் பொருள்களைச் சுரக்கின்றன. இதனால் நோய் கடுமையாகிறது. கடைசியில் உடல் அளிக்கும் சகல எதிர்ப்புக்களையும் கிருமிகள் அழித்து விடுவதால் போதுமான அளவு நஞ்சு உண்டாகி இறப்பு சம்பவிக்கவும் செய்யும். எமது உடலிலுள்ள குருதியிலும் நிணநீரிலும் உள்ள வெண்ணணுக்கள் நோயை எதிர்க்கின்றன. இவை நோயை உண்டாக்கும் பக்ரீரியாக்களைச் சூழ்ந்து அழிக்கின்றன. இதனால் உடல் நிலை தேறும். சேர் அலெக்ஸ்சாண்டர் பிளமிங் என்ற அறிவியல் அறிஞரே, பென்சிலின், பக்ரீரியாக்களை அழிக்க வல்லது என்று கண்டுபிடித்தார். பென்சிலின் நிமோனியா, டிப்தீரியா, ஆந்திராக்ஸ் டெட்டனஸ், தொண்டைப் புண் போன்ற நோய்களைக் குணப்படுத்துகிறது.



**உமிச்சாம்பல் விற்பனைக்கு**

பற்பெடி தயாரிப்பதற்கான வெண்ணிற உமிச்சாம்பல் விற்பனைக்கு உண்டு.

T. P : 077 772 2215

**பணியாளர்கள் தேவை**

கணக்காளர்

கணக்காய்வுப் பயிலுனர்கள்.

T. P : 077 772 2215

## மரண அறிவித்தல்



### திருமதி. பரமேஸ்வரி கதிர்காமராஜா

தோற்றம் : 19.08.1928 மறைவு : 20.11.2017

மலேசியாவை பிறப்பிடமாகவும், தொல்புரத்தை வதிவிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி பரமேஸ்வரி கதிர்காமராஜா அவர்கள் 20.11.2017 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. கதிர்காமராஜாவின் அன்பு மனைவியும், இரத்தினாம்பிகை, இராஜகோபால், காலஞ்சென்ற சுந்தரரூபனின் அருமைத் தாயாரும், பொன் இராஜேந்திரன், வதனி, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரதனி, ராஜினி, ரமணன், ராகுலன், கண்ணன், நிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனிக்கா, அஸ்வின், பிருந்தா, அரன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 27.11.2017 திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 11 மணிக்கு ஈமக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் 1.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
திருமதி மகேஸ்வரி பாலக்கிருஷ்ணன்
தொலைபேசி இலக்கம் : 0112580785

## OBITUARY



The late
**Mrs. Grace Ratnammah Vairavanathan**

Beloved wife of the late Mr.Sellappah Samuel Vairavanathan, loving mother of Dr. David Retnanathan, Mr. Joseph Ratnaraja, Mrs. Regina Stephens, the late Mr. Christy Ratnaruban, Mr.Daniel Ratnaseyan and Mr. Joshua Ratnaventhan, mother-in-law of Kirubamalar David, Thayalini Ratnaraja, the late Mr. Eric Stephens, Rani Ratnaruban, Jeyasiri Ratnaventhan, grand children of Ana Sabatini, Mrs. Leoni Jonathan Manoharan, Christabel Jayanthi and Priyanka. Remains will lie at no.27, Castle Lane, Bambalapitiya from 10.00 a.m to 4.30 p.m on 25th November, 2017 (Saturday) for viewing and will be taken to our ancestral house, Erlalai North for funeral at 3.00 p.m on 27th November, 2017 (Monday).

**Informant : Dr. V. David Retnanathan, Eldest son**

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு.

மேற்படி நிலையத்தினரது வருடாந்தப் பொதுக்கூட்டம் இவ்வருட டிசெம்பர் மாத இறுதியில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் பிரேரணைகளை 15.12.2017 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

செயலாளர் .

தபால் முகவரி:
செயலாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், 133, செம்மணி வீதி,நல்லூர். யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தரும் காரைநகர் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் அவர்களான **சண்முகம் பரமேஸ்வரன்** அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி வேவி சண்முகம்


அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள்சங்கம், யாழ். மாவட்டம்.

## மரண அறிவித்தல்கள்

### சேதுராசா நேசரத்தினம்

(ஓய்வு பெற்ற லிகிதர் . தேர்தல் திணைக்களம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு . புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சேதுராசா நேசரத்தினம் (ஓய்வு பெற்ற லிகிதர் , தேர்தல்திணைக்களம்) நேற்று (23.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியவதிஅம்மாளின் அன்புக்கணவரும் நிர்மலா,சிவநேசன்(ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்வர்களான பஞ்சாட்சரம்,சரஸ்வதி,மகேஸ்வரி, ராதா ராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

தகவல்:
075 416 8756 குடும்பத்தினர்.

### திருமதி
### பாரதி (பரா) மாலசுதன்



வட்டுவடக்கு, சித்தன் கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாரதி(பரா) மாலசுதன் (ஆசிரியை, யா / பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) நேற்று (23.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், சிவபாலன் புஸ்பமாலா தம்பதியரின் மருமகளும் மாலசுதனின் (லண்டன்) பாசமிகு மனைவியும், சுருதிகா (மாணவி, யாழ்ப்பாணக்கல்லூரி), சுருஜன் (மாணவன்,யாழ்ப் பாணக்கல்லூரி) ஆகியோரரின் அன்புத்தாயாரும், ரேவதி(லண்டன்), முகுந்தன் (அதிபர், யா / சங்கானை ஸ்தான அ.மி.த. க பாடசாலை), முகிலன்( லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருகரன் (லண்டன்), அருந்ததி ( ஆசிரியை, யா / சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), கஜேந்தினி (லண்டன்), ஜனகன் (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்), பாலசுவர்ணா (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (26.11.2017) காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.05.1939

மறைவு
05.12.2016

அமரர்
**பொன்னம்பலம் கெங்காதரம்பிள்ளை**

திதி - 24.11.2017
(கார்த்திகை வளர்பிறை சஷ்டி)

மங்காப்புகழுடனே மீசாலையூர் வாழ்ந்த
எங்கள் குடும்பத்தலைவரே நீரும் போக
நீங்காத சோகமதை நிதமும் நாம் சுமந்து
கெங்காவே இன்றுடன் ஓராண்டானதுவே

உங்கள் நினைவுடன்:
மனைவி, மகன், மருமகள், பேரன்கள், மாமி மற்றும் குடும்பத்தினர்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமேஸ்வரி சண்முகரெட்ணம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சண்முகரெட்ணம் 22.11.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகரெட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் சகோதரியும், சுதர்ஜனன், சுதர்சினி ஆகியோரின் பாச மிகு தாயாரும், பாமினி, சிவரூபன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சோமாதேவி, கிருஸ்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், அபினா, மகேஸ்சன், கதீசன், மகிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

சுதர்ஜனன் - 0044 208 3572167

### திருமதி
### சேசம்மா (ராணி) தோமஸ்



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சேசம்மா (ராணி) தோமஸ் (23.11.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தோமஸின் (யாழ். பிரதேச முதியோர் சங்கம் பொருளாளர்) அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கராசா லூசியா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளப்பு அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் றோக், அரி (லண்டன்), ராசிங்கம், துரைசெல்ராணி, செல்லம் (பிரான்ஸ்), சின்னராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, அருளானந்தம், அல்வின் அரியநாயகம் மற்றும் வில்விறிற்றா, துரை பிரான்சிஸ்கா, தெரன்சியா (ஆஸ்திரேலியா), தங்கம் (லண்டன்), புஸ்பம், கிருபைராணி, செல்லம் ஜெயக்குமார், பச்சைக்கிளி (பிரான்ஸ்), அன்ரன் ஆகியோரின் மைத்துனியும் கெனடி, மெல்வின் காலஞ்சென்ற கியூறின் மற்றும் நிக்ஷன், ஜொய்ஜினி, ஜொய்வின் ஆகியோரின் அன்புத்தாயாரும் வாணி, செல்லமகள், பொன்னன், றுவேனி, ரஞ்சித், டென்சி ஆகியோரின் அன்புமாமியும் டியோனிசன், டிவின்சன் காலஞ்சென்ற விதுஜா மற்றும் ஜசிக்கா, கெபாணி, சானட், டிவினியா, டினுஷா, டிலோஜினி, டிசானி, கஸ்ரோ, விஜய், நிக்ஷிக்கா, சஜீவன், ஜெனிபர், ஜெனுசியா, சாம்சன், ஜொய்டன், துஷியந்தன், டெனிஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.11.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொன்சேன்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# கோள்களை ஆளும் ஈர்ப்பியல்

## கால,வெளி பரிமாணங்களிடையே உண்டாகும் பிரபஞ்ச சக்தி

பூங்குழலி

கற்களை மேலே எறிந்தால் கீழே விழுகின்றன. அலைகள் கடலில் பொங்கி எழுந்து அடிக்கின்றன. அண்டக் கோள்கள் பரிதியைச் சுற்றி வருகின்றன. கலக்ஸியில் ஒளிமந்தைகள் கோள்கள் போலச் சுற்றி வருகின்றன. இவற்றை எல்லாம் அகிலவெளியில் சீரான ஓரியக்கப் பண்பாட்டில் பில்லியன் ஆண்டுகளாக எது கட்டுப்படுத்தி ஆள்கிறது என்ற வினா எழுகிறது. உண்மையில் இத்தன்மை வெளிகளை நியூட்டன் ஈர்ப்பியல் உந்துசக்தி என்கிறார். ஆனால் அவர் கூற்று உலக முழுமையுமாகப் படியவில்லை. ஐன்ஸ்டைன் அதை வேறு விதமாகக் கற்பனை செய்து தன் ஒப்பியல் நியதியில் ஈர்ப்பியலைக் கால வெளியாகக் காட்டிப் பிரபஞ்சப் புதிர்களுக்குத் தீர்வு கண்டார்.

**அகிலவெளிப் பண்பாடு**

ஐன்ஸ்டைன் விளக்கிய ஈர்ப்பியல் நியூட்டன் கூறியது போல் ஈரண்டங்கள் கவர்ந்து கொள்ளும் ஓர் ஈர்ப்புச் சக்தியில்லை. நான்கு பரிமாண அங்களவு உடைய அகிலவெளிப் பண்பாடுதான் (Property of Space). ஐன்ஸ்டைன் விளக்கும் ஈர்ப்பியல் 'அண்டமோ, பிண்டமோ (Matter) அல்லது ஒளிமந்தையோ அவை அகில வெளியை வளைக்கின்றன. அந்தக் காலவெளி வளைவே ஐன்ஸ்டைன் ஈர்ப்பியலாக பரிணமிக்கிறது. அதை எளிமையாக இப்படி விளக்கலாம்.

கால வெளியைத் தட்டையான ஈரங்கப் பரிமாணமுடைய ஒரு றப்பர் தாளாக வைத்துக் கொண்டால், கனத்த பண்டங்கள் றப்பர் தாளில் குழியை உண்டாக்கும். அந்த மாதிரி வளைவே ஐன்ஸ்டைன் கூறும் ஈர்ப்பியலாகக் கருதப்படுகிறது. ஈர்ப்பியல் சக்தியை மனிதன் பிற சக்திகளைக் கட்டுப்படுத்துவது போல் மாற்ற முடியாது. சில சக்திகளைக் கூட்டலாம் குறைக்கலாம் மற்றும் திசை மாற்றலாம். ஆனால் அண்டத்தின் ஈர்ப்பியலை அப்படிச் செய்ய இயலாது. ஈர்ப்பியலை எதிரொலிக்கச் செய்ய முடியாது. மெதுவாக்க முடியாது. விரைவாக்க இயலாது. திசைமாற்ற முடியாது. நிறுத்த முடியாது. அது ஒன்றை ஒன்று கவரும். ஆனால் விலக்காது.

**ஐன்ஸ்டைன் மாற்றி விளக்கிய ஈர்ப்பியல் நியதி**

1915 ஆம் ஆண்டு ஐன்ஸ்டைன் நியூட்டனின் ஈர்ப்பியல் விசையை வேறு கோணத்தில் நோக்கி அதை "வளைந்த வெளி" (Curved Space) என்று கூறினார். அதாவது ஈர்ப்பியல் என்பது ஒருவித உந்துவிசை இல்லை. அண்டத்தின் திணிவுநிறைவிண்வெளியை வளைக்கிறது என்று முதன்முதல் ஒரு புரியாத புதிரை அறிவித்தார். மேலும் இரண்டு அண்டங்களின் இடைத்தூரம் குறுகிய நேர் கோட்டில் இல்லாது பாதையில் உள்ள வேறோர் அண்டத்தின் ஈர்ப்பியல் குழியால் உள்நோக்கி வளைகிறது. சூரியனுக்குப் பின்னால் உள்ள ஒரு விண்மீனின் ஒளியைப் பூமியிலிருந்து ஒருவர் நோக்கினால், ஒளிக்கோடு சூரியனின் ஈர்ப்பியல் தளத்தால் வளைந்து காணப்படுகிறது.

அதாவது ஒளியானது ஒரு கண்ணாடி லென்ஸை ஊடுருவி வளைவது போல் சூரியனின் ஈர்ப்பு மண்டலம் ஒளியை வளைக்கிறது. அதாவது ஒளியைத் தன்னருகில் கடத்தும் போது சூரியனின் ஈர்ப்பியல் ஒரு "குவியாடி லென்ஸாக" (Convex Lens or Gravitational Lens) நடந்து கொள்கிறது. ஹபிள் தொலைநோக்கி காட்டிய அனைத்து கலக்ஸி மந்தைகளும் ஈர்ப்பியல் வளைவால் குவியப்பட்டு ஒளி மிகையாகி பிரமிக்க வைத்தன. அகில ஈர்ப்பியல் குவியாடி வளைவால் விளைந்த கலக்ஸிகளின் 'ஒளிமய உருப் பெருக்கம்' (Magnification of Brightness due to Natural Cosmic Gravitational Lens Amplification) பொதுவாக 25 மடங்காக காணப்படுகிறது.


**ஐன்ஸ்டைன் புவியீர்ப்பினை ஆயும் விண்ணுளவி**

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி நாசா 700 மில்லியன் டொலர் (Gravity prob-B) விண்ணுளவியை 'போயிங் டெல்டா2' ரொக்கெட் மூலமாகப் பூமியை 400 மைல் உயரத்தில் சுற்றிவர அனுப்பியது. அந்த விண்ணுளவி ஓராண்டுகள் பூமியைச் சுற்றி ஐன்ஸ்டைன் புவியீர்ப்புக் கோட்பாட்டை நிரூபிக்க ஆய்வுகள் புரிந்தது.

'உளவி பி' ஐன்ஸ்டைன் புதிய விளக்கம் தந்த வெளி, காலம் ஆகியவற்றைச் சோதிப்பதுடன், அவற்றைப் புவியீர்ப்பு ஆற்றல் எவ்விதம் திரிபு செய்கிறது என்றும் உளவு செய்தது. ஐன்ஸ்டைன் கோட்பாடுகளின் இரண்டு பரிமாணங்களை உறுதிப்பாடு செய்ய நான்கு உருண்டைகள் கொண்டு சுற்றும் ஓர் 'ஆழி மிதப்பி' (Gyroscope ) விண்ணுளவியில் இயங்கி வருகிறது. உளவியானது ஒரு வழிகாட்டி விண்மீனை (Guide Star IM Pegasi) நோக்கித் தன்னை நேர்ப்படுத்திக் கொண்டு, கால வெளித் திரிபுகளைப் பதிவு செய்யும். ஓராண்டுகளாக ஆழிக் குண்டுகளின் சுற்றச்சுகள் (spin Axes ) எவ்விதம் நகர்ச்சி ஆகியுள்ளன என்றும் பதிவு செய்துள்ளது.

**ஈர்ப்பியல் 'பி – உளவி**

அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் (stanford University) பௌதிக விஞ்ஞானிகளும், பொறிநுணுக்காளரும் சேர்ந்து பூமியைச் சுற்றிவரும் ஒரு விண்ணுளவி மூலமாக நுணுக்க முறையில், ஐன்ஸ்டைன் வெளியிட்ட கால, வெளிப் பரிமாணத்தைச் சார்ந்திருக்கும் ஈர்ப்பியல் தத்துவத்தை நிரூபிக்க ஏறத்தாழ ஈராண்டுகளாகப் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். அதைச் செய்து கொண்டிருக்கும் அண்டவெளிக் கருவிதான், ஈர்ப்பியல் விண்ணுளவி-'பி'. அக்கருவி 2004 ஆண்டு முதல் பூமியைச் சுற்றி வந்து அப்பணியைச் செய்து வருகிறது. 'விண்ணுளவி-'பி' என்பது ஈர்ப்பியல் பண்பின் பரிமாணங்களான காலம், வெளி ஆகியவற்றைப் பதிவு செய்யும் சார்பு நிலை சுற்றாழி மிதப்பியே



(Relativity Gyroscope). அக்கருவியின் உபகரணங்களைப் உருவாக்கியவர்கள் நாசா, ஸ்டான்போர்டு நிபுணர்களே.

பூகோளத்தை 400 மைல் உயரத்தில், துருவங்களுக்கு நேர் மேலே வட்டவீதியில் சுற்றிவரும் ஒரு விண்சிமிழில் அமைக்கப்பட்டுள்ள நான்கு கோள மிதப்பிகளின் மிக நுண்ணிய கோணத் திரிபுகளை உளவி துல்லியமாகப் பதிவு செய்ய வேண்டும். நான்கு கோளங்கள் ஆடும் அந்த மிதப்பி எந்த விதத் தடையும் இன்றி இயங்குவதால், ஏறக்குறைய பரிபூரணமாக கால வெளி மாறுதல்களை நுகர்ந்து அளந்து விடும் தகுதி பெற்றது. உருளும் அந்த நான்கு கோளங்கள் எவ்விதம் காலமும் வெளியும் பூமியின் இருக்கையால் வளைவு படுகின்றன என்பதைத் துல்லிய மாக அளக்கும். மேலும் பூமியின் சுழற்சியால் அதன் அருகே காலமும், வெளியும் எப்படி அழுத்தமாகப் பாதிக்கப்படுகின்றன என்றும் அவை கண்டுபிடித்துப் பதிவு செய்யும். பூமியின் ஈர்ப்பியலால் ஏற்படும் இந்தக் கால, வெளி மாறுபாடுகள் மிகவும் சிறிதானாலும், அவற்றின் பாதிப்புகள் பிரபஞ்ச அமைப்பிலும், பிண்டத்தின் இருக்கையிலும் பெருத்த மாற்றங்களை உண்டாக்கவல்லவை. நாசா எடுத்துக் கொண்ட ஆய்வுத் திட்டங்களில் 'விண்ணுளவி-'பி' ஆராய்ச்சியே மிக்க ஆழமாக உளவும் ஒரு நுணுக்கமான விஞ்ஞானத் தேடலாகக் கருதப்படுகிறது.













## நாகபூஷணி திருமண சேவை

**மணமக்கள் அனைவருக்கும் பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**

டாக்டர், எஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்களை உடன் பொருத்தமாகத் தரப்படும்.

**077 1387 596, 077 770 4457**

**642, பருத்தித்துறை வீதி, நல்லூரர் யாழ்ப்பாணம் (நல்லூர்க் கோயிலுக்கு முன்னால்)**

## கண்ணீர் காணிக்கை



தோற்றம் .19.5.1975 மறைவு .22. 11.2017

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக சபை உறுப்பினராகிய

**கணபதிப்பிள்ளை சிவகுமரன் (சிவா)**

அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்.**

## பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த **விநாயகமூர்த்தி கோகிலாம்பாள்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **விநாயகமூர்த்தி கோகிலவாணி** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**விநாயகமூர்த்தி கோகிலவாணி**



## அந்தரங்க...

வித்தனர். இந்தச் சம்பவத்தை வீடியோ எடுத்த இளைஞனும் பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா மையப் பேருந்து நிலையத்துக்கு மாலை 5 மணியளவில் பேருந்து ஒன்று வந்தது. அப்போது பேருந்து நிலையப் பகுதியில் நாம் சோதனைகளை முன்னெடுத்திருந்தோம். பேருந்தில் வந்திறங்கிய நபர் ஒருவர் எம்மைக் கண்டதும் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றார். சுற்றி வளைத்து அவரைக் கைது செய்தோம். அவரது அந்தரங்கப் பகுதியிலிருந்து கஞ்சாப் பொதி மீட்கப்பட்டது.

அவரை நாம் விரட்டிப் பிடிக்கும் சம்பவத்தை வீடியோ எடுத்த இளைஞன் ஒருவனையும் சந்தேகத்தில் கைது செய்துள்ளோம். அந்த இளைஞனின் சகோதரர் கடந்த வாரம் கஞ்சாவுடன் கைதாகி விளக்கமறியலில் உள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற பேருந்தில் நடத்தப்பட்ட சோதனையில் 4 கிலோ 25 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்றனர். (உ-5)

## ஓ.பி.எஸ்...

யத் தேர்தல் ஆணையம்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்த பின்னர் அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டார் சசிகலா. அதன் பின்னர் ஏற்பட்ட அதிகாரப் போட்டிகளால் கட்சி மூன்றாக உடைந்தது. இதனால் அ.தி.மு. கழகத்தின் சின்னமான இரட்டை இலையும், தலைமைக் காரியாலயமும் தேர்தல் ஆணையத்தால் முடக்கப்பட்டது. பின்னர் ஓ.பன்னீர்செல்வமும், பழனிச்சாமியும் இணைந்தனர். தமக்குச் சின்னம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில் பன்னீர்செல்வம், பழனிச்சாமி தரப்புக்கு சின்னத்தை வழங்கி உத்தரவிட்டது இந்தியத் தேர்தல் ஆணையம். (ம)

## 10 கோடி...

டிக்கை முன்னெடுக்கப்பட்டது. அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த்தும் உடனிருந்தார்.

ஆயிரம் கிலோ கஞ்சாவை முழுமையாக எரிந்து முடிய 40 லீற்றர் மண்எண்ணெய் ஊற்றப்பட்டது. 10 ரயர்களும் போட்டே எரிக்கப்பட்டன. அவை முழுமையாக எரிந்து முடிய 4 மணித்தியாலங்கள் எடுத்தன. (உ-21,37)

## புயல்...

நிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்தது.

இதேவேளை, இந்த வார இறுதியிலும் அடுத்த வாரத்தின் தொடக்கத்திலும் கடும் மழை எதிர்பார்க்கப்படுவதாகவும், வங்காள விரிகுடாவில் உருவாகிவரும் புயலால் இலங்கைக்கு குறிப்பாக வடக்கு மாகாணத்துக்குக் கடும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் ஏதும் இல்லை என்றும் கொழும்பு வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-5)

## வெள்ளப்...

நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

"பருவகால மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்" என்ற தலைப்பில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அபிவிருத்தி திட்டங்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டுமே தவிர அழிவுக்கான காரணியாக அமைந்து விடக்கூடாது என மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அங்கு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் முன்னைய காலத்தை விட சில அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக நாம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி செய்யவேண்டுமே தவிர அழிவை ஏற்படுத்தக்கூடிய காரணியாக அதனை உருவாக்கக் கூடாது" என்றார் அவர்.

குடாநாட்டில் மழை நீர் சேமிப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நன்னீர் தடுப்பணைகளால் தாழ் நிலக் குடியிருப்புகளில் வெள்ளம் ஏற்படுவது அதிகரித்துள்ளது என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுவரும் நிலையில் மாவட்டச் செயலர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் முக்கியமாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் ஏற்கனவே வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இடங்களான நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டம், இராஜகிராமம் போன்ற பகுதிகளில் தேங்கும் வெள்ள நீர் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

தாழ்நிலப் பகுதிகளில் தற்காலிகக் குடிசைகளில் வாழும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. கோயிற் குடியிருப்பு, சூரிய ஒளி குடியிருப்பு, நித்திய ஒளி குடியிருப்பு ஆகிய இடங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

பொருத்தமான முறையில் வீதிகள், பாலங்கள், கால்வாய்கள் அமைக்கப்படாமையே யாழ்ப்பணத்தில் வெள்ளம் ஏற்படக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. முக்கியமாக தொடருந்துப் பாதைகளை அண்டிய பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு அதிகம் என்று கூறப்பட்டது.

மக்களின் சில பொறுப்பற்ற செயற்பாடுகளும் வெள்ளம் ஏற்டக் காரணம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. திண்மக் கழிவுகளை வீதிகளில் கொட்டுதல், கால்வாய்களில் கொட்டுதல் போன்றவற்றை நிறுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், மாநகரசபை, பிரதேச சபைகள் போன்ற திணைக்களங்கள் உரிய கடமைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக இயற்கை நீரோட்டப் பாதைகள் தடுக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. வெள்ளப் பாதிப்புக்கான அவசர நேரங்களில் பொலிஸாரின் உதவியைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் திண்மக் கழிவுகளை பொது இடத்தில் கொட்டுவதைக் கட்டுப்படுத்த சூழலியல் பொலிசாரை அதிகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டது. (உ-8)

## மற்றொரு...

ஞரே கைது செய்யப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகில் நிற்கிறார் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்து சென்று அவரைத் தாம் கைது செய்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-37)

## முஸ்லிம்...

குழுவில் அவருக்கும் தொடர்பு உள்ளதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர்.

"ஆவா குழுவின் முக்கிய சந்தேகநபர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இப்போது ஆவா குழுவின் முக்கிய செயற்பாட்டாளராக 22 வயதுடைய இக்ரம் என அடையாளப்படுத்தப்படும் நபர் செயற்பட்டு வருகிறார் எனத் தகவல்கள் கிடைத்தன. அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஆவா குழுவுக்குத் தகவல்களை வழங்கும் உளவாளியாகச் செயற்பட்டவர் எனும் சந்தேகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் ஆவா குழு பற்றிய பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் முன்னரே தெரிவித்திருந்தனர். (உ-8)

## கிழக்கில்...

கோணமலைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இதனை ஆரம்பித்து வைப்பார். புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை குறித்தும், உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலும் இன்று அவர் பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இரா.சம்பந்தனின் இந்தக் கலந்துரையாடல் நாளை மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் நடைபெறவுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்ததுரையாடல்களின்போது பொது மக்களுக்கு உண்மை நிலமையைத் தெளிவுபடுத்துவோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். கூட்டமைப் பின் இந்தப் பரப்புரை வடக்கிலும் விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## ஐ.தே.கவும்...

கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதுள்ள திருத்திய முறையிலேயே தேர்தலை நடத்துவதற்கே நீதிமன்றால் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பழையமுறையிலாவது தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் பின்தள்ளப்பட்டுள்ளது. அரசியல் நோக்குடனேயே, தேர்தலை பிற்போடும் எண்ணத்துடனேயே மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிரொலித்தது. நேற்றைய தினமும் இந்தச் சர்ச்சை தொடர்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் தொடர்ந்தும் ஒத்திவைக்கப்படுமாக இருந்தால் தாமும் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவோம் என்றும், எதிர்க்கட்சியினருடன் இணைந்து அமைச்சரைப் பதவி விலக்குவோம் என்றும் நேற்றுத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இதனை வலியுறுத்தியிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்த ஜயவர்தன, துசார இந்துநில், சமிந்த விஜேசிறி, அசோக பிரியந்த, சிட்னி ஜயரத்ன, சிசிர குமார விஜேசேகர ஆகியோரே மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டனர். (உ-5,31)

## வடக்கு...

மாகாண சபைகளிடம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அந்தந்த மாகாண சபைகள் பதில்களை அனுப்பிவைக்கும் நிலையில், வடக்கு மாகாண சபை அதைச் செய்யாமல் இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டியே, நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது மேற்படி விமர்சனத்தை அவர் முன்வைத்தார்.

1983ஆம் ஆண்டளவில் வவுனியாக மாவட்டத்தில் காணப்பட்ட நீர்ப்பாசனங்கள், சிறுகுளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய பத்மசாந்த கேள்விகளை எழுப்பியிருந்தார்.

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரின் சார்பாக இதன்போது பதிலளித்த ஆளுந்தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்தக் காலத்துடன் சம்பந்தப்பட்ட தகவல்களைத்தேட முடியாத காரணத்தால் இவற்றுக்கான விவரங்களை அறியத்தர முடியாது, என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட உதயசாந்த, வடக்கு மாகாண சபையின் நிர்வாகப் பகுதிக்குள் இருக்கும் இந்தத் தகவல்களைத் தேட முடியாமையால் அவற்றைப் பெற முடியாதிருப்பதாகவே அமைச்சர் பதிலளிக்கின்றார். வடக்கு மற்றும் கிழக்கு தொடர்பில் தொடர்ச்சியாக இவ்வாறான கேள்விகளை முன்வைத்திருக்கிறேன். தொடர்ந்தும் இதே பதில்களே எமக்குக் கிடைக்கின்றன. நாடாளுமன்றமே இந்த நாட்டுக்குப் பொறுப்புக் கூறுகின்றது. வடக்கு மாகாண சபையானது வடக்கு மாகாணத்துக்கு மட்டுமே பொறுப்புக் கூறுகின்றது. ஏனைய மாகாண சபைகளிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட மாகாண சபைகளால் பதில் அனுப்பப்படும் நிலையில், வடக்கு மாகாண சபையில் இருப்போர் மட்டும் மாமன்னர்கள் கிடையாது - என்றார். (உ-5)

## அமைச்சர்...

பொறுப்பான அமைச்சர் பைசர் முஸ்தபாவால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தேர்தலுக்கான ஏற்பாடுகளில் தேர்தல் ஆணைக்குழு மும்முரமாக ஈடுபட்டு வருகின்ற நிலையில் அமைச்சரின் செயற்பாட்டினால் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முட்டுகட்டையிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடு அமைச்சரின் இயலாமையையே எடுத்துக் காட்டுகின்றது.

இதனால் இலங்கையின் மக்களாட்சிக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இனிமேலும் அமைச்சர் மீது எமக்கு நம்பிக்கை கிடையாது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தனது பதவியிலிருந்து உடன் விலகவேண்டும் என்றுள்ளது.

இதேவேளை, அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று சமர்ப்பிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார். தேர்தலை நடத்த விரும்பும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (உ-5,31,33)

## 65 வயது...

வயோதிபருக்கு ஓராண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். 10ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. தண்டப் பணத்தைக் கட்ட தவறின் ஒரு மாத கால கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். அதனை கட்டத்தவறின் மேலும் ஆறு மாத கால கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (உ-37)

## இன்று...

நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளதை அடுத்தே இந்தக் கூட்டத்துக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய அழைப்பு விடுத்தார். (உ-5,31)

## அனைத்து...

தோள்கொடுப்பதற்கு ஒருபோதும் பின்வாங்காது என்று இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அந்த நாட்டின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இருதரப்புச் சந்திப்பு ஹைதராபாத் ஹவுஸில் நேற்று நடைபெற்றபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

இருநாட்டுத் தலைமை அமைச்சர்களும் இந்தச் சந்திப்பில் மின்சக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு சம்பந்தமாக முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இந்து சமுத்திர வலயத்தை அமைதியான வலயமாகத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கும், சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதிப்படுத்துவது தொடர்பிலும் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா ஆகிய அரசுகளின் கூட்டு முயற்சியில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும், சில திட்டங்கள் குறித்து எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு விரைவில் முடிவுகட்டப்படும் என்றும் இதன்போது தலைமை அமைச்சர் மோடியிடம் ரணில் விக்கிரமசிங்க எடுத்துரைத்தார்.

இலங்கை 70ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில் இலங்கையின் கல்வித்துறை மற்றும் தொழில்நுட்ப மறுசீரமைப்புகளுக்கு இந்தியா முழு ஆதரவையும் உதவிகளையும் வழங்குமென தலைமை அமைச்சர் மோடி தெரிவித்ததுடன், தான் இலங்கை வந்திருந்தபோது உற்சாக வரவேற்பளித்ததற்காக நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார். (உ-5)

# சிறிஅம்பாள் வி.கழக 'ஏ' முன்னேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 24
சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

இந்த ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சிமாட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் சிறிஅம்பாள் அணியின் தர்சன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். 19ஆவது நிமிடத்தில் சிறி அம்பாள் அணியின் தினேஷ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என முன்னிலை பெற்றது சிறிஅம்பாள்.

ஆட்டத்தின் 21ஆவது, 22ஆவது, 27ஆவது நிமிடங்களில் சிறி அம்பாள் அணியின் எஸ்.ஜெயந்தன், பி.தர்சன், ரி.தினேஷ் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23-422)

# சமநிலை!

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யுவன்டாஸ், பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஸ்பானியக் கழகமான பார்சிலோனாவும், இத்தாலியக் கழகமான யுவன்டாஸும் மோதிய இந்த ஆட்டம் இத்தாலியில் நடைபெற்றது.

ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதுவும் பதிவாகாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம)





# காமாட்சி அம்பாள் வி.க. கரப்பந்தாட்ட இறுதிகள்

யாழ்ப்பாணம், நவ. 24
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் இரண்டு பிரிவாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று இடம்பெறவுள்ளன.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23-422)

# கார்மேல் போய்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 24
திருநெல்வேலி காளி கோவில் சன சமூக நிலையமும் அம்பாள் விளையாட்டு கழகமும் இணைந்து நடத்திய கிரிக்கெட் தொடரில் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விதுர்சன் 16 ஓட்டங்களையும், அஜன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆனைக்கோட்டை யூனியன் அணியின் சார்பில் மதீஸ், கபில் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 7 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கார்மேல் போய்ஸ் அணி.

ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் அணியின் சுதர்சன், தொடராட்ட நாயகனாக ஆனைக்கோட்டை யூனியன் அணியின் துசியந்தன், சிறந்த களத் தடுப்பாளராக யூனியன் அணியின் கனோஜன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கார்மேல் போய்ஸ் அணியின் செல்டன், சிறந்த பந்து வீச்சாளராக யூனியன் அணியின் மதீஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422)



# கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி கால்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 24
வடமராட்சி கல்வி வலயம் நடத்திய வடமராட்சி கல்வி வலய உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணியை எதிர்த்து பருத்தித்துறை கோட்ட ஆசிரியர் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதியபோதும் 4ஆவது நிமிடத்தில் அரவிந்தன் ஒரு கோலைப் பதிவு செய்ய 1:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் 5ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர் அணி வீரர் பிரசாத் ஒரு கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக்கட்டத்தை எட்டியது.

இருப்பினும் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கருணானந்தன் மற்றும் அரவிந்தன் ஆகியோர் அடுத்தடுத்து கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

# ஐவரா, மூவரா முரண்பாடு உச்சம்

அடுத்த ஐ.பி.எல். தொடரில் ஒவ்வொரு அணியும் ஐந்து வீரர்களையா அல்லது மூன்று வீரர்களையா தக்கவைப்பது என்பது தொடர்பில் முரண்பாடுகள் உச்சம் தொட்டுள்ளன.

11ஆவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்துக்கு இன்னும் மூன்று மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியே உள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு அணியும் எத்தனை வீரர்களைத் தக்கவைப்பது என்பது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தற்போது உச்சம் தொட்டுள்ளன. சில அணியின் உரிமையாளர்கள் தலா மூன்று வீரர்களைத் தக்கவைக்கவும் இன்னும் உரிமையாளர்கள் தலா ஐந்து வீரர்களைத் தக்கவைக்கவும் தமது விருப்பத் தைத் தெரிவித்தனர். (ம)

INDIAN PREMIER LEAGUE



## பொஸ்டாகுகு விலகல்

ரஷ்யாவில், அடுத்த வருடம் இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்கு ஆஸ்திரேலிய அணி தகுதி பெற்றுள்ள நிலையில், அந்த அணியின் தலைமைப் பயிற்சி யாளர் பொஸ்டாகுகு பதவியில் இருந்து விலகியுள்ளார்.
உலகக் கிண்ணம் வரையாவது பயிற்றுவிப்பாளராகத் தொடரு வதற்கான புதிய ஒப்பந்த மொன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இஞ் பொஸ்டாகுகுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் பதவியில் இருந்து விலகுவதில் பொஸ்டாகுகு உறுதியாக இருந்தார். அதன்படியே அவர் விடைபெற்றுச் சென்றார்.
பொஸ்டாகுகுவின் பயிற்சியின் கீழ் 49 ஆட்டங்களில் விளையா டிய ஆஸ்திரேலியா, 22 ஆட்டங் களில் வெற்றிபெற்றிருந்தது. (ம)

## கோக்லியை நம்பித்தான் இந்திய அணி உள்ளது

### சொல்கிறார் ஆமிர்

“இந்திய அணி கோக்லியை அதி கம் நம்பியுள்ளது. அவரை வீழ்த் திவிட்டால் இந்திய அணியின் தோல்வி 50 சதவீதம் உறுதியா கும்” என்று தெரிவித்தார் பாகிஸ் தான் அணியின் வேகப்பந்து வீச் சாளர் ஆமிர்.
பாகிஸ்தான் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே ஆமிர் இவ்வாறு தெரிவித்தார். “இந்திய அணியை வீழ்த்த வேண்டுமா யின் கோக்லியை இலக்கு வைக்க வேண்டியது அவசியம். அவரை வீழ்த்திவிட்டால் இந்திய அணியை வீழ்த்துவது இலகுவானதாக ஆகி விடும். அதேநேரத்தில் கோக்லி களத்தில் நின்றால் இந்திய அணி எவ்வளவு பெரிய இலக்கையும் விரட்டும் வல்லமை பெற்றிருக் கும்” என ஆமிர் மேலும் தெரிவித் தார். (ம)





# இங்கிலாந்து அணி சிறப்பான ஆரம்பம்



ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தில், சிறந்த ஆரம்பம் கண்டுள்ளது இங்கிலாந்து அணி.
இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடை யிலான நடப்பு வருட ஆஷஸ் தொடர் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணி யின் ஆரம்ப வீரர்களாக அலிஸ்டர் குக் மற்றும் ஸ்ரோன் மன் இருவரும் களமிறங்கினர். 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அலிஸ்டர். எனினும் ஸ்ரோமன், வின்ஸ் இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.
இருவரும் அரைச்சதம் கடக்க பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது ஆஸ்திரே லிய அணி. அணி 127 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஸ்ரோன்மன் 53 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தார். அவரை போல்ட் முறையில் வீழ்த்தினார் கம்மின்ஸ். 83 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறை யில் ஆட்டமிழந்தார் வின்ஸ். ரூட் 15 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப முதல் நாள் முடிவில் 4 இலக்கு களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இங் கிலாந்து அணி. மலன் 28 ஓட்டங்களுடனும் மொயின் அலி 13 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ள னர். (ம)

## இந்தியா - இலங்கை இரண்டாவது டெஸ்ட் நாக்பூரில் இன்று



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் இன்று ஆரம்பமாகிறது. இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் கொல்கத்தாவில் அண்மையில் நடைபெற்றது. இந்த ஆட்டம் சமநிலை யில் முடிவடைந்தது. இந்த நிலையில் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் இன்று ஆரம்பமாகி றது. இன்றைய ஆட்டத்துக்கான ஆடுகளம் வேகப் பந்து வீச்சுக்குச் சாதகமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## எந்த வரிசையிலும் களமிறங்கத் தயார்

### சகா வெளிப்படை

“எந்த வரிசையிலும் களமிறங்கி துடுப்பெடுத்தாடத் தயார்” என்று தெரிவித்தார் இந்திய அணியின் இலக் குக் காப்பாளர் சகா.



இலங்கைக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில் இந் திய அணியின் ஆரம் பத் துடுப்பாட்ட வீரரான தவானும், பந்து வீச்சா ளரான புவனேஸ்வர் குமாரும் விலகியுள்ள னர். இதனால் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை யில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகையில் இவ்வாறு தெரிவித்தார் சகா.
“டெஸ்ட் ஆட்டங்களில் எந்த வரிசையிலும் துடுப்பெடுத் தாட என்னை நான் தயார்ப்படுத்தி வைத்துள்ளேன். அணியின் தேவை கருதி எந்த நிலையிலும் (வரிசை யிலும்) களமிறங்கத் தயார்” என்று சகா மேலும் தெரி வித்தார். (ம)

# நேரத்தைக் கடத்துவதற்காகவே கோக்லியுடன் வம்பிழுத்தேன் இப்படித் தெரிவித்தார் இலங்கை அணியின் வீரர் டிக்வெல்ல




“நேரத்தைக் கடத்துவதற்காகவே கோக்லியுடன் வம்புக்குச் சென் றேன்” எனத் தெரிவித்தார் இலங்கை அணியின் இலக்குக் காப்பாளர் டிக்வெல்ல.
இந்தியாவுக்கு எதிராக கொல்கத் தாவில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியை நோக்கி நடைபோட் டுக் கொண்டிருந்த போது, சமி வீசிய பந்துப்பரிமாற்றத்தை எதிர்த்தாடினார் டிக்வெல்ல.
வேகப்பந்து வீச்சாளரான சமி பந்துவீசுவதற்காக விரைந்து வந்துகொண்டிருந்த போது அவரை இடைமறித்து, ...ன் பந்தை எதிர்கொள்ளத் தயாராக இல்லை என்பதுபோல் சைகை செய்து சமியை திருப்பி அனுப்பி னார் டிக்வெல்ல. அடுத்த பந்தை சமி திடீர் மேலெழும்பல் தன்மை யுள்ளதாக (எக்ஸ்ரா பவுன்சர்) வீசினார். இருவருக்கும் இடை யிலான வாக்குவாதம் முற்றியது. அதே பந்துப்பரிமாற்றத்தின் பிறிதொரு பந்தை சமி வீச ஓடிவரும்போது, முன்னர் செய்தது போலவே தான் பந்தை எதிர்கொள்ளத் தயாராக இல்லை என்பதுபோல் சைகை செய்து சமியை திருப்பி அனுப்பினார் டிக்வெல்ல. இதையடுத்து கோக்லி இந்த விவகாரத்தில் தலையிட் டார். சில நொடிகளில் மைதானத் தில் பரபரப்புத் தொற்றிக்கொண் டது. நடுவர்களின் தலையீட்டை அடுத்து வீரர்கள் சமாதானப்படுத் தப்பட்டனர். இந்த விவகாரம் தற்போதும் பெரியளவில் பேசு பொருள் ஆகியுள்ளது. இந்த நிலையில் நேரத்தைக் கடத்தி ஆட்டத்தைச் சமநிலையில் முடிக்கவே தான் அவ்வாறு நடந்துகொண்டதை ஏற்றுக் கொண்டார் டிக்வெல்ல.
“சமிக்கும் எனக்கும் இடை யிலான விவகாரத்தில் கோக்லி தலையிட்டதை அடுத்து நிலமை பூதாகரமானது. இதுவே நேரத் தைக் கடத்த சிறந்த சந்தர்ப்பம் என்பதை உணர்ந்துகொண் டேன். இதனால் நேரம் வீணடிக் கப்பட்டது. இந்திய அணி சுமார் 3 பந்துப்பரிமாற்றங்கள் வரை வீச முடியாமல் போனது” என டிக்வெல்ல தெரிவித்தார்.
டிக்வெல்லவின் கருத்து இவ்வா றிருக்க முன்னதாக அணித்தலை வர் சந்திமல், டிக்வெல்லவுக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
Nov 26 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
25.11.2017
காலை 9.00 - 2.00 pm
SLPS (OPEN/LIMITED)
பிரதி ஞாயிறு 9.00 - 2.00 P.M
SUPRA
போட்டிப்பரீட்சை
சனி, ஞாயிறு 9.00 - 12.00 P.M
அதிபர் EB
சனி, ஞாயிறு 1.30 - 5.30
D.O .EB
M.A .EB
சனி, ஞாயிறு 9.00 - 12.00
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்.
T.P. 077 469 6695

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கூட்டுறவு பரிசோதகர்
சனி - 1.00 - 4.30 மணி
திட்டமிடல் சேவை
பிரதி ஞாயிறு
9.30 - 2.30 மணி
பிரத்தியோக பொது உளச்சார்பு
சனி, ஞாயிறு
3.00 - 4.30 மணி
076 688 3394
D.M.I
வெலிங்ரன் சந்தி

ராணுவத்தின் உதவியுடன்

## கிளிநொச்சி மைதானத்தின் புனரமைப்பு முடிவுறுத்தப்படும்

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24

''கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் பன்னாட்டுத் தரத்திலான மைதானத்தை இராணுவத்தின் உதவியுடன் துரிதமாக நிறைவு செய்யவுள்ளோம்'' என்று விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலைவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது இலங்கை அணிக்கு ஹத்துருசிங்கவை பயிற்சியாளராக நியமிக்கவுள்ளோம். அர்ஜீன ரணதுங்கவின் சகோதரரே அவரை விரட்டினார். அவரை விரட்டியடித்த போது எவரும் பேசவில்லை. முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து குறைந்த காலத்தில் அணியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு வரவுள்ளோம்' என தயாசிறி மேலும் தெரிவித்தார். (ம-5,31)

# யாழ்ப்பாணத்தில் பன்னாட்டு மைதானம் தேவையில்லை

## என்கிறார் அர்ஜுன ரணதுங்க

அம்பாந்தோட்டையில் பன்னாட்டு கிரிக்கெட் மைதானம் அமைத்ததைப் போன்று தற்போது பொலன்னறுவையில் அமைக்கத் திட்டமிடுகிறார்கள். மகிந்தவுக்கு நடந்ததுதான் மைத்திரிபாலவுக்கும் நடக்கப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் தற்போது பன்னாட்டு மைதானம் தேவையில்லை. அங்கு சிறந்த பாடசாலை மைதானமே தேவை. இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், அமைச்சருமான அர்ஜுன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விளையாட்டுத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டைப் பலப்படுத்த வேண்டும். முன்னாள் கிரிக்கெட் வீரர்களான முத்தையா முரளிதரன், மகேல ஜயவர்தன போன்றோர் நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது இலங்கை அணி டெஸ்ட் தரவரிசையில் நான்காம் இடத்தில் இருந்து ஆறாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. அதே போன்று ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளிலும் வீழ்ச்சி கண்டுள்ளது. கிரிக்கெட் நிறுவனத்தின் அசமந்தப் போக்கினால் கடந்த ஆண்டில் 42பேரே அணிக்கு இணைக்கப்பட்டனர். கிரிக்கெட் நிறுவனம் எந்தவொரு எதிர்கால நோக்குகளும் அற்ற வகையில் செயற்பட்டு வருகின்றது. இலங்கை அணியின் தெரிவுக்குழுத் தலைவர் போட்டி நடுவராக மாறியுள்ளார். தற்போது ஆசிய கிரிக்கெட் கவுன்சிலை இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளனர். இதற்கான செலவுகளை இலங்கை கிரிக்கெட் நிறுவனமே செலவிட்டு வருகின்றது என்றார். (ம-5,31)

உபஒப்பந்தகாரர் தேவை
நடைபாதை கல்பதித்தல் அண்ணளவாக 800 Sqr பரப்பளவிற்கு மணல் பரவி அதன் மேல் கல் பதிப்பதற்கு முன் அனுபவமுள்ள ஒப்பந்தகாரர் உடன் தேவை.
T.P:_ 077 353 7939, 077 315 1500

O/L SEMINAR
வணிகக்கல்வியும் கணக்கீடும்
MR. BALAKAJEN
26 / 11 ஞாயிறு → 8 - 2 pm
இடம் - NEC யாழ்ப்பாணம் (வைரவர் கோவில் அருகில்)
077 6740 450, 070 339 6696

தவறிவிட்டது
மருதனார்மடத்திலிருந்து உடுவில் செல்லும்வழியில்கழுத்துசங்கிலி(41\2பவுண்) சிறிய கைபையுடன் 22.11.2017 புதன் கிழமை அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
(லீலா)சங்குவேலி தெற்கு, மானிப்பாய்
0779149020

## வடக்கிலும் திறமையான வீரர்கள் இருக்கின்றனர்

தற்போது இப்படித் தெரிவிக்கிறார்

முன்னாள் அமைச்சர் அளுத்கமகே

கொழும்பு, நவ. 24

"வடக்கில் திறமையான வீரர்கள் உள்ளனர். அவர்களுக்கு வாய்ப்புக்கள் கொடுக்கப்படவேண்டும். கிளிநொச்சியில் அமைக்கப் பட்டுவரும் விளையாட்டரங்கைக்கூட இன்னமும் நிர்மாணித்து முடிக்கவில்லை" இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருமான மகிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி அமைச்சர் அதிகாரிகளினதும் இராஜாங்க அமைச்சரினதும் ஆலோசனைகளை கேட்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அகில விராஜ் காரியவசம் தலைவராக வேண்டுமாயின் அனைவரினதும் ஆலோசனையையும் கேட்க வேண்டும். கல்வி அமைச்சரே நீங்கள் தலைமை அமைச்சராக வேண்டாம்.

தற்போது கிரிக்கெட் பின்னடைவைச் சந்தித்துள்ளது. மதத்துக்குப் பின்னால் பற்று வைத்தது கிரிக்கெட் மீதாகும். தற்போது கிரிக்கெட்டை பார்க்க வருபவர்களின் எண்ணிக்கையும் குறைவாகும். இது தொடர்பில் சிறப்பு அவதானம் செலுத்த வேண்டும்.

கிளிநொச்சி விளையாட்ட ரங்கை நான் நீக்கியதாக குற்றம் சுமத்துகின்றனர். வடக்கில் திறமையான வீரர்கள் உள்ளனர். தற்போது கிளிநொச்சி விளையாட்டரங்கை இன்னும் நிர்மாணிக்கவில்லை. இந்த விளையாட்டரங்கை நிர்மாணிக்க துரிதப்படுத்த வேண்டும். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். இல்லையேல் சிங்களப் பகுதியில் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதாகக் கூறுவர் - என்றார். (ம-5.31)




# ரியல்மட்ரிட் அணி அசத்தல் ஆட்டம்



லாலிகா தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து எபோயல் அணி மோதியது. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் லூக்கா ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 41ஆவது நிமிடத்தில் நாச்சோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். பென்சிமா 43ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரியல் மட்ரிட். 46ஆவது நிமிடத்தில் பென்சிமாவும், 49ஆவது, 51ஆவது நிமிடங்களில் ரொனால்டோவும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

வாடகைக்குத் தேவை
யாழ். நகரப் பகுதியில் Restorent நடத்துவதற்கு இடம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 077 792 3823, 077 6668 802

O/L 2017 கல்விக் கருத்தரங்கு
(க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கானது)
சனி (25.11.2017)
விஞ்ஞானம் A.சியாமளரூபன் - 8.30 - 11.30
ஆங்கிலம் M.துசீபன் - 12.00 - 2.00
தமிழ் N.நித்தி - 2.30 - 6.00
ஞாயிறு (26.11.2017)
வரலாறு R.S.சந்திரன் 8.30 - 12.00
கணிதம் K.உமாகரன் 2.30 - 6.00
இடம் : TECHNO WORLD
கட்டணம் .100 /= ஒருபாடம்
077 017 5346
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்.

இலங்கை திட்டமிடல் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு
2018ஆம் ஆண்டின் முதலாம் காலண்டிற்குள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் திட்டமிடல் நிகழ்வுசார்ந்த ஆய்வு மற்றும் கிரகித்தல் ஆகிய மூன்று தலைப்புக்களிலும் நுட்ப ரீதியில் நவீன விடயங்களையும் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் நடைமுறை ஆதாரங்களுடன் இணைத்து தற்கரீதியாக பதிலளிக்கப்பட வேண்டும். என்றே எதிர்பார்க்கபடுவதனால் அத்தகைய வழிகாட்டலை வழங்கக்கூடிய கருத்தரங்கு திட்டமிடலில் 20 வருட அனுபவமுள்ளவர்களால் 12.11.2017 முதல் வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை நடாத்தப்பட்டுவருகிறது.
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். T. P : 077 4696 695

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.